பக்கங்கள்: பன்னிரண்டு + VI = 18

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 சித்திரை 22 செவ்வாய்க்கிழமை (05.05.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 160

# கனடா விடுத்த போர் நிறுத்தக் கோரிக்கையும் நிராகரிப்பு!

## தாம் வகுத்த திட்டப்படி செயற்படவே அரசாங்கம் விரும்புவதாகக் கூறுகிறார் கொழும்பு வந்து திரும்பிய பெவ் ஓடா



ஒட்டாவா, மே 5

இலங்கையின் வடக்கே, முல்லைத்தீவில் போர்ப் பிரதேசத்தில் சிக்குண்டுள்ள ஐம்பதினாயிரத்துக்கும் அதிகமான மக்கள், பாதுகாப்பான பகுதிக்குள் செல்வதற்கு வசதியாக போர் நிறுத்தம் ஒன்றை நடைமுறைப்படுத்துமாறு கனேடிய அரசாங்கம் விடுத்த கோரிக்கையையும் கொழும்பு அரசு நிராகரித்துவிட்டது.

★ இலங்கை அரச தரப்பினர் போர் நிறுத்தத்தின் அவசியம் குறித்து சொன்னவற்றை வெகு அடக்கமாகக் கேட்டனர். ஆனால் அது தொடர்பாக கருத்துக் கூற மறுத்துவிட்டனர் -

★ இப்போது தான் இவ்விடயத்தில் பெரும் விவகாரமே தோன்றியுள்ளதாக நான் கருதுகிறேன். அவர்கள் தாம் வகுத்த திட்டத்தை விட்டுக்கொடுக்காமல் அதன் பிரகாரம் செயற்படவே விரும்புகின்றனர் என்பதனை உணரமுடிந்தது -

நேற்றுக் கொழும்பு சென்று திரும்பிய சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் பெவ் ஓடா இவ்வாறு தெரிவித்தார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர் குழு நலன்புரி நிலையங்களுக்கு இன்று விஜயம்

கொழும்பு, மே5

இலங்கையின் வடக்கு மோதல்களால் பாதிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான மக்களின் மனிதாபிமானப் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடுவதற்காக கொழும்பு வந்துள்ள பிரிட்டிஷ் நாடாளுமன்ற (12 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் நேற்றிரவு விமான எதிர்ப்பு ஒத்திகை

கொழும்பு, மே 05

கொழும்பு நகரில் விமான எதிர்ப்பு ஒத்திகையொன்று விமானப்படையினரால் நேற்றிரவு நடத்தப்பட்டது என அறியமுடிந்தது. இதனால், மக்கள் மத்தியில் பதற்றம் ஏற்பட்டதெனவும் தெரிவிக்கப்பட்டது. (12 ஆம் பக்கம் பார்க்க)

# போர் நிறுத்தம் கொண்டுவர அனுசரணைப் பணி செய்யுங்கள்!

## ரவிசங்கர் குருஜியிடம் புலிகள் கோரிக்கை



புதுடில்லி, மே 05

இலங்கையில் போர் நிறுத்தம் ஒன்றைக் கொண்டு வருவதற்கு அனுசரணைப் பணிபுரியுமாறு இந்தியாவின் ஆன்மீகத் தலைவரும் வாழும் கலை நிறுவனத்தின் ஸ்தாபகருமான ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜியிடம் விடு தலைப் புலிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

விடுதலைப்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் நேற்று குருஜியுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். அப்போதே இந்தக் கோரிக்கையை அவர் முன் வைத்தார் என்று இந்தியச் செய்தி ஏஜென்சிகள் தகவல் வெளியிட்டுள்ளன. (12 ஆம் பக்கம் பார்க்க)

# பாதுகாப்பு வலயத்தில் நடைபெறும் மோதல்களில் கனரக ஆயுதங்களும் தாராளமாகப் பாவனையில்!

## கடந்த ஒரு வாரத்தில் மக்கள் வெளியேறி வரவில்லை

நியுயோர்க், மே 5

முல்லைத்தீவு பாதுகாப்பு வலயத்தில் நடைபெற்று வரும் இராணுவ நடவடிக்கை குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான விவகாரங்களுக்கான இணைப்பு அலுவலகம் (ஓ.சி.எச்.ஏ) நேற்று வெளியிட்ட அறிக்கையில் தனது கவலையை தெரிவித்துள்ளது.

அரசாங்கப் படைகளுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையே நடைபெற்றுவரும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## மாணவி கொலையைக் கண்டித்து ஹர்த்தால்

## மட்டு. நகரில் இயல்பு நிலை முடக்கம்!

கொழும்பு, மே 05

மட்டக்களப்பு கோட்டமுனை கனிஷ்ட வித்தியாலய மாணவி பாடசாலைக்குச் சென்றிருந்தவேளை கடத்தப்பட்டுப்படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து நேற்று மட்டக்களப்பு மாவட்டத்தில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. இதன் காரணமாக மாவட்டத்தின் அநேக பிரதேசங்களில் இயல் புநிலை பாதிக்கப்பட்டது. (11 ஆம் பக்கம் பார்க்க)

# வன்னி மோதலில் பலியானவர்களின் விவரங்களை ஐ.நா. பகிரங்கப்படுத்தவில்லை

## கொழும்பிலுள்ள தூதரகம் மறுப்பு

கொழும்பு, மே 05

மோதல்கள் காரணமாக வன்னியில் கொல்லப்பட்ட பொதுமக்களின் எண்ணிக்கை குறித்த விவரங்கள் அடங்கிய ஆவணத்தை தான் ஒரு போதும் பகிரங்கப்படுத்தவில்லையென கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் சபை அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஐ.நா. அலுவலகத்தை மேற்கோள்காட்டி வெளியான புள்ளி விவரங்களை நிராகரித்த இலங்கை அரசு இது குறித்து கடும் எதிர்ப்பை தெரிவித்ததன் பின்னணியிலேயே ஐ.நாவின் கொழும்பு அலுவலகத்தின் இந்த அறிக்கை (11 ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளவத்தையில் 12 தமிழர்கள் கைது

கொழும்பு, மே 05

கொழும்பு - வெள்ளவத்தை பகுதியில் ஞாயிற்றுக்கிழமை இரவு மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது சந்தேகத்தின் (12 ஆம் பக்கம் பார்க்க)

க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கென உதயன் தனியாக வழங்கும் 6 பக்கங்கள் கொண்ட இலவச இணைப்பிதழ் உள்ளே



இப்போது டயலொக் CDMA யாழ்ப்பாணத்திலும்

டயலொக் CDMA முற்கொடுப்பனவு இணைப்பு

ரூ 5999/- மட்டுமே

● இலவச IDD இணைப்பு ● செக்கன் அடிப்படையிலான கட்டணங்கள்

● ஆரம்பக் கட்டணம் எதுவுமில்லை ● Kit Ez reload ஊடான ரீலோட் வசதி

வாடிக்கையாளர் சேவை இலக்கம் 011 7 100 100

Dialog CDMA homefone இல்லத்தின் அதிர்ஷ்டம்!

மக்கள் மனம் ... தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா வல்லரசாக உருவெடுக்க அணுகுண்டு தயாரிக்க வேண்டும்!

## அத்வானி கூறுகிறார்



புதுடில்லி, மே 5

இந்தியா வல்லரசாக வருவதற்கு உடனடியாக அணுகுண்டு தயாரிக்க வேண்டும் - என்று பா.ஜ.கவின் பிரதமர் வேட்பாளர் எல்.கே. அத்வானி கூறினார்.

டில்லியில் நடந்த தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு பேசும்போதே அவர் இதனைக் கூறினார்.

மற்றவர்கள் நம்மை விமர்சித்தாலும் பா.ஜ.க. எப்போதுமே அணுகுண்டு தயாரிப் பதை ஆதரித்து வந்திருக்கிறது. 1961, 1971, 1999 ஆகிய ஆண்டுகளில் நாம் பாகிஸ்தானை தோற்கடித்தோம். இதே போன்ற நிலையில் சீனாவுடன் மோத நேர்ந்தால் இந்தியாவிடம் கட்டாயம் அணுகுண்டு இருக்கவேண்டும். அப்போது தான் 1952ஆம் ஆண்டு இந்திய - சீனப் போரின் போது ஏற்பட்ட தோல்வி இல்லாமல் பார்த்துக் கொள்ள முடியும்.

அணுகுண்டு தொடர்பாக 1964ஆம் ஆண்டு பாரதீய ஜனசங்கம் வாரணாசியில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. அப்போது அமெரிக்கா கோபமாக இருக்கிறது என நம்மை விமர்சனம் செய்தார்கள். 1998ஆம் ஆண்டு வாஜ்பாய் தலைமையிலான பா.ஜ.க. ஆட்சியமைந்த சில நாள்களில் பொக்ரானில் அணுகுண்டு வெடிப்புச் சோதனை செய்யப்பட்டது.

இந்தியா முன்னேற வேண்டும் என்றால், முக்கியமான முடிவுகளை எடுக்க வேண்டும். அமெரிக்கா என்ன நினைக்குமோ என்ற சிந்தனை இதில் தவிர்க்கப் படவேண்டும். வாஜ்பாய் தலைமையிலான பா.ஜ.க. 6 ஆண்டுகள் நாட்டைச் சிறப்பாக ஆட்சி செய்தது.

இந்தத் தடவை பா.ஜ.க. மீண்டும் ஆட்சியைப் பிடிக்கும். 300 இடங்களுக்கும் குறையாமல் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெறும் - என்றார்.

## தொண்டர் ஆசிரியர்களுக்கு இன்று கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 5

தொண்டர் ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று காலை 8 மணிக்கு ஆரியகுளம் சந்தியில் உள்ள புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தொண்டர் ஆசிரியர்களுக்கான நியமனங்களை உறுதிப்படுத்துவது தொடர்பாக சமூக நலத்துறை மற்றும் சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் கலந்துரையாடவிருப்பதால் சகல தொண்டர் ஆசிரியர்களையும் ஒன்று கூடுமாறு தொண்டர் ஆசிரியர் சங்கம் கேட்டுள்ளது.

# வாக்காளர்களுக்குப் பணம் விநியோகம்: மதுரையில் 15 பேருக்கு அரிவாள் வெட்டு!

## அ.தி.மு.க. கூட்டணிக் கட்சிகள் வீதி மறியல்

மதுரை, மே 5

மதுரையில் வாக்காளர்களுக்குப் பணம் கொடுக்கப்பட்டது என மோதல் ஏற்பட்டது. 10பேருக்கு அரிவாள் வெட்டு விழுந்தது. இதைக் கண்டித்து அ.தி.மு.க. கூட்டணிக் கட்சிகள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டன.

மதுரை நாடாளுமன்றத் தொகுதியில் அனல் பறக்கும் பிரசாரம் நடந்து வருகிறது. இந்த நிலையில், நேற்றுமுன்தினம் நள்ளிரவில் மதுரை தொகுதிக்குப்பட்ட பகுதிகளில் வாக்காளர்களுக்குச் சிலர் பணம் கொடுத்து வருகின்றனர் எனத் தகவல் பரவியது.

இந்தத் தகவல் அந்தப் பகுதியிலிருந்த அ.தி.மு.க., மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மற்றும் கூட்டணிக் கட்சித் தொண்டர்களுக்கு பரவியது. இதனால் அவர்கள் திரண்டு வந்து சிலரைப் பிடித்தனர். மதுரை நகரில் மட்டும் மொத்தம் 10க்கும் மேற்பட்ட நபர்களைப் பிடித்து பொலிஸில் ஒப்படைத்தனர்.

அதேபோல் மதுரை மாவட்டம் கொட்டாம்பட்டி அருகே உள்ள கம்பூர் கிராமத்தில் வாக்காளர்களுக்கு பணம் கொடுத்தனர் என அலாவுதீன், முஸ்தபா என்ற 2 பேர் பிடிபட்டனர். அவர்களிடம் இருந்த ரூ.16 ஆயிரம் பணம் கைப்பற்றப் பட்டது.

மதுரை நகரில் வாக்காளர்களுக்குப் பணம் கொடுப் பதைத் தடுத்த அ.தி.மு.க. மற்றும் கம்யூ னிஸ்ட் கட்சித் தொண்டர்கள் மீது கடும் தாக்குதல் நடத்தப்பட்டது. சில பகுதிகளில் இரு தரப்பினரிடையே மோதல் ஏற்பட்டது.

கரிமேடு பகுதியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ஐவருக்கு சரமாரி அரிவாள் வெட்டு விழுந்தது.

இதேபோல் அ.தி.மு.கவைச் சேர்ந்த உதய குமார், செந்தில்குமார், நாகேந்திரன், கருப்பு, வெங்கடேஷ், மாரிமுத்து, மீன்பாண்டி ஆகியோர் தாக்கப்பட்டனர். மொத்தம் 15க்கும் மேற்பட்டோர் வெட்டுக்காயங்களுடன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதற்கிடையில் வாக்காளர்களுக்குப் பணம் கொடுத்தவர்களை உடனடியாகக் கைது செய்யக் கோரியும், அ.தி.மு.க. மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தொண்டர்களை தாக்கியவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் மதுரை நகரப் பொலிஸ் கட்டுப்பாட்டு அறை முன்பு அ.தி.மு.க. கூட்டணிக் கட்சியினர் நேற்று முன்தினம் காலை 6 மணியளவில் திடீர் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# 7ஆம் திகதி 4ஆம் கட்ட வாக்குப்பதிவு 80 தொகுதிகளில் இன்று பிரசாரம் ஓய்வு

புதுடில்லி, மே 5

நான்காம் கட்டமாக நாளை மறுதினம் 7ஆம் திகதி வாக்குப்பதிவு நடக்கவுள்ள 85 தொகுதிகளில் இன்று மாலையுடன் அனல் கிளப்பிக் கொண்டிருக்கும் பிரசாரம் முடிவுக்கு வருகிறது.

மக்களவைக்கு 5 கட்டமாகத் தேர்தல் நடக்கிறது. இதுவரை நடந்து முடிந்த 3 கட்டத் தேர்தலில் 372 தொகுதிகளில் வாக்குப்பதிவு முடிந்துவிட்டது. 4ஆம் கட்டமாக 7ஆம் திகதி 85 தொகுதிகளிலும், 5ஆவது மற்றும் இறுதிக் கட்டமாக 86 தொகுதிகளில் 13ஆம் திகதியும் வாக்குப்பதிவு நடக்கிறது. 4ஆம் கட்டமாக வாக்குப் பதிவு நடக்க உள்ள தொகுதிகளில் பிரசாரம் தீவிரம் அடைந்துள்ளது. கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாமல் தலைவர்கள் தீவிர பிரசாரம் செய்து வரு கின்றனர்.

உத்தரப்பிரதேசம், மேற்கு வங்கம், பீகார், டில்லி, அரியானா, காஷ்மீர், ராஜஸ்தான், ஆகிய மாநிலங்களில் 85 தொகுதிகளில் வாக்குப்பதிவு நடக்கவுள்ளது. காங்கிரஸ் சார்பில் பிரதமர் மன்மோகன் சிங் டில்லியிலும், தலைவர் சோனியா காந்தி அரியானாவிலும், பொதுச் செயலாளர் ராகுல் காந்தி ராஜஸ் தானிலும் நேற்றுமுன்தினம் தீவிர பிரசாரம் மேற்கொண்டனர். பாரதிய ஜனதாக் கட்சி சார்பில் பிரதமர் வேட்பாளர் அத்வானி டில்லியிலும், குஜராத் முதல்வர் நரேந்திரமோடி, பீகாரிலும் தீவிர பிரசாரம் செய்தனர்.

## உபகரணம் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், மே 5

இலங்கை தேசிய சர்வோதய சிரமதான சங்கத்தால் நடத்தப்பட்ட தொழிற் பயிற்சிகளை முடித்தவர்களுக்கான உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நாளை புதன்கிழமை மு.ப 11 மணிக்கு சர்வோதய யாழ். மாவட்ட நிலை யத்தில் இடம்பெறவுள்ளது.

சர்வோதய யாழ்.மாவட்ட இணைப்பாளர் அ.கி.சிவசுப்பிரமணியம் தலைமையில் இடம் பெறும் இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக சர்வோதய தலைவர் டாக்டர் ஏ.ரி.அரியரட்ணாவும் விசேட விருந்தினராக யாழ். அரச அதிபர் க.கணேஷும் கலந்து கொள்வார்கள்.

## மரண அறிவித்தல்

### திருமதி தேவி ராமமூர்த்தி

நீர்வேலி வடக்கு, குறுக்கு றோட்டைச் சேர்ந்த திருமதி தேவி ராமமூர்த்தி நேற்று(04.05.2009) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆயுள்வேத வைத்தியர் செல்லப்பா ராமமூர்த்தியின் அன்பு மனைவியும் சறோஜினி தேவி, கணேசமூர்த்தி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் அருந்தவநாதன்(இந்தியா), மகேந்திரன் (ஹொலண்ட்), சந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் சிறியதாயும் சின்னத்தங்கம், கதாயோகி(ஹொலண்ட்), விமலாதேவி, விஜயரத்தினம், விஜிதா(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(05.05.2009) செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நீர்வேலி வடக்கு சிவியாக்காடு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குறுக்கு றோட்,
நீர்வேலி வடக்கு,நீர்வேலி.

தகவல்:
விஜயரத்தினம்(மருமகன்).


**THE ROYAL COLLEGE OF JAFFNA**

சுலபமாக ஆங்கிலத்தில் கதைக்கப்பயில By: ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி Dip/Cer IN ENGLISH AND SCIENCE (London) 426(302)K.K.S வீதி. யாழ்ப்பாணம், பிளாக் வீதி, சங்கானை.


## தவறிவிட்டது

மீசாலை கிழக்கு,மீசாலை என்னும் முகவரியைச் சேர்ந்த யோகசிங்கம் நிர்மலா என்பவரது தேசிய அ.அட்டை (847181850V) விசேட அடையாள அட்டை (091004702) என்பன 02.05.2009 அன்று தவறிவிட்டன.

கண்டெடுத்தவர்கள் தயவு செய்து பூங்கனிச் சோலை, முடமாவடி அல்லது லக்சுமி காகிதாதிகள் இல.02, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.


மீண்டும் ஓர் புதிய பிரிவு...

பொருளியல்

R.S. சந்திரகுமார் (B.Com)

| 2010 A/L | 2011 A/L |
|---|---|
| பேரினப் பொருளாதாரம் | பொருளியல் அறிமுகம் |

07.05.2009 (வியா) 5P.M

ஐடியல் அக்கடமி

யாழ்நகர். மாணிப்பாய்.


## 21 ஆம் நாள் நினைவு தினமும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
10 - 09 - 1939



மறைவு
16 - 04 - 2009

### அமரர் சின்னப்பு வேன்முருகோன்பிள்ளை

(ஓய்வுபெற்ற உதவிப் பிரதேச செயலர், நல்லூர்)

கடந்த (16.04.2009)அன்று இறைபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் உதவி புரிந்தோருக்கும் தொலைபேசியினூடாக அனுதாபம் தெரிவித்தோருக்கும் அஞ்சலி செலுத்தி யோருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, நாளை(06.05.2009) புதன்கிழமை முற்பகல் 11 மணி யளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்)

70/1, ஓட்டுமடம் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## ஏலவிற்பனை அறிவித்தல்

### சாவகச்சேரி தேசிய சேமிப்பு வங்கியில் மீட்கப்படாத அடகு நகைகளின் ஏல விற்பனை

தேசிய சேமிப்பு வங்கி சாவகச்சேரிக் கிளையில் 31.03.2008 வரை அடகு வைத்து 31.03.2009 வரைக்கும் மீட்கப்படாத அல்லது வட்டி செலுத்தப்படாத அடகு நகைகள் பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஏல விற்பனைத் திகதி: 30.05.2009 சனிக்கிழமை காலை 8.30
இடம்: 141, V.M.K. கட்டடம், கண்டி வீதி, சாவகச்சேரி(கிளையில்).

**ஏலவிற்பனையை இரத்துச் செய்யும், ஒத்திவைக்கும் உரிமையை வங்கி கொண்டுள்ளது.**

உதவிப் பொதுமுகாமையாளர் (கடன்) - கொழும்பு -3
சார்பாக முகாமையாளர், சாவகச்சேரி.

NSB

## மரண அறிவித்தல்

### திருமதி முத்தையா பாக்கியம்



கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் இணுவில், மஞ்சத்தடியை வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா பாக்கியம் 01.05.2009 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமு - சின்னக்குட்டி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற முத்தையாவின் அன்பு மனைவியும் இராசேந்திரம், மகேந்திரம், யோகேந்திரம், இரஞ்சினிதேவி, லிங்காதேவி, பாலச்சந்திர, பாஸ்கரன், உதயகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.05.2009) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 4 மணியளவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மஞ்சத்தடி வீதி,
இணுவில்.

தகவல்:
பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933. தொலைநகல்.: 222 9944

# வட்டார மட்டத்திற்கு அதிகாரப் பகிர்வு வந்தாலும் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை

இலங்கைத் தமிழர்களின் இனப்பிரச்சினை தொடர்பான விடயம் இன்று சர்வதேச விவகாரமாகி விட்டிருக்கின்றது. இதைக் கையாள்வது தொடர்பில் கொழும்பு ஆட்சிப் பீடத்தின் நிலைப்பாடு காலங்காலமாக ஒன்றுதான்.

அடக்கப்பட்டு, நியாயமான உரிமைகள் நிராகரிக்கப்பட்டு, கௌரவமான வாழ்வு மறுக்கப்பட்டு, கொடூரப் போராலும் வன்முறைகளாலும் பேரவலப்பட்டு அந்தரிக்கும் ஈழத் தமிழ் இனத்துக்கு நியாயம் செய்யும் எண்ணமோ, நீதியான தீர்வை வழங்கும் தாராளமோ கொழும்பு ஆட்சிப்பீடத்துக்குக் கிஞ்சித்தும் கிடையாது என்பதும் தெளிவு.

தேசிய இனப்பிரச்சினை விடயத்துக்கான தீர்வு விடயத்தில் சிறுபான்மையினத்தவரான தமிழர்களின் பேரம் பேசும் வலுவை இராணுவ, அரசியல் ரீதியாக சிதைத்து, அழித்த பின்னர், உருப்படியற்ற - உப்புச்சப்பற்ற - திட்டம் ஒன்றைத் தனது பிச்சையாகத் தமிழருக்குத் தூக்கிப் போடுவதும், நலிவுற்றிருக்கும் தமிழினம் வேறு வழியின்றி அதைத் தலையாட்டி ஏற்றுக்கொள்ளும் நிலையை ஏற்படுத்துவதும் கொழும்பின் தந்திரோபாயம் என்பதும் வெளிப்படை.

பிரிட்டிஷ் காலனித்துவப் பிடியிலிருந்து இலங்கைத் தீவு விடுபட்ட காலம் முதல் இனப்பிரச்சினைத் தீர்வுக்காக எடுக்கப்பட்ட - மேற்கொள்ளப்பட்ட - எத்தனங்களின் போதெல்லாம், கொழும்பு ஆட்சிப் பீடத்தின் இலக்கும், நோக்கும், போக்கும் இந்த அடிப்படையில்தான் அமைந்து இருந்தன என்பது தமிழர்களின் அனுபவப் பாடமாகும்.

தமிழர் தரப்பின் பேரம் பேசும் வலுவை அரசியல், இராணுவ நடவடிக்கைகள் மூலம் சிதறடித்து சின்னாபின்னமாக்கியிருப்பதாகக் கருதும் பேரினவாதம், இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பிச்சைத் தீர்வை விட்டெறியத் தயாராகின்றது. தூங்கி, அடங்கிப் போய்க்கிடந்த 'அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு' என்ற செப்படி வித்தையை மீண்டும் இயக்குவிக்கக் கொழும்பு இப்போது எடுத்திருக்கும் முயற்சியின் பின்னணி இதுதான்.

அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு என்பதே சுத்த மோசடி; வெறும் 'ஹம்பக்'!

அரசுத் தரப்பில் உள்ள கட்சிகளை விட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும், ஜனநாயக மக்கள் முன்னணியும் தான் மேலதிகமாக அதில் அங்கம் வகிக்கின்றன. அதுவும் ஜனநாயக மக்கள் முன்னணி கூட இப்போது இறுதிக்கட்டத்தில்தான் அதன் அமர்வுகளில் கலந்து கொள்கின்றது. இதைத் தவிர பிரதான எதிர்க்கட்சிகள் எவையும் அதில் இல்லை. ஐ.தே.கட்சி இல்லை. ஜே.வி.பி. இல்லை. நாடாளுமன்றத்தில் இலங்கைத் தமிழர்களை 95 வீதம் பிரதிநிதித்துவம். பிரதான எதிர்க்கட்சிகள் இல்லாத அந்தக் கட்டமைப்பை - அரசுத் தரப்பு ஏகோபித்த ஆதிக்கம் செலுத்தும் அந்த நிறுவகத்தை - 'அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள்' என்று சோடித்து உலகின் காதில் பூச்சுற்றப் பார்க்கின்றது கொழும்பு.

இலங்கைத் தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கான இணக்கத் தீர்வைக் காண்பதற்காகவே இந்த அமைப்பு என்கிறது கொழும்பு அரசு. அதில் பிரதான எதிர்க்கட்சிகள் மட்டுமல்ல, இனப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட பிரதான தரப்பான தமிழர்களின் பிரதிநிதிகளுக்கே இடமில்லை. அப்படியிருக்க, இதனை 'அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு' என்று காட்டி அதன் ஊடாகத் தீர்வுக்கான முயற்சிகளில் ஈடுபடுவதாகக் கொழும்பு தம்பட்டம் அடித்துக் கொள்வது, மணப்பெண் இன்றித் திருமணம் நடத்துவது போன்ற வேடிக்கையாகும்.

இந்தியாவின் தலையீட்டுடன் இருபத்தியிரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் கொண்டுவரப்பட்ட மாகாண சபைத் திட்டமும், அரசமைப்பின் 13 ஆவது திருத்தமும் கூட சரிவர நடைமுறைப்படுத்தப்படவில்லை. அவை எல்லாம் தங்களின் அபிலாஷைகளை - நீதி, நியாயமான எதிர்பார்ப்புகளை - நிறைவு செய்யவேயில்லை என்பதைத் தமிழர்கள் வெளிப்படையாகவும் உறுதியாகவும் தெளிவுபடுத்தி விட்டனர்.

நாடாளுமன்றில் நிறைவேற்றி, அரசமைப்புச் சட்ட அதிகாரம் கொடுக்கப்பட்ட 13 ஆவது திருத்தச் சரத்துக்களை இருபத்தியிரண்டு ஆண்டுகள் கழித்தும் நடைமுறைப்படுத்த வக்கில்லாத - விருப்பில்லாத - கொழும்பு இப்போது, இந்தியாவின் 'பஞ்சாயத்து ராஜ்' போன்ற - கிராம சபை மட்ட - அதிகாரப் பரவலாக்கல் குறித்துப் பிரஸ்தாபிக்கின்றது.

இலங்கைத் தமிழர்களின் ஏகோபித்த - பாரம்பரிய - பூர்வீக - தாயகத்தை வடக்கு, கிழக்காகத் துண்டாடி, மாகாணங்களாகப் பிரித்து, மாகாண மட்ட அதிகாரப்பகிர்வு என்று முன்னர் கதைவிட்ட கொழும்பு, இப்போது மாவட்டங்களை விட்டும் கீழிறங்கி, பிரதேச செயலகப் பிரிவு ரீதியிலும், கிராமசபை மட்டத்திலும் அதிகாரத்தைப் பகிர்வது குறித்துப் பிரஸ்தாபிக்கின்றது.

தனது போரியல் தீவிரம் மற்றும் யுத்த வெறிப் போக்கின் மூலம் தமிழர் தரப்பின் இராணுவப் பலத்தையும், தனது கெடுபிடி ஆட்சி மூலம் தமிழர்களின் அரசியல் அதிகார வலுவையும் சிதைத்து, அழித்து விட்டதாகக் கருதிப் பெருமிதம் கொள்ளும் கொழும்பு ஆட்சிப்பீடம், தமிழர்களுக்கு எதிரான தனது அதிகாரக் கிடுக்குப் பிடியை மேலும் இறுக்கி, அவர்களை நசித்துக்கொண்டு, இப்போது தான் பேசும் கிராமிய மட்ட அதிகாரப் பரவலாக்கலை, மேலும் நீர்த்துப் போகப் பண்ணி, வட்டாரமட்ட அதிகாரப்பகிர்வு குறித்துப் பிரஸ்தாபித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

தனது திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள், கொடூரமான படை நடவடிக்கைகள் ஆகியவை மூலம் நடைமுறைச் செயற்பாட்டிலும் -

நீதிமன்ற மற்றும் திட்டமிட்ட நிர்வாகச் செயற்பாடுகள் மூலம் சட்ட ரீதியிலும் -

ஈழத் தமிழர்களின் பூர்வீகத் தாயகத்தைத் துண்டாடிப் பிரித்து நிற்கும் பேரினவாதம், அத்துண்டுபடுதலை நிரந்தரமாக நிலை நிறுத்தி, ஸ்திரப்படுத்துவதற்கான தந்திரோபாய யோசனையையே இப்போது தீர்வுத் திட்டம் என்ற பெயரில் முன்னெடுக்கக் காய் நகர்த்துகின்றது. இந்தக் குள்ளநரித் திட்டத்துக்குத் துணைபோகும் சுயநலத் தமிழர் தரப்புகள் தாங்கள் தமது இனத்துக்கு இழைக்கப் போகும் வரலாற்றுத் தவறையும் அதன்மூலம் சம்பாதிக்கப்போகும் சரித்திரப் பழியையும் ஒரு தடவை சிந்தித்துப் பார்ப்பது நல்லது.

# இடைத்தங்கல் முகாம்களுக்குச் செல்ல அரச சார்பற்ற நிறுவனங்களை அனுமதிக்குக

## இலங்கை அரசிடம் இந்தியா கோரிக்கை

கொழும்பு, மே 5

இடைத்தங்கல் முகாம்களில் அரச சார்பற்ற நிறுவனங்கள் சேவையாற்ற அனுமதியளிக்கப்பட வேண்டுமென இந்தியா கோரிக்கை விடுத்துள்ளது.

இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள பொதுமக்கள் பெரும் அவலங்களை எதிர்நோக்கி வருவதாகவும், அவர்களுக்குத் தேவையான நிவாரணங்களை வழங்க அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்களுக்கும் அனுமதி யளிக்கப்பட வேண்டும் எனவும் இந்தியா இலங்கை அரசிடம் கோரிக்கை விடுத் துள்ளது.

இவ்வாறு அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் இடைத்தங்கல் முகாம்களுக்குச் செல்ல அனுமதி வழங்குவதன் மூலம் பெரும் எண்ணிக்கையிலான அகதிகள் நன்மையடைவார்கள் என இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அலோக் பிரசாத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பு உள்ளிட்ட அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு மக்கள் பாதுகாப்பு வலயம், பிரதேசம் மற்றும் இடைத்தங்கல் முகாம்களுக்குச் செல்ல அனுமதியளிக்கப்பட வேண்டுமென சர்வதேச சமூகம் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இடைத்தங்கல் முகாம்களுக்குச் செல்ல தொண்டு நிறுவனங்களுக்கு அனுமதியளிக்கப்பட வேண்டுமென இந்தியா முதல் தடவையாக இலங்கையிடம் கோரியுள்ளது.

# வெளிநாடுகளில் உள்ள இலங்கை தூதரகங்களுக்கு விசேட பாதுகாப்பு

கொழும்பு, மே 5

வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களுக்கு விசேட பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக செயற்படுவோர் உள்ள நாடுகளில் உள்ள உயர்ஸ்தானிகர் அகங்கள் மற்றும் தூதரகங்களுக்கு விசேட பாதுகாப்பு அளிக்கப்படவுள்ளது.

விசேட பாதுகாப்பு வழங்குவது குறித்து சம்பந்தப்பட்ட நாடுகளுடன் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நோர்வேக்கான இலங்கைத் தூதரகம் தாக்கப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து சில வெளிநாட்டு தூதரகங்களுக்கான பாதுகாப்பு ஏற்கனவே பலப்படுத்தப்பட்டுள்ளது.

தேவையற்ற வகையில் தூதரக அதிகாரிகள் வெளியில் செல்வதனைத் தவிர்க்குமாறு இலங்கை அரசாங்கம் கோரியுள்ளது.

(50)

# போர்ப் பகுதியில் சிக்குண்டுள்ள பொதுமக்களுக்கு உதவ சர்வதேச உதவி நிறுவனங்களை அனுமதிக்கவேண்டும்

## அவுஸ்திரேலிய மருத்துவ அமைப்பு கோரிக்கை

கொழும்பு, மே, 05

இலங்கையில் உடனடியாக - நிரந்தரமான போர் நிறுத்தம் மேற்கொள்ளப்படவேண்டும். சர்வதேச உதவி நிறுவனங்கள் இடம்பெயர்ந்த மக்களுக்கும் காயமடைந்த மக்களுக்கும் உதவி செய்ய அனுமதிக்கப்படவேண்டும்.

அப்பகுதியில் என்ன நடைபெறுகிறது என்பதை அறிய சர்வதேச கண்காணிப்பாளர்களும் ஊடகவியலாளர்களும் அனுமதிக்கப்படவேண்டும்.

- இவ்வாறு அவுஸ்திரேலியாவில் இயங்கும் 'போரிலிருந்து மக்களைக் காப்பதற்கான மருத்துவ அமைப்பு' தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பு விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு :-

இலங்கையில் போர் நடைபெறும் பகுதிக்குள் அகப்பட்டுள்ள அப்பாவி மக்கள் மிகுந்த நெருக்கடிக்குள்ளாகியுள்ளதைப் போரிலிருந்து மக்களைக் காப்பதற்கான மருத்துவ அமைப்பு அவதானித்து வருகிறது. அண்மையில் அதிகரித்துவரும் மோதல்கள் காரணமாக மிகக் குறுகிய பிரதேசத்தில் அகப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான மக்களுக்கும் மிகக் குறைந்தளவிலான மனிதாபிமான உதவிகளும், அதிலும் குறைந்தளவிலான மருத்துவ உதவிகளுமே கிடைக்கின்றன என அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இதன் காரணமாக பல பொதுமக்கள் இறந்துள்ளனர். ஐ.நா. அறிக்கையின்படி கடந்த மூன்று மாதங்களில் 6 ஆயிரத்து 500 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 14 ஆயிரம் பேர் படுகாயமடைந்துள்ளனர். இறந்தவர்களுள் நூற்றுக்கணக்கான சிறுவர்களும் அடங்குவர். மிக அண்மையில் இலங்கை அரசு போர்ப் பகுதிக்குள் செல்ல மனிதாபிமான விடயங்களைப் பார்வையிடும் ஐ.நாவின் குழுவினருக்கு அனுமதி மறுத்துள்ளது.

இந்த நிலைமைகள் போர்ப்பிராந்தியத்துள் அகப்பட்டுள்ள மக்கள் எதிர்நோக்குவதாகச் சொல்லப்படும் நெருக்கடிகளை விட இன்னும் அதிகமானவையாகும் என்பதைத் தெளிவுபடுத்துகின்றது.

இலங்கை இராணுவத்தினர் இரசாயன ஆயுதங்கள் உட்பட மனிதர்களுக்கெதிராகப் பயன்படுத்தப்பட முடியாத ஆயுதங்களைப் பயன்படுத்துகின்றனர் எனவும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இதன் காரணமாக ஒரு போர் நிறுத்தம் என்பது அவசியமானதாகும்.

உடனடியாகப் போரை நிறுத்தி மனித உயிர்களைப் பாதுகாக்குமாறு போரிலிருந்து மக்களைக் காப்பதற்கான மருத்துவ அமைப்பு இரண்டு தரப்பினரையும் கோருகிறது. குறிப்பாக எவ்வித தாமதமும் இன்றி அதை நடைமுறைப்படுத்துமாறும் அது இலங்கை அரசைக் கோருகிறது - என்றுள்ளது.

இவ்வறிக்கையின் பிரதிகள் அவுஸ்திரேலியப் பிரதமருக்கும், அவுஸ்திரேலியாவிலுள்ள இலங்கைத் தூதுவருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன எனவும் கூறப்படுகிறது. (சி)

# வடமராட்சிப் பிரதேசத்துக்கான தபால் சேவையில் தாமதம்

வடமராட்சி, மே.5

வடமராட்சிப் பிரதேசத்திற்கான உள்ளூர் தபால் சேவை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திற்கும், ஏனைய புறநகர்ப் பகுதிகளுக்கும் வடமராட்சிப் பிரதேசத்திலிருந்து தபாலகங்களில் சேர்க்கப்படும் தபால்கள் யாழ்ப்பாணத்திற்கும், ஏனைய புறநகர்ப் பகுதிகளுக்கும் மறுநாள் கிடைப்பதில்லை. மாறாக மூன்றாம் நாளே கிடைத்து வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னைய காலங்களில் குடாநாட்டின் எந்தப் பகுதியிலும் சேர்க்கப்படும் தபால்கள் மறுநாளே குடாநாட்டின் அனைத்து பகுதிகளிலும் கிடைத்து வந்தன.

ஆனால் ஊரடங்குச் சட்டம், பாதை மூடப்படுதல் ஆகிய காரணங்களைக் காட்டி குடாநாட்டில் உள்ள தபால் நிலையங்களில் தபால்களைச் சேகரித்து பொதி செய்து மறுநாள்தான் யாழ். பிரதம தபால் நிலையத்திற்கு அனுப்பிவைக்கப் பட்டு வருகின்றன.

இதனால் உள்ளூர் தபால்கள் மூன்றாம் நாளே உரியவரைச் சென்றடைகின்றன.

வடமராட்சிப் பிரதேசத்திலிருந்து தினமும் பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாணத்திற்கு எடுத்துச் செல்லப்படும் தபால்கள் பொதி செய்யப்பட்டு பஸ் வண்டிகள் மூலம் பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.பிரதம தபால் நிலையத்திற்கு அனுப்பிவைக்கப்படுகின்றன.

இந்த நடவடிக்யினால் தினமும் பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் வடமராட்சியில் பிரதான தபால் நிலையங்களிலோ அல்லது உப தபால் நிலையங்களிலோ சேர்க்கப்படும் குடாநாட்டுக்கான தபால்கள் மறுநாள் சென்றடைவதில்லை. அத்துடன் உபதபால் நிலையங்களில் தினமும் பிற்பகல் 2 மணிக்குப் பின்னரே தபால்கள் பொதி செய்யப்பட்டு பிரதான தபால் நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. அவை மறுநாள்தான் யாழ். பிரதம தபால் நிலையத்திற்கு அனுப்பிவைக்கப்படுகிறது.

பாதை தடுப்பு, ஊரடங்கு தபால் பொதிகளை எடுத்துச் செல்லும் இ.போ.ச. பஸ் வசதியின்மை போன்றவற்றால் குடாநாட்டுக்கான உள்ளூர் தபால் சேவை தாமதப்படுத்தப்படுகிறது.

இத்தாமதங்களை நீக்கி உள்ளூர் தபால் சேவைகள் உரிய காலத்தில் உரிய வேளையில் இடம்பெற யாழ். பிராந்திய தபால் திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் கோரியுள்ளனர். (50-236)

## நாளை

| | |
|---|---|
| சித்திரை 23 | 06.05.2009 |
| | புதன்கிழமை |
| திதி: | துவாதசி |
| | மு.ப. 10.07 வரை |
| நட்சத்திரம்: | அத்தம் |
| | மு.இ. 11.39 வரை |
| சுபநேரம்: | 04.26 - 05.56 |
| ராகுகாலம்: | 11.56 - 01.26 |

# யாழ். பஸ்நிலையம், ஆஸ்பத்திரியில் இலங்கை வங்கியின் புதிய சேவைகள்

## நாளை ஆரம்பமாகின்றன

யாழ்ப்பாணம், மே 05

இலங்கை வங்கியின் 70 ஆண்டு நிறைவை ஒட்டி யாழ்.நகரப் பகுதியில் இரு சேவைகளை நாளை புதன்கிழமை காலை வங்கியின் பிரதான கிளை ஆரம்பிக்கின்றது.

வங்கியின் வரவேற்பு கருமபீடம் ஒன்றை யாழ்.பஸ் நிலையம் முன்பாக காலை 9.30 மணிக்கு வங்கியின் உதவிப் பொது முகாமையாளர் ந.சிவரட்ணம் திறந்து வைப்பார்.

இதைத் தொடர்ந்து முற்பகல் 11 மணிக்கு யாழ்.போதனா வைத்தியசாலை வளாகத்தில் தன்னியக்க பணப் பரிமாற்று இயந்திர சேவை ஆரம்பித்து வைக்கப்பட விருக்கின்றது.

யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஏ. தேவநேசன் சேவையை ஆரம்பித்து வைப்பார். (1)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org






'டயலொக்' நிறுவனத்தால் பாடசாலைகளுக்கு கணனிகள் வழங்கும் நிகழ்வு நேற்று யாழ்.சிவில் நிர்வாக அலுவலகத்தில் இடம் பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

யாழ்.நகரக் கொமடோ கட்டளை அதிகாரி பிரிகேடியர் ஆர். குலத்துங்க, இரண்டாவது எஸ்.எல். எஸ்.ஆர். பிரிவு அதிகாரி மேஜர் ஜெயந்த ஜெயரத்தின, 20 ஆவது எஸ்.எல்.என்.ஜி. பிரிவு கட்டளை அதிகாரி மேஜர் டபிள்யூ. எம்.நிசங்க, யாழ்.சிவில் நிர்வாக அதிகாரி லெப்.கேணல் எஸ்.எம்.அனுரசேன ஆகியோர் அமர்ந்திருப்பதை முதலாவது படத்திலும் வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி பொன்னம்பலம், யாழ்.மத்திய கல்லூரி அதிபர் எஸ்.ஓங்காரமூர்த்தி ஆகியோரிடம் பிரிகேடியர் குலத்துங்க கணனிகளைக் கைய ளிப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரையும் பிரிகேடியர் குலதுங்க, வேம்படி மகளிர் கல்லூரி மாணவி ஒருவர் ஆகியோர் உரையாற்றுவதையும் அடுத்துள்ள படங்களிலும் காணலாம்.

(படங்கள்:லக்ஷ்மன்)

## மரண அறிவித்தல்

### பிரின்ஸ் செல்வதுரை செல்வச்சந்திரன்

மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த மருத்துவமனையின் முன்னாள் அறுவைச் சிகிச்சை நிபுணரும் மருத்துவ அத்தியட்சகரும் Channel Islands -Jersey பொது மருத்துவமனை அறுவைச் சிகிச்சை நிபுணருமான பிரின்ஸ் செல்வதுரை செல்வச்சந்திரன் அவர்கள் Channel Islands - Jerseyயில் 2009 மே முதலாம் திகதி காலமானார் என்பதை அறியத் தருகின்றோம்.

அன்னார் சாமுவெல் செல்வதுரை - உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியின் முன்னாள் அதிபர் ராசம்மா செல்வதுரை தம்பதியரின் அருமைப் புதல்வரும் பிருந்தாவின் அன்புக் கணவரும் பிரிந்தினி, சுதன், சசிகலா ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வராஜனின் சகோதரனும் சிலோஜினி, கருணா, ஆனந்தன், ரஞ்சி, ரூபன் ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரனும் ராஜேஷின் மாமாவும் ராணியின் அத்தானும் ஞானத்தின் மருமகனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை (08.05.2009) வெள்ளிக் கிழமை ஒரு மணிக்கு சன்னல் தீவுகளிலுள்ள செண்.ஜோர்சே தேவாலயத்தில் இடம் பெறும்.

தகவல்:
பிராங்க் நல்லையா.

## 'புவியியலாளன்' இதழ் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம். மே.5

யாழ். பல்கலைக் கழக புவியியற் கழகத்தின் 'யாழ்ப்பாண புவியியலாளன்' இதழ் 20 வெளியீட்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

புவியியற்கழகத் தலைவர் அ.ஜோன் மில்ரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் துணைவேந்தர் பேராசிரியர் நா. சண்முகலிங்கன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

வெளியீட்டுரையை பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை நிகழ்த்துவார். முதற் பிரதியை வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் ப. புஸ்பரட்ணம், பொருளியல்த் துறைத் தலைவர் ந. பேரின்பநாதன் ஆகியோர் பெற்றுக்கொள்வர்.

(203)

## இதய அஞ்சலி

### திருமதி பூரணம் சுப்பையா



எமது கனடா பழைய மாணவர் சங்க மகுட கலை விழாவின் கலை நிகழ்வுகளில் முன்னின்று பங்காற்றிய திருமதி நந்தினி ஜெகதீஸ்வரன், திருமதி குமுதினி ஸ்ரீகாந்தன் மற்றும் கனடாவில் வாழும் உமாசங்கர், கோபிசங்கர் ஆகியோரின் பாசமிகு தாயார்

### திருமதி பூரணம் சுப்பையா

இறைபதமெய்திய செய்தி கனடா வாழ் கொக்குவில் இந்து சமூகத்திற்கு பெரும் துயரைத் தந்துள்ளது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் திருமதி குமுதினி, திருமதி நந்தினி, உமாசங்கர், கோபிசங்கர் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*கொக்குவில் இந்துக்கல்லூரி*
*பழைய மாணவர் சங்கம்,*
*கனடா.*

(C/558322)

## தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் (வரையறுக்கப்பட்டது)

## கிளைக்குழு தெரிவுக்கான அறிவித்தல்

## 10.05.2009 ஞாயிற்றுக்கிழமை

| 10.05.2009 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணி | 10.05.2009 ஞாயிற்றுக்கிழமை பி.ப. ஒரு மணி | கிளைப் பொதுச்சபை கூட்டத்தின் தவிசாளர் பெயர் | கிளைப் பொதுச்சபைக் கூட்டம் நடத்தப்படும் இடங்கள் |
|---|---|---|---|
| கிளை 01 தெல்லிப்பழை | கிளை 09 கீரிமலை | பா.கலைச்செல்வி | பிரதேச செயலகம் வலி.வடக்கு, தெல்லிப்பழை. |
| கிளை 12 மாவிட்டபுரம் | கிளை 13 அரசடி வீதி மாவிட்டபுரம் | க.பாலகிருஸ்ணன் | பிரதேச செயலகம் வலி.வடக்கு, தெல்லிப்பழை. |
| கிளை 14 கொல்லன்கலட்டி | கிளை 41 கிளானை | இ.பாலச்சந்திரன் | பிரதேச செயலகம் வலி.வடக்கு, தெல்லிப்பழை. |
| கிளை 02 துர்க்காபுரம் | கிளை 25 மயிலிட்டி கிழக்கு | வே.பிரதீஸ்குமரன் | பிரதேச செயலகம் வலி.வடக்கு, தெல்லிப்பழை. |
| கிளை 28 பளை வீமன்காமம் | கிளை 29 வீமன் காமம் | வி.ஜெயந்தன் | பிரதேச செயலகம் வலி.வடக்கு, தெல்லிப்பழை. |
| கிளை 30 தையிட்டி | கிளை 31 ஊறணி | சி.சிறிதரன் | பிரதேச செயலகம் வலி.வடக்கு, தெல்லிப்பழை. |
| கிளை 35 கலட்டி | கிளை 38 மாங்கொல்லை | க.கமலநாதன் | பிரதேச செயலகம் வலி.வடக்கு, தெல்லிப்பழை. |
| கிளை 33 மடத்தடி | | சு.தர்சினி | பிரதேச செயலகம் வலி.வடக்கு, தெல்லிப்பழை. |
| கிளை 27 காங்கேசன்துறை | கிளை 26 மயிலிட்டி வடக்கு | அ.விமல்ராஜ் | பிரதேச செயலகம் வலி.வடக்கு, தெல்லிப்பழை. |
| கிளை34 ஆஸ்பத்திரியடி தெல்லிப்பழை | கிளை 37 ஊரங்குனை | சி.குணாளன் | பிரதேச செயலகம் வலி.வடக்கு, தெல்லிப்பழை. |
| கிளை 44 மயிலங்கூடல் | கிளை 08 இளவாலை | க.திசாகரன் | யா/இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம். |
| கிளை 36 வசந்தபுரம் | கிளை 07 கருகம்பனை | வை.கயிலைநாதன் | யா/இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம். |
| கிளை 43 சீந்திப்பந்தல் | | பா.சிறீகுமார் | கிளை 43 இன் கட்டடம் சீந்திப்பந்தல், இளவாலை. |
| கிளை 03 வவுணாவத்தை | | வி.சிவகுமார் | கிளை 03 இன் கட்டடம் வவுணாவத்தை, தெல்லிப்பழை. |
| கிளை 04 வராங்கொடை | கிளை 06 விழிசிட்டி | செ.செல்வகுமாரன் | துர்க்காபுரத்தில் அமைந்துள்ள லயன்ஸ்கழக மண்டபம். |
| கிளை 05 பன்னாலை | | பொ.கோகுலன் | கிளை 5 இன் கட்டடம் பன்னாலை. |
| கிளை 10 காங்.சிமெந்து தொழிற்சாலையடி | கிளை 11 காங்கேசன்துறை - நடேஸ்வராக் கல்லூரியடி | ந.பத்மசோதி | துர்க்காபுரத்தில் அமைந்துள்ள லயன்ஸ் கழக மண்டபம் |
| கிளை 16 கட்டுவன் | கிளை 15 வறுத்தலை விளான் | வீ.இரத்தின காந்தன் | துர்க்காபுரத்தில் அமைந்துள்ள லயன்ஸ் கழக மண்டபம் |
| கிளை 42 திருப்பூர் மயிலிட்டி | கிளை 32 பலாலிச் சந்தி | ச.பாலகுமார் | சுனாமி புனர்வாழ்வு வீட்டுத் திட்டம் புலோலி மத்தி, பருத்தித்துறை. |
| | கிளை 24 மயிலிட்டி கரை | க.நிமலன் | நலன்புரிச்சங்க மண்டபம் 4 ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை. |
| கிளை 19 ஒட்டகப்புலம் | கிளை 22 பலாலி மத்தி | அ.சீராளன் | வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம், உரும்பிராய். |
| கிளை 21 பலாலி மேற்கு | கிளை 23 பலாலி கிழக்கு | சு.கணேஸ் | யா/ ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம் |
| கிளை 39 குட்டியப்புலம் | கிளை 40 குரும்பசிட்டி கிழக்கு | ரி.என்.ராஜா | வசாவிளான் கிழக்கு குட்டியப்புலம் கிளை 39 |
| கிளை 20 வசாவிளான் மத்தி | | ச.சசீந்திரன் | வசாவிளான் கிழக்கு குட்டியப்புலம் கிளை 39 |
| | கிளை 18 வசாவிளான் | அ.தயாளன் | வசாவிளான் கிழக்கு குட்டியப்புலம் கிளை 39 |
| கிளை 17 குரும்பசிட்டி | | அ.தயாளன் | வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம், உரும்பிராய். |

நேற்று 04.05.2009 அன்று வெளியான மேற்படி [illegible] திருப்பதால் இன்று பிரசுரமாகும் இந்த அட்டவணையைச் சரியானதாகக் [illegible] கிளைக் கழகங்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை வங்கியின் அச்சுவேலிக் கிளை கணனி வலைப் பின்னலில் இணையும் தன்னியக்க பணப் பரிமாற்ற சேவையின் அறிமுகவிழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

அறிமுக விழாவிலீ பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இலங்கை வங்கியின் வட பிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் என்.சிவரட்ணம் தம்பதிகள் மற்றும் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொ.பாலசுந்தரம்பிள்ளை, அச்சுவேலி பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி மற்றும் அச்சுவேலி பங்குத்தந்தை ஆகியோர் மாலை அணிவித்து அழைத்து வரப்படுவதையும் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் என்.சிவரட்ணம் மங்கல விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பதையும் முதல் இரண்டு படங்களிலும் காணலாம்.

வங்கியின் கணனி வலைப் பின்னல் பிரிவின் சேவையை வட பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் ஆரம்பித்து வைப்பதை மூன்றாவது படத்திலும் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை முதலாவது பண வைப்பை வாடிக்கையாளரிடம் இருந்து பெற்று ஆரம்பித்து வைப்பதையும் நான்காவது படத்திலும் காணலாம். வட பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் தன்னியக்க பணப்பரிமாற்றச் சேவை அலகை நாடாவெட்டித் திறந்து வைப்பதை ஐந்தாவது படத்திலும் அச்சுவேலி செலிங்கோ முகாமையாளர் எஸ்.பிரதீப், தன்னியக்க பணமாற்ற பொறியியலாளர் எஸ்.குலேந்திரராசா ஆகியோர் தன்னியக்க பணபரிமாற்றத்தில் பணத்தைப் பெற்றுக் கொள்வதை ஆறாவது, ஏழாவது படங்களிலும் காணலாம்.

(படங்கள்: அச்சுவேலிச் செய்தியாளர்)

# கிராமிய மட்டத்தில் உள்ள இயற்கை வளங்களை நவீன தொழில்நுட்பத் திறனுடன் பயன்படுத்த வேண்டும்

## வாழ்நாள் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை கூறுகிறார்

அச்சுவேலி, மே 5

கிராமிய மட்டத்தில் காணப்படும் இயற்கை வளங்களை காலத்துக்கு ஏற்ற வகையில் வங்கிகளின் நிதிவள ஆலோசனையுடன் நவீன தொழில்நுட்பத் திறனுடன் உரிய முறையில் பயன்படுத்தி எமது பிரதேசத்தின் வளர்ச்சிக்கு ஏற்புடைய வகையில் முழுமையாகப் பயன்படுத்த வேண்டும்.

இவ்வாறு கூறினார் யாழ்.பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொ.பாலசுந்தரம்பிள்ளை.

அச்சுவேலி இலங்கை வங்கிக் கிளையின் கணனி வலைப்பின்னல் இணையம், தன்னியக்கப் பணப்பரிமாற்ற சேவையினதும் அறிமுக விழா அச்சுவேலி இலங்கை வங்கி முகாமையாளர் த.புவனேந்திரன் தலைமையில் நடைபெற்றன.

விழாவில் விருந்தினராக கலந்துகொண்டு பேராசிரியர் தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்தவை வருமாறு:

எமது பிரதேசம் சகல கட்டுமானங்களையும் இழந்து பின்னடைவான நிலையில் காணப்படுகின்றது.

எம்மால் இழக்கப்பட்ட அனைத்தும் மீண்டும் உயர்நிலையில் கட்டியெழுப்பப்பட வேண்டும். இந்த நிலையில் நாம் தனித்தும் கூட்டாகவும் பல்வேறு முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

அச்சுவேலி பிரதேசம் பல்வேறு இயற்கை வளங்களையும் கொண்டிருப்பது புவியியல் ரீதியாக நோக்கப்பட்டுள்ளது. சுண்ணக் கற்பாறைகள் பெருமளவில் வெளியே நீண்டுபரந்து காணப்படுகின்றது.

இன்றைய எமது பிரதேசத்தின் கட்டுமானப் பணிகளுக்கு கல் பொருத்தமான முறையில் பயன்படுத்துவதற்கு பெருமளவில் தேவைப்படுகின்றது. கல்லும், மண்ணும், சிமெந்தும் பெருமளவில் தேவைப்படுகின்றன.

எமது பிரதேசங்களில் கிராமிய மட்டத்தில் பெறுமதிமிக்க இயற்கை வளங்கள் பெருமளவில் காணப்படுகின்றன.

அவை பொருத்தமான முறையில் இனங்காணப்பட்டு உரிய முறையில் உச்சப்பயன்பாட்டில் பயன்படுத்தப்பட வேண்டும்.

கிராமிய மட்டத்தில் கட்டுமானங்களையும் அபிவிருத்தியையும் முன்னெடுப்பதற்கு வசதியாக வங்கிகளின் செயற்பாடுகள் கிராமிய மட்டத்தில் இருந்து முன்னெடுக்கப்படுகின்றன.

வங்கிகளின் நிதி வளத்தையும் பொருத்தமான ஆலோசனைகளையும் ஏற்புடைய வகையில் பயன்படுத்தி எமது பிரதேசத்தில் இழக்கப்பட்ட அனைத்து அம்சங்களையும் மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும்.

இந்த வகையில் சகல தரப்பினரும் தங்களது முழுமையான ஒத்துழைப்பையும் வழங்கி உதவ வேண்டும்.

மக்கள் அனைவரும் தமது பிரதேசத்தின் முழுமையான அபிவிருத்தியை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு அணிதிரண்டு உழைக்கவேண்டும் - என்றார்.

வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் என். சிவரட்ணம் உரையாற்றும் போது.

அச்சுவேலி இலங்கை வங்கிக் கிளையின் வளர்ச்சி மிகக் குறுகிய காலத்தில் உயர்நிலைக்கு வந்துள்ளது. 7 வருடங்கள் அச்சுவேலியில் இலங்கை வங்கியின் செயற்பாடுகள் இருந்த போதிலும் தனிக் கிளையாகச் செயற்படத்தொடங்கிய பின்னர் சில மாதங்களில் யாழ்.மாவட்டத்தில் உள்ள இலங்கை வங்கிக் கிளைகளில் முதன் நிலையில் உள்ளது. இதன் வளர்ச்சி முகாமைத்துவத்தின் சிறப்பினையும் வாடிக்கையாளரின் ஒத்துழைப்பையும் வங்கி மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையையும் வெளிப்படுத்தி உள்ளது என்றார். செயற்பாட்டு முகாமையாளர் ஆர். ஜெயேந்திரா, முன்னாள் உதவிப் பொது முகாமையாளர் க.பாலசுப்பிரமணியம் உட்பட பலர் உரையாற்றினர். (203-11)

# நல்லுறவை வளர்க்கும் . செயற்றிட்டங்கள்

வடமராட்சி,மே5

பருத்தித்துறை பொலிஸ் பிரிவில் பொலிசாருக்கும் பொதுமக்களுக்குமிடையே நல்லுறவை வளர்க்கும் பொருட்டு கிராம சேவையாளர் பிரிவு ரீதியாக செயல்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இதன் முதற் கட்டமாக புலோலி தெற்கு கிராம சேவையாளர்கள் குமரகுருநாதன் தலைமையில் அக்கிராம பொதுமக்களும், பொலிசாரும் இணைந்து பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் சிரமதானப் பணிகளை மேற்கொண்டனர்.

இச் சிரமதான ஆரம்ப வைபவத்தில் பருத்தித்துறை பிரதேச செயலாளர் இ.வரதீஸ்வரன், நிர்வாக உத்தியோகத்தர் கே.முருகையா ஆகியோருடன் பருத்தித்துறை பொலிஸ் நிலைய அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

(203-236)

# நலன்புரி நிலையங்களில் உள்ள வயோதிபர்கள் சீரான கவனிப்பு இன்மையால் மரணம்

## 30 வழக்குகள் தொடரப்பட்டுள்ளதாக வவுனியா நீதிமன்றம் தெரிவிப்பு

கொழும்பு, மே 5

இடம் பெயர்ந்து இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்துள்ளவர்களுக்கான நிவாரண நலன்புரி நிலையங்களில் வயோதிபர்கள் போசாக்கு இன்மையாலும் சீரான கவனிப்பு இல்லாமையாலும் 30 மரணங்கள் சம்பவித்துள்ளமை குறித்து 30 வழக்குகள் தொடரப்பட்டிருப்பதாக வவுனியா மாவட்ட நீதிமன்றம் தெரிவித்துள்ளது. வயோதிபர்களை முகாம்களில் இருந்து உடனடியாக விடுவிப்பதற்கு அரச அதிகாரிகளுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நலன்புரி நிலையம் ஒன்றில் மரணம் அடைந்த வயோதிபர் ஒருவர் தொடர்பாக வவுனியா மாவட்ட நீதி மன்றத்தில் பதிவு செய்யப்பட்ட ஏ/827/9 என்ற இலக்கமுடைய வழக்கு தொடர்பான விசாரணைகளின் பின்னர் வவுனியா மாவட்ட நீதி மன்றம் இந்த உத்தரவினை பிறப்பித்துள்ளது.

இந்த வழக்குத் தொடர்பாக நீதிமன்றம் நடத்திய விசாரணைகள்,மற்றும் இறந்தவரின் மரணத்திற்கான காரணம் தொடர்பாக சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கை ஆகியன நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இவற்றின் அடிப்படையில் இறந்த வயோதிபரின் மரணம் ஒரு பட்டினிச்சாவு என்ற ஒரு முடிவுக்கு வரவேண்டி இருப்பதாக நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

சராசரியாக நாள் ஒன்றுக்கு 5 மரணங்கள் இந்த நலன்புரி நிலையங்களில் இடம் பெற்றுள்ளமை தொடர்பாகத் தகவல் கிடைத்திருப்பதாகவும் நீதி மன்றம் தெரிவித்திருக்கின்றது.

செட்டிகுளம் பகுதியில் உள்ள இடைத தங்கல் நலன்புரி நிலையங்களில் கடந்த மாதம் 14 வயோதிபர்களுடைய மரணம் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் சராசரியாக நாள் ஒன்றுக்கு 5 மரணங்கள் சம்பவித்திருப்பதாகவும் நீதி மன்றத்தின் இந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 26ஆம் திகதி கதிர்காமர் நிவாரண கிராமத்தில் மரணம் அடைந்த மூவரின் சடலங்கள் 6 மணித்தியாலங்களுக்கு மேல் அங்கிருந்து அகற்றப்படாமல் இருந்ததாகவும் நீதிமன்றம் சுட்டிக் காட்டியுள்ளது.

இவ்வாறு இறந்தவர்களின் உடல்கள் அகற்றப்படாமல் இருப்பதால் அந்த சூழலில் தொற்று நோய் ஏற்படக் கூடிய அபாயம் ஏற்படுவதுடன் இறந்தவர்களின் உடலை அகற்றி அது தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்வதில் அதிக செலவு ஏற்படுவதாகவும் நீதி மன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

மூத்த குடிமக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும், பெண்கள், சிறுவர்கள், வயோதிபர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என சட்டம் கூறுகிறது. ஆகவே இடைத்தங்கல் நலன்புரி நிலையங்களில் உள்ள 60 வயதுக்கு மேற்பட்டவர்களின் விவரங்கள் பதிவு செய்து வைக்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் தொடர்பான சம்பவங்களின் போது உடனடியாக விவரங்களை பெறக் கூடியதாக இருக்க வேண்டும் என்றும் நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த நிலையங்களில் இருக்கின்ற, உறவினர்கள் அல்லாதவர்களையும் நோயாளர்களையும் சீராகப் பராமரிப்பதற்கு வசதியாக அவர்களை முதியோர் இல்லங்களுக்கு அனுப்பவைக்க நடவடிக்கை எடுக்குமாறு நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

அத்துடன் உறவினர்கள் வெளியில் இருந்தால், முதியவர்களை அவர்களுடன் சென்று வசிப்பதற்கு அனுமதிக்க வேண்டும். இந்த நிலையங்களில் இருந்து வயோதிபர்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அரச அதிகாரிகளுக்கான இந்த உத்தரவில் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

(203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுகாதார சேவை அலுவலகம் மற்றும் வைத்தியசாலைகளில்
# சிற்றூழியர்களாகப் பணிபுரிந்த 51 பேர் பரிசாரகர்களாகப் பதவி உயர்த்தப்பட்டனர்

குருநகர்,மே5


யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் மற்றும் அதன்கீழ் செயற்படும் வைத்தியசாலைகளில் சிற்றூழியர்களாகச் சேவைபுரிந்த 51 பேர் 2008 மே 17ஆம் திகதியிலிருந்து பரிசாரகர்களாக (கீழ்தரம்) பதவியுயர்த்தப்பட்டுள்ளனர்.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் சேவைபுரியும் க.கமலதாசன், நா.கவிதரன், கி.ஜீவரத்தினம், இ.ரதன், சி.றொ.தவச்செல்வம், பிரதேச வைத்தியசாலை அச்சுவேலியில் சேவைபுரியும் ச.தவராசா, உடுவில் ஆரம்ப மருத்துவ பராமரிப்பு நிலையத்தில் சேவைபுரியும் செல்வி பே.மரியகாந்தி, தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேவையாற்றும் திருமதி க.சாந்தினிதேவி, திருமதி ர.ரஜனி, செல்வி கு.மஞ்சுளா, செல்வி சி.ரஜனி, திருமதி ந.ராகினிதேவி, திருமதி நி.லதாதேவி, திருமதி ர.ஜெயக்குமார், கி.இலட்சுமணன், திருமதி ம.சுப்பிரமணியம், திருமதி ரி.சுமதினி, செல்வி ஜெ.கந்தசாமி, பிரதேச வைத்தியசாலை நெடுந்தீவில் சேவையாற்றும் இ.மரியசீலன், திருமதி ர.தனலட்சுமி, திருமதி செ.லலிதா பிரதேச வைத்தியசாலை வேலணையில் சேவையாற்றும் ந.மகேந்திரராசா, பிரதேச வைத்தியசாலை சங்கானையில் சேவைபுரியும் அ.யோகராசா, பிரதேச வைத்தியசாலை அனலைதீவில் சேவையாற்றும் திருமதி கு.வசந்தராணி, கோப்பாய் சுகாதார வைத்தியசாலையில் சேவையாற்றும் திருமதி ச.கௌரிமலர், ஆதார வைத்தியசாலை பருத்தித்துறையில் சேவையாற்றும் திருமதி ஜீ.விஜயகுமாரி, திருமதி அ.ஜெயமலர், திருமதி சி. மகேஸ்வரன், பா.பிரசாத், திருமதி இ.விமலா, பருத்தித்துறை ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையத்தில் சேவையாற்றும் திருமதி சு.கிருஷ்ணகுமாரி, பிரதேச வைத்தியசாலை நயினாதீவில் சேவையாற்றும் த.ரமேஸ், ஊர்காவற்றுறை சு.வை.அ அலுவலகத்தில் சேவையாற்றும் கோ.கணேசலிங்கம் பிரதேச வைத்தியசாலை கோப்பாயில் கடமைபுரியும் திருமதி ஆ.பில்ஸ்ட்டலா, பிரதேச வைத்தியசாலை கோண்டாவிலில் சேவைபுரியும் செல்வி வே.கலாவதி, ஆதார வைத்தியசாலை சாவகச்சேரியில் சேவைபுரியும் திருமதி வி.தவரூபி, திருமதி உ.சாந்தி, திருமதி ச.ஜெயந்தி, பிரதேச வைத்தியசாலை கொடிகாமத்தில் சேவையாற்றும் திருமதி சி.வசந்தமாலி ஆகியோர் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

இவர்களுடன் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் சாவகச்சேரியில் சேவைபுரியும் திருமதி அ.தவமணி, பிரதேச வைத்தியசாலை வல்வெட்டித்துறையில் சேவைபுரியும் செல்வி ச.வசந்தி, ஆ.ம.ப.பி தொல்புரத்தில் சேவைபுரியும் செல்வி தா.ஞானறஞ்சிதம், ஆதாரவைத்தியசாலை தெல்லிப்பழையில் சேவைபுரியும் செல்வி க.விஜயகுமாரி, சு.வை.அ.பணிமனை தெல்லிப்பழையில் சேவைபுரியும் திருமதி ம.றஜித்தா, பிரதேச வைத்தியசாலை பண்டத்தரிப்பில் சேவைபுரியும் திருமதி கெ.சித்திரா ஆ.ம.ப.பி அம்பனில் சேவையாற்றும் திருமதி சிவநேசன் சுகன்ஞா, பிரதேச வைத்தியசாலை அளவெட்டியில் சேவைபுரியும் செல்வி கோ.கோகிலா, திருமதி த.அன்னவதனா பிரதேச வைத்தியசாலை காரைநகரில் சேவைபுரியும் செல்வி நா.றோஸ்மேரி மார்புநோய் சிகிச்சை நிலையம் யாழ்ப்பாணத்தில் சேவைபுரியும் மா.ஜெயவதனன், தே.தேவச்சந்திரன் ஆகியோருக்கும் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. (203-51)


31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 28 | | 05 |
| 01 | | 04 |
| 1925 | | 2009 |



அமரர் செல்லப்பா கார்த்திகேசர்

கடந்த 05.04.2009 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் மரணச்செய்தி கேட்டு எம் துயரத்தில் பங்கெடுத்தவர்களுக்கும் மற்றும் தொலைபேசி, தந்திமூலம் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் நன்றி தெரிவிப்பதோடு, இன்று (05.05.2009) செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நீர்வேலி றோட்,
கைதடி வடக்கு, கைதடி. (84784) குடும்பத்தினர்.


## முதலாம் தர மாணவர் அனுமதி இம்மாதம் புதிய சுற்று நிருபம்

கொழும்பு,மே5

அடுத்த வருடம் தேசிய பாடசாலைகளில் முதலாம் தரத்துக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்வது தொடர்பிலான சுற்றுநிருபம் இந்த மாதம் வெளியிடப்படவுள்ளது.

முதலாம் தரத்துக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்வது தொடர்பில் முன்பு எதிர்நோக்கப்பட்ட பிரச்சினையைக் கருத்திற்கொண்டு அப்பிரச்சினையை முற்றாகத் தடுக்கும் நோக்கிலேயே இப்புதிய சுற்றுநிருபம் சில மாற்றங்களுடன் வெளியிடப்படவுள்ளது என்று தேசிய பாடசாலைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இச்சுற்றுநிருபம் வெளியிடப்பட்டதும் தேசிய பாடசாலைகளில் அடுத்த வருடம் மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்காகப் பெற்றோர்கள் ஜூன் மாதம் முதல் விண்ணப்பிக்கலாம் என்று பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (சி)


மரண அறிவித்தல்



இராசையா தங்கரத்தினம்

சுதுமலையைப் பிறப்பிடமாகவும், ஒஸ்கா வீதி, உரும்பிராய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா தங்கரத்தினம் நேற்று (04.05.2009) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற தம்பிமுத்து இராசையாவின் அன்பு மனைவியும் பத்மநாதன் (கனடா), காலஞ்சென்ற யோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் பத்மராணி, தங்கராணி, ஜெயராணி, இந்திராணி, காலஞ்சென்ற கதிர்காமநாதன் மற்றும் கமலராணி (சிலாபம்), யோகராணி (லண்டன்), சிவராணி (பிரான்ஸ்), ஆனந்தராணி (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தாயும் சிவராசா (தொண்டர்), கந்தசாமி, நடராசா, தெய்வேந்திரராசா, இராஜபாலன், பரமேஸ்வரி, கங்காசுதன், பிறேமச்சந்திரன், இராஜேந்திரன் ஆகியோரின் அன்பு மாமியும் சிவரூபன் (இயக்குநர், கலைவாணி கல்வி நிறுவனம்), சிவரூபி (டென்மார்க்), கஜேந்திரன் (உரிமையாளர், கிருஷ்ணா சுவையகம், கோப்பாய்), சசிகரன், பிரதீபா, இராகுலன் (J/H/C), ஜெயராஜ் (ஆசிரியர், வவுனியா), ஜெயமோகன் (B.O.C), ஜெயசாந்தி (மாணவி, பேராதனைப் பல்கலைக்கழகம்), ஜெயப்பிரியன் (J/H/C), நவீனன், இந்திரஜித், யதுர்சன் (மாணவன், கல்வியியற் கல்லூரி) பிரியந்தன், தனுசன் (மாணவன், தொழில்நுட்பக் கல்லூரி), அனுஜன் (S/J/C), அனோஜா (J/H/L/C), வைகுந்தன், அகலிகை, தாட்சாயினி, பிரகஸ்பதி, பிரியங்கா (லண்டன்), ஆர்த்திகா (லண்டன்), லவன் (பிரான்ஸ்), கஜன் (பிரான்ஸ்), கஸ்தூரி (டென்மார்க்), வர்ணஜா (டென்மார்க்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காருண்யா, அபிசேக், அனுசியா (டென்மார்க்), லக்சியா (டென்மார்க்), சஞ்சய் (டென்மார்க்) ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.05.2009) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேம்பன் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய். (85034) தகவல்: குடும்பத்தினர்.



31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

அமரர் ஏரம்பு சின்னத்தம்பி

(உரிமையாளர் - கற்பக சிவசோதி அரிசி ஆலை - இணுவில் மேற்கு,
முன்னாள் பல்பொருள் வாணிப உரிமையாளர், இணுவில்)



மண்ணில் 15.05.1922 விண்ணில் 05.04.2009

*அன்பின் இருப்பிடமாய் அறிவின் உறைவிடமாய்*
*பண்புடனே எமை வளர்த்து பாசமுடன் வாழவைத்தீர்*
*உலகமே ஊராக ஒன்றுபட்டு வாழ்ந்திருக்க*
*இவ்வுலகில் வாழ்ந்த நிலை இத்துடனே போதுமென்று*
*இறைவன் உம்மை தன்னடிக்கீழ் இணைத்தானோ?*
*என்றென்றும் நாம் மறவோம் உம் நினைவால்*
*வாழ்ந்திருப்போம்!*

எமது குடும்பத் தலைவன் இறைபதம் அடைந்த செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும், உள்நாட்டிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் ஆறுதல் கூறி அனுதாபம் தெரிவித்த அன்பு நெஞ்சங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்வதுடன் இன்று (05.05.2009) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆவரங்கால் மேற்கு, புத்தூர். (சி/558315) குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதன் முதலாக இணையம் வழியாக (Online) வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறி

*இக்கட்டுரையின் முதற்பகுதி கடந்த 02.05.2009ஆம் திகதிய உதயனில் வெளியாகியிருந்தது.*

### தொலைக்கல்வி வரலாறு

தொலைக்கல்வியானது இற்றைக்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்னதாகவே ஆரம்பிக்கப்பட்டு விட்டது. ஆரம்பத்தில் தபால் மூலக்கற்கை நெறியே ஆரம்பமானது. உலகில் லண்டன் பல்கலைக்கழகமே முதன் முதலாக தொலைக்கல்வி பட்டப்படிப்பினை வழங்கிய முதல் பல்கலைக்கழகமாகும். இது 1958இல் வெளிவாரிக்கற்கை நிகழ்ச்சித் திட்டத்தினை உருவாக்கியது. ஐக்கிய இராச்சியத்தில் 1969இல் மிகப் பெரிய திறந்த பல்கலைக்கழகமான ஐக்கிய இராச்சிய திறந்த பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது. இதனது ஆரம்ப தொலைக்கல்வி விநியோக முறைகளாக வானொலியும் தொலைக்காட்சியும் உபயோகிக்கப்பட்டன. இதன் பின்பே ஏனைய பல்கலைக்கழங்கள் தொலைக்கல்வி, தொழில்நுட்பங்களை விநியோக முறைகளாக உபயோகித்தன. 20ஆம் நூற்றாண்டில் வானொலி, தொலைக்காட்சி, இணையம் என்பன யாவும் தொலைக்கல்விக்கு உபயோகிக்கப்படுகின்றன. கணினியும், இணையமும் தொலைக்கல்வி விநியோகத்தைஇலகுவாகவும். விரைவாகவும் மேற்கொள்ள வல்லன. தனியார் பல்கலைக்கழகமான பொனிக்ஸ் பல்கலைக்கழகம் (University of Phoenix) online பல்கலைக்கழகமாகும். இது தற்போது இரண்டு இலட்சம் மாணவர்களைக் கொண்டுள்ளது. 2010இல் இது ஐந்து இலட்சம் ஆக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கையில் பல்வேறு நிறுவணங்கள் தொலைக்கல்வியை வழங்கிவரினும்,திறந்த பல்கலைக்கழகமே முதன் முதலில் தனது தொலைக்கல்வியை மேற்கொள்ள ஆரம்பித்த நிறுவனமாகும். இன்று இலங்கையில் பல்வேறு பாடநெறிகளை தொலைக்கல்வி மூலம் சிறப்பாக வழங்கும் நிறுவனம் இலங்கை திறந்த பல்கலைக்கழகமேயாகும்.

### தொலைக்கல்வி நவீன மயமாக்கல் திட்டம்

கடந்த இரு தசாப்தங்களாக இலங்கையில் தேசிய பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறும் க.பொ.த உயர்தரமாணவர்கள் 7.5 சதவீதத்திலும் குறைவாகவே உள்ளனர். இது சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து, இந்தியா போன்ற நாடுகளுடன் ஒப்பிடும் இடத்து மிகவும் குறைவான தொகையே ஆகும். 2005இல் க.பொ.த உயர்தர மாணவர்களில் (117,345) 16,292 மாணவர்களே 14% 15 பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெற்று இருந்தனர். இங்கு 101,143 மாணவர்கள் 86% மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்க முடியாத நிலை காணப்பட்டது. இதற்கு முக்கிய காரணம் கட்டிட வசதிகள்,கல்விசார்,கல்விசாரா ஊழியர் பற்றாக்குறை, ஆய்வுகூட வசதிகள் ,விடுதி வசதிகள், நூலக வசதிகள் போன்றவற்றிலும் பற்றாக்குறையேயாகும்.

இலங்கையில் உயர்கல்வி அமைச்சு தொலைக்கல்வி நவீன மயமாக்கத்திட்டம் Distance Education Modernization Project (DEMP) ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் இரண்டாம் நிலைக் கல்வி நிலையை மேம்படுத்தும் முகமாக 2003ல் உருவாக்கப்பட்டது. குறிப்பாக 2012ஆம் ஆண்டில் க.பொ.த உயர்தர மாணவர்களின் ஏறத்தாழ 100,000 மாணவர்கள் கல்வியைப் பெறவேண்டும் என்னும் இலக்குடனேயே இது உருவாக்கப்பட்டது. இங்கு நவீன தொலைக்கல்வி நுட்பங்களை உபயோகித்து மாணவர்கள் பட்டப்படிப்புக்கள், டிப்ளோமா கற்கை நெறிகளை திறந்த பல்கலைக்கழகங்களினூடாகவும், மரபுரீதியான பல்கலைக்கழகங்களின் வெளிவாரிப்படிப்புக்கள் மூலமாகவும், பொதுத்துறை, தனியார் துறை, பட்டப்பின் படிப்பு இரண்டாம் நிலைக் கல்வி (Post Secondary) நிறுவணங்களின் ஊடாகவும் வசதிகளை மேற்கொள்ளத் தீர்மானித்தது. இதன்பொருட்டு இலங்கையில் பல்வேறு நிறுவனங்களினாலும் சமர்ப்பிக்கப்பட்ட கற்கைநெறித் திட்டங்களிலிருந்தும் ஒன்பது நிறுவணங்கள் தெரிவு செய்யப்பட்டன. இதில் பேராதனைப் பல்கலைக்கழகம், மொறட்டுவ பல்கலைக்கழகம், ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்,யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை திறந்த பல்கலைக்கழகம், பாமர்கியூற்றிக்கல் அமைப்பு, இலங்கை நூலக சம்மேளனம் , தர அளவீட்டு நிறுவனம், சிலிடா போன்ற நிறுவணங்களும் வெவ்வேறு செயற்றிட்டங்களின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டன. இவ் ஒன்பது நிறுவணங்களிலும் ஒரு நிறுவனத்தில் இருவர் வீதம் 18 பேர் (DEMP) திட்டத்தின் கீழ் தொலைக்கல்வியில் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா கற்கைநெறியை பயிலுவதற்கு தெரிவு செய்யப்பட்டு இந்திரா காந்தி திறந்த பல்கலைக்கழகத்தில் கற்பதற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது. இக்கற்கைநெறி இலங்கைக்குப் பொருத்தமான தொலைக்கல்வியின் தத்துவமும் , வளர்ச்சியும் (Growth and philosophy of Distance Education), சுயகற்றல் குறிப்புக்களின் வடிவமைப்பும் அபிவிருத்தியும் (Design and Development of self - learning print material)கற்றல் ஆதார சேவைகள் (Learner support services) தொலைக்கல்வியின் முகாமை (Management of Distance Education) தொலைக்கல்விக்கான தொடர்பாடல் நுட்பம்(Communication Technology for Distance Education) போன்ற பாடநெறிகளை கற்க உதவியது. இதில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வணிகத்துறை விரிவுரையாளர் ஒருவர் இக்கற்கை நெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. மேலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட விரிவுரையாளர்கள் நவீன தொலைக்கல்வி சாதன நுட்பங்கள் தொடர்பான பயிற்சிப்பட்டறைகளில் காலத்திற்குக் காலம் கொழும்பு சென்று கலந்து கொண்டுள்ளனர். இவை கொழும்பு திறந்த பல்கலைக்கழகத்தில் வெளிநாட்டில் இருந்து வந்த பயிலுனர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டன. கடந்த வருடகாலப் பகுதியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் இவ்விரிவுரையாளர்களுக்கு கொழும்பில் இருந்து வந்த ஒரு குழு இப்பயிற்சிப்பட்டறையை மேற்கொண்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஏற்கனவே வெளிவாரிப்பட்டப்படிப்பு கற்கைநெறிகள் வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டு வருகின்றன. தற்போது ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் DEMP திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடம் 'வியாபார முகாமைத்துவமாணி' (Bachelor of Business Management) என்னும் ஓர் புதிய வெளிவாரிக்கற்கை நெறியை அடுத்த மாதமளவில் ஆரம்பிக்கவிருக்கின்றது. இது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றில் முதன் முதலாக ஆரம்பிக்கப்படும் Online மூலமான கற்கைநெறி என்பது குறிப்பிடத்தக்கது. வெளிவாரிக்கற்கை நெறிகள் தனியே வணிகத்துறை மாணவர்களுக்கு வணிகமாணிப் பட்டப்படிப்புக்களையும்,

**ரதிராணி யோகேந்திரராஜா**
*இணைப்பாளர் (வியாபார முகாமைத்துவ மாணிக்கற்கைநெறி), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

கலைத்துறை மாணவர்களுக்கு கலைவாரிப் பட்டப்படிப்புக்களையும், மேற்கொண்டு வருகின்றன. ஆனால் அறிமுகப்படுத்தப்படும் வியாபார முகாமைத்துவ மாணி கற்கைநெறியானது க.பொ.த. உயர்தரத்தில் சித்தியடைந்த எந்தத் துறையைச் சார்ந்த மாணவர்களும் தமது உயர் கல்வியைத் தொடர வசதி செய்கிறது. எனவே, வணிகத்துறை, கலைத்துறை, விஞ்ஞானத்துறையைச் சார்ந்த எந்த மாணவர்களும் இக்கல்வி நெறியைத் தொடர முடியும்.

(முற்றும்)

## சுயதொழிலுக்கு வெற்று ரின்

யாழ்ப்பாணம், மே 5

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தின் சுயதொழில் தேவைக்கென யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் 2 ஆயிரத்து 500 இற்கு மேற்பட்ட வெற்று ரின்களை அன்பளிப்பாக விநியோகித்துள்ளது.

மேற்படி விழிப்புலனற்றோர் சங்கத்தின் சுயதொழில் முயற்சிக்கெனத் தகர ரின்கள் தேவைப்பட்டன.

இதற்கமைய இந்த வெற்று தகர ரின்களை சங்கம் இலவசமாக வழங்கியுள்ளதாகவும் சங்கத் தலைவர் மேலும் கூறினார். (203-224)

## சிறுவர் நட்புறவுக் கழகத்தின் கட்டட வேலை துரிதகதியில்

கோப்பாய், மே 5

'வேள்ட் விசன்' அனுசரணையுடன் நீர்வேலி போயிட்டி பகுதியில் சிறுவர் நட்புறவுக் கழகம் செயற்படுவதற்கான புதிய கட்டடப் பணிகள் துரித கதியில் இடம் பெற்று வருகின்றன.

அச்செழு திடல்புலம் பகுதியில் உள்ள இக்கழகம் மீள்புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இக்கழகத்தின் மூலம் இப்பகுதி சிறார்களின் கற்றல் செயற்பாடுகள் மேம்பாடு அடையவுள்ளதுடன் பயனுள்ள பொழுது போக்கு வசதிகளும் ஏற்படவுள்ளது. தற்போது இக்கழக செயற்பாடுகள் அருகிலுள்ள சனசமூக நிலையங்களில் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (203-72)

## வாசகர் திருமுகம்

### ஒரே பாடசாலையில் நீண்டகாலம் பணியாற்றும் ஆசிரியர்களின் இடமாற்றம் வெறும் பகல் கனவா?

யாழ் மாவட்டத்தில் ஒரே பாடசாலையில் தொடர்ந்து கடமையாற்றும் ஆசிரியர்களை இடமாற்றம் செய்யாமல் இழுத்தடிப்பதன் நோக்கம் என்ன? இந்த விடயத்தில் கல்வி அதிகாரிகள் இரட்டை வேடம் போடுவதும், கல்வி அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் கல்வி நிர்வாகச் செயற்பாடுகளை முன்னெடுக்காமல் பக்கச் சார்பாக நடந்து கொள்வதும், யாருடைய நலனைக் கருத்தில் கொண்டு என்ற வினா மக்கள் மத்தியில் தற்போது மேலெழுந்துள்ளது.

கல்வி அமைச்சு கடந்த வருடம் வெளியிட்ட தேசிய ஆசிரியர் இடமாற்றக் கொள்கையின் பிரகாரம் ஒரே பாடசாலையில் ஆசிரியர்கள் தொடர்ந்து கடமைபுரிவது தவிர்க்கப்பட வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டிருக்கிறது அத்துடன் ஒவ்வொரு ஆசிரியரும் கஷ்டப் பிரதேசம், அதிகஷ்டப் பிரதேசம் என்ற வகையிலும் அதி விருப்பமான பாடசாலை, விருப்பமான பாடசாலை என்ற வகையிலும் தமது சேவைக்காலத்தில் குறித்தொதுக்கப்பட்ட காலத்துக்கு கடமைபுரியவேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது. கல்வி அமைச்சின் சுற்றிக்கைகளுக்கு அமைவாக ஏனைய மாவட்டங்களில் ஆசிரியர்களின் இடமாற்றம் தொடர்பான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் அதே வேளையில் யாழ் மாவட்டத்தில் சுற்றறிக்கைகளுக்கு அமைவாக ஆசிரியர்களுக்கான இடமாற்றங்களை செயற்படுத்துவது இல்லை என்பது சகல மட்டங்கிலும் விமர்சனத்தையும் விசனத்தையும் உண்டு பண்ணியுள்ளது.

அதிகாரிகளின் குடும்ப உறுப்பினர்கள்,அதிபர்களின் உறவுகள் என மிக நெருக்கமானவர்களே அதிகளவில் நீண்டகாலமாக ஒரே பாடசாலையில் கடமை புரிபவர்கள் என்பதும் அவர்களை இடமாற்றம் செய்வதன் மூலம் தமது செல்வாக்கின் தன்மையை வெளிப்படுத்த முடியாமல் போய் விடும் என சமூகத்தில் நிலவும் கருத்தில் உண்மை உள்ளது என்பதும் நடைமுறையில் நிரூபணமாகின்றது.

ஆசிரியர் சேவையில் எல்லோருக்கும் சம சந்தர்ப்பமும் சமமான அனுபவமும் கிடைக்க வேண்டும் என்பது தேசிய ஆசிரியர் இடமாற்றக் கொள்கையில் வலியுறுத்தப்பட்டுள்ள போதிலும் அதிகாரிகளின் பக்கச்சார்பான செயற்பாடுகளினால் கணிசமான அளவு ஆசிரியர்கள் கஷ்டமான பாடசாலைகள்,வசதிக்குறைவான பாடசாலைகளில் கடமைபுரியும் அதேவேளை அதிகாரச் செல்வாக்கு உள்ளவர்கள் தமது இல்லங்களுக்கு அருகில் உள்ள பாடசாலைகளில் 15 வருடங்களுக்கு மேற்பட்டகாலம் நீண்ட சேவை முன்னுரிமை என்ற வகையில் தங்களது அதிகாரத்தையும் நிலை நாட்டிக் கொண்டிருக்கின்றனர்.

யாழ் மாவட்டத்தில் 7 வருடங்களுக்கு மேல் தொடர்ச்சியாக ஒரே பாடசாலையில் கடமையாற்றிய ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்படுவார்கள் என்றும் இடமாற்றம் செய்யப்படும் ஆசிரியர்கள் இரண்டாம் தவணைத் தொடக்கத்தில் புதிய பாடசாலைகளில் கடமையேற்பார்கள் என்றும் ' இடமாற்றத்தைச் செய்வதில் யாழ்.மாவட்டத்தில் நடைபெற்ற கல்வி அபிவிருத்தி தொடர்பான உயர்மட்ட மாநாட்டின் பொதுக்கருத்து எட்டப்பட்டுள்ளது என்றும் இடமாற்றத்தை நடைமுறைப்படுத்துவதற்கு சகலதரப்பில் இருந்தும் வரவேற்பு கிடைத்துள்ளது. என்றும், ''மாகாணக்கல்வி அமைச்சின் செயலாளர் இடமாற்றத்தை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும். என பணிப்புரை விடுத்துள்ளார் எனவும் மாகாணக் கல்விப் பணிப்பாளர், வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கு இடமாற்றம் தொடர்பாக பணிப்புரை விடுத்துள்ளார், என்றும் தினசரி செய்திப்பத்திரிகைகளில் பெரிய எழுத்துக்களில் செய்திகள் வெளிவந்தன.

இந்தச் செய்திகளைப் பார்த்து ஒரு வகையில் யாழ்.மாவட்ட ஆசிரியர் இடமாற்றம் தொடர்பான செயற்பாடுகளில் மறுமலர்ச்சி ஏற்படுவது நல்லது என எதிர்பார்த்த சமூகம் தற்போது ஏமாற்றம் அடைந்துள்ளது. எல்லாம் வெறும் வாய்ச்சொல்லில் மட்டும் தான் என எண்ணத் தோன்றுகின்றது.

யாழ்.மாவட்டத்திற்கு விஜயம் செய்துள்ள வடக்கு மாகாணக்கல்விப் பணிப்பாளர் இந்த விடயத்தில் பொருத்தமான ஏற்பாடுகளை செய்வது வரவேற்கத்தக்கது. இல்லாவிடில் இது தொடர்பான சமகால நிலைப்பாட்டை வெளியிடுவது பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு ஆறுதலைத்தரும்.

பண்ணாகம். • பாதிப்புக்குள்ளான ஆசிரியர்.

### ஞாயிறு செயலமர்வுகளை வேறுநாள்களில் நடத்துங்கள்

ஞாயிற்றுக்கிழமை கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் புனித நாளாகும். எல்லாக் கிறிஸ்தவ ஆலயங்களிலும் ஆராதனைகள், வழிபாடுகள் , பிரார்த்தனைகள், மறைக் கல்வி, பாடசாலைகள் என்பன நடைபெறும் நாளாகும். அத்துடன் இறைவழிபாடுகள் மட்டுமன்றி மதரீதியான, சமுகரீதியான செயல்பாடுகளிலும் ஈடுபடும் நாளாகும். ஆகவே இந்நாளில் கிறிஸ்தவ கத்தோலிக்க ஆசிரியர்கள் உட்பட அனைவரும் இந்நாளினை தமது மதரீதியான செயல்பாடுகளுக்கு தமது நேரத்தை ஒதுக்கிக் கொள்வர். ஆகவே இதனை செயல்படுத்தும் முகமாக செயலமர்வுகளை ஞாயிறு தினங்களில் இயலுமான வரை தவிர்த்துக் கொள்ளுமாறு கல்விச் சமுகத்தினரை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். தமிழருக்கு தமது மதத்தினை மட்டுமன்றி பிறமதத்தினையும் மதிக்கும், போற்றும் பண்பாடு உள்ளது என்ற உயர் சிந்தனையைப் பாதுகாக்க வேண்டும். என்று கோட்டக் கல்வி வலயப் பணிப்பாளர்களையும் மற்றும் கல்வி சார்ந்த உயர் அதிகாரிகளையும் வினயமாக கேட்டுக் கொள்கிறேன்.

உடுவில் இ.மரியதாஸ்

## யாழ்.மாவட்ட சதுரங்கப்போட்டி; வெற்றிபெற்ற அணிகளின் விவரம்

யாழ்ப்பாணம், மே 5

மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையேயான சதுரங்கப் போட்டிகள் யாழ்.மத்திய கல்லூரியில் சனிக்கிழமையும், ஞாயிற்றுக்கிழமையும் நடைபெற்றது. போட்டிகளில் வெற்றிபெற்ற அணிகளின் விவரம் வருமாறு:

**15 வயதின் கீழ் பெண்கள்**
மகாஜனக் கல்லூரி, வேம்படி மகளிர், யாழ்.இந்து மகளிர், வட இந்து மகளிர்.

**19 வயதின் கீழ் பெண்கள்**
யாழ்.இந்து மகளிர், வட இந்து மகளிர், நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.

**15 வயதின் கீழ் ஆண்கள்**
ஹாட்லிக் கல்லூரி, யாழ்.இந்துக் கல்லூரி,மகாஜனக் கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தி.

**19 வயதின் கீழ் ஆண்கள்**
ஹாட்லிக் கல்லூரி, யாழ்.இந்துக் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

5, 6, 7ஆம் திகதிகளில் யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு இடையேயான மெய்வன்மைப் போட்டி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் காலை 8.30 மணிக்கு நடைபெறும்.

இப்போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்ட சகல பாடசாலைகளையும் வருகை தருமாறு யாழ்.மாவட்ட விளையாட்டுத் துறைச் செயலர் அறிவித்துள்ளார்.

போட்டி நிகழ்ச்சி நிரல் கிடைக்காத பாடசாலைகள் அந்தந்த வலயங்களைச் சேர்ந்த உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளரை தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வங்கிகளில் இடம்பெற்ற நிகழ்வுகளில்...





வல்வெட்டித்துறை மக்கள் வங்கிக் கிளையில் சித்திரைப் புதுவருடப்பிறப்பன்று நடைபெற்ற வனிதா வாசனா அதிஷ்டச்சீட்டிழுப்பில் சிறுமி ஒருவர் அதிஷ்டச்சீட்டை எடுக்கின்றார். நடுவர்களான வல்வை நகராட்சி மன்ற பிரதம முகாமைத்துவ உதவியாளர் திருமதி திருஞானசுந்தரம் சாந்தினி, இந்து தமிழ்க்கலவன் பாடசாலை எழுதுநர் திருமதி ஜெயலக்ஷ்மி மயூரரூபன், வல்வெட்டி உப தபாலதிபர் திருமதி பவானி கருணாகரன் ஆகியோரையும் வங்கி முகாமையாளர் பி.கிருஷ்ணானந்தன், பிரதி முகாமையாளர் ச.சர்வானந்தன், உதவி முகாமையாளர் ஸ்ரீகாந்தநிர்மலா விமலேந்திரன் ஆகியோரையும் முதலாவது படத்தில் காணலாம்.

வாடிக்கையாளர்களின் புதுவருடக் கொடுக்கல் வாங்கல்களை இரண்டாவது படத்தில் காணலாம். (253)



அச்சுவேலியில் தேசிய சேமிப்பு வங்கிக் கிளைக்கான கட்டடத்துக்கு அடிக்கல் நடும் வைபவத்தில் விருந்தினராகக் கலந்து கொண்ட தேசிய சேமிப்பு வங்கியின் யாழ். கிளையின் முகாமையாளர் வி.அருளானந்தத்தை ஓய்வுபெற்ற நீதிமன்றப் பதிவாளர் சி. சந்திரலிங்கம் மாலை அணிவித்து வரவேற்பதையும் இலங்கை வங்கியின் ஓய்வுபெற்ற பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் எஸ். பாலசுப்பிரமணியம் அடிக்கல் நடுவதையும் காணலாம்.



சித்திரைப் புத்தாண்டு தினத்தன்று சாவகச்சேரி மக்கள் வங்கிக் கிளையில் 'வனிதா வாசனா' சீட்டிழுப்பு இடம்பெற்றது.

நிகழ்வுக்கு விருந்தினராகக் கலந்து கொண்ட தென்மராட்சி பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி இ.இரகுநாதன், மக்கள் வங்கி உதவிப் பிராந்திய முகாமையாளர் எஸ்.கென்றி, பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோரை [illegible] முகாமையாளர் க. சண்முகலிங்கம் வரவேற்று உரையாடு[illegible]

## திருமுறை முற்றோதல்

அகில இலங்கைத்திருமுறை மன்றத்தினர் மக்கள் யுத்தமின்றி சாந்தி, சமாதானத்துடன் நிம்மதியாக வாழ வேண்டுமென இறைவனைப் பிரார்த்தித்து யாழ். குடாநாட்டு ஆலயங்களில் நாயன்மார் நால்வரையும் எழுந்தருளச் செய்து வருடம்முழுவதும் பன்னிருதிருமுறை முற்றோதல் நிகழ்வை நடத்தி வருகின்றனர்.

கடந்த சித்திரைப் புத்தாண்டு தினத்தன்று நல்லூர் கைலாசப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் முற்றோதல் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. (203)

## வீதி திருத்தம்

யாழ்ப்பாணம்,மே.5

வலி- கிழக்குப் பகுதியில் மாசிவன் சந்திக்கும் நவக்கிரி சந்திக்கும் இடைப்பட்ட வீதி தார் ஊற்றி புனரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. (203-224)

## சமய சந்நிதியில்

சுழிபுரம்,மே.5

சுழிபுரம் கம்பணை இராஜஇராஜேஸ்வரி அம்மன் ஆலய பாலஸ்தாபனம் நாளை புதன்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாலஸ்தாபன குருவாக பிரம்மஸ்ரீ பாலஷண்முகக்குருக்கள் இருந்து கிரியைகளை நிறைவு செய்யவுள்ளார். ஆரம்பக்கிரியைகளைபாலஸ்தாபன சாந்தி வழிபாடுகள்நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை ஆரம்பமாகியமை குறிப்பிடத்தக்கது. (201-28)


## மரண அறிவித்தல்

### சங்கரப்பிள்ளை குருலிங்கம் (குரு)

இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் இந்தியாவில் வசித்த வருமான சங்கரப்பிள்ளை குருலிங்கம் (03.05.2009) ஞாயிற்றுக் கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இந்தியாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும் தகவல்:

இணுவில் கிழக்கு, இணுவில். (85037) எஸ்.தேவராஜன் (சகோதரன்).

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்




அமரர்

### கதிரேசு பரராஜசிங்கம் (J.P)

கடந்த (05.04.2009) அன்று சிவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் இன்று (05.05.2009) செவ்வாய்க் கிழமை மு.ப 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும்ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

30, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
சுண்டுக்குளி. (85039) மனைவி, மக்கள்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி




அமரர்

### கந்தையா சிவலிங்கம்

திதி:- ஏகாதசி

ஓராண்டு முடிந்தது
எம்மை விட்டு பிரிந்து சென்று
நீர் வாழ்ந்த காலமெல்லாம்
நீங்காத நினைவுகளாக
தூங்காது எம் கண்மணி
எம் உயிருள்ளவரை

ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

அராலி மத்தி,
வட்டுக்கோட்டை. க.நவரத்தினம் (சின்னண்ணை) (மருமகன்).

(85016)

## தேசிய கல்வி நிறுவக கல்விமாணி (B.Ed.) கற்கை நெறிக்கு ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான பரீட்சை வழிகாட்டல் செயலமர்வு -2009

அநேகரின் வேண்டுகோளுக்கு இணங்க விரைவில் நடைபெறவுள்ள இப் பரீட்சைக்கு வழிகாட்டல் செயலமர்வு,பொது உளச்சார்பு, கல்விசார் பொது அறிவு ஆகிய விடயங்களில் நிபுணர்களால் எதிர்வரும் (08.05.2009) வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறவுள்ளது. வரையறுக்கப்பட்ட இடங்களே உண்டு என்பதால் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு முன்பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குநர்
பயிற்றப்பட்ட ஆசிரியர் பயிற்சி வட்டம்,
226, கே.கே.எஸ். வீதி,யாழ்ப்பாணம்.

தொ.பே:- 077 8696798 (85040)

## நீங்கா நினைவலைகள்

முதலாம் ஆண்டு — 12 ஆம் ஆண்டு



அமரர் கனகரத்தினம் செல்வராஜா



அமரர் செல்வராஜா பேபி சரோஜா

| | | |
|---|---|---|
| 04.06.1944 | மலர்வு | 03.07.1954 |
| 16.04.2008 | உதிர்வு | 01.01.1997 |

திதி: ஏகாதசி (05.05.2009) திதி: ஸப்தமி

அவனியில் எம்மை ஆளாக்கி, அன்பு காட்டி
தந்தையாய் அன்னையாய் எம்முடன் வாழ்ந்து
மறைந்துபோன உங்கள் நினைவுகளை
விழிநீர் சொரிய நினைவு கூருகின்றோம்.

[illegible] வீதி,இணுவில் கிழக்கு. சி.கோகுல்ராஜ் (பெறாமகன்).

(85035)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழவு இயந்திரங்களில் கொண்டுசெல்லப்படும் கழிவுகளால் துர்நாற்றம் வீசுகிறது; வீதியில் பயணிக்கும் மக்கள் விசனம்

யாழ்ப்பாணம்,மே5

யாழ்.மாநகராட்சி மன்றத்தின் உழவு இயந்திரத்தில் கொண்டு செல்லப்படும் கழிவுபொருள்களால் துர்நாற்றம் வீசுவதால் வீதிகளில் பயணங்களை மேற்கொள்வோர் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

பல நாள்களாகத் தேங்கிய கழிவுப் பொருள்களைத் திறந்த வாகனத்தில் கொண்டு செல்வதாலேயே இந்த தூர்நாற்றம் வீசுவதாக மக்கள் தெரிவித்தனர்.

இந்தக் கழிவுப் பொருள்களை மூடிய வாகனத்தில் கொண்டு செல்லும் பட்சத்தில் துர்நாற்றம் வீசுவதை ஓரளவு தவிர்க்கமுடியும் என்றும் மக்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இதனால் தொற்று நோய்கள் பரவும் நிலையும் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கழிவுகளைக் கொண்டு செல்வதற்குப் பாதுகாப்பான மூடிய வாகனத்தைப் பயன்படுத்துவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(203-224)

# இலவசமாகப் பால் விநியோகம்

யாழ்ப்பாணம்,மே5

வலி.கிழக்குப் பிரதேசங்களில் சமுர்த்தி நிவாரணம் பெறுவோரில் வறுமைக்கோட்டின்கீழ் வாழும் குடும்பத்தினருக்கு இலவசமாகப் பால் வழங்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

கோப்பாய் கால்நடை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் உதவியுடன் இந்தப் பசுப்பால் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

நான்கு வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு 200 மில்லிலீற்றர் பால் வீதம் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. (203-224)

## இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின்

# காங்கேசன்துறைக் களஞ்சியத்திற்கு இரண்டு பவுசர்கள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம்,மே5

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் காங்கேசன்துறையில் அமைந்திருக்கும் எரிபொருள் நிரப்பும் களஞ்சியத்திற்கு மேலும் இரண்டு பெரிய பவுசர் வாகனங்கள் கப்பல் மூலம் கொண்டு வரப்பட்டுள்ளன.

சுமார் 19 ஆயிரத்து 800லீற்றர் எரிபொருள்களைக் கொண்டு செல்லும் பவுசர் வாகனங்கள் இரண்டே வந்து சேர்ந்துள்ளதாக மேற்படி எரிபொருள் நிரப்பும் களஞ்சிய வட்டாரங்கள் தெரிவித்தன.

குடாநாட்டில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையங்களுக்கு எரிபொருள்களை விநியோகிப்பதற்கென ஏற்கனவே ஐந்து பவுசர்கள் சேவையில் ஈடுபட்டு வந்தன.

தற்போதும் இரண்டு பவுசர் வாகனங்கள் வந்து சேர்ந்திருப்பதால் மொத்தம் ஏழு பவுசர் வாகனங்கள் சேவையில் ஈடுபடும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த பவுசர் வாகனங்கள் வந்து சேர்ந்ததால் எரிபொருள் விற்பனை நிலையங்களுக்கு எரிபொருள்களைத் தாமதம் இன்றி வழங்கக்கூடியதாய் இருக்கும் என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

(203- 224)

# மரக்கறிகளின் விலைகள் சற்று அதிகரித்தே காணப்படும்

## செய்கை முடிவடையும் 'சீசன்' காரணம்

யாழ்ப்பாணம்,மே5

தற்போதைய 'சீசனில்' மரக்கறி வகைகளின் விலைகள் சற்று அதிகரித்தே காணப்படும் என்று மாவட்ட விவசாயத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்போதைய பெரும்போக மரக்கறி செய்கை முடிவடைந்து விவசாயிகள் சிறுபோக செய்கையை மேற்கொள்வதற்கு தோட்ட நிலங்களைத் தயார்படுத்தி வருகின்றனர்.

இந்தக் காலநிலையில் மரக்கறிகளின் விலைகள் சற்று அதிகரித்தே காணப்படுவது வழமை என்றும் அந்த அதிகாரி மேலும் கூறினார்.

குறிப்பாகத் திருநெல்வேலி சந்தையில் மரக்கறிகளின் விலைகள் திடீரென அதிகரித்துக் காணப்படுகின்றன.

கத்தரி கிலோ 200 ரூபாவாகவும், தக்காளிப்பழம் கிலோ 190 ரூபாவாகவும், பயிற் றங்காய் கிலோ 70 ரூபாவாகவும், பாவற் காய் கிலோ 80 ரூபாவாகவும் வெண்டிக் காய் கிலோ 80 ரூபாவாகவும், பச்சை மிள காய் கிலோ 40 ரூபாவாகவும், வெங்காயம் கிலோ 50 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றன.

(203-224)

# கால்நடைப் பண்ணையாளர்களுக்கு கடன் வசதித் திட்டம் அறிமுகம்

யாழ்ப்பாணம்,மே5

கோப்பாய் கால்நடை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் கால்நடை பண்ணையாளர்களுக்குக் கடன் வசதி திட்டம் ஒன்றை அறிமுகம் செய்து வைத்துள்ளது.

மேற்படி சங்கத்தின் தலைவர் கே.சிவபாலன் இத்தகவலைத் தெரிவித்தார்.

இலங்கை வங்கியின் உதவியுடன் இந்த கடன் வழங்கும் திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

முதற்கட்டமாக வலி.கிழக்கு பிரதேசத்தைச் சேர்ந்த கால்நடை வளர்ப்போர் பண்ணையாளர்கள் 16 பேருக்கு இக்கடன் வசதி வழங்கப்படும்.

ஒவ்வொரு பண்ணையாளர்களுக்கும் குறைந்தது நான்கு லட்சம் ரூபாவுக்கு உட்பட்ட நிதி கடனாக வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கால்நடை வளர்ப்பை ஊக்குவிக்கும் முகமாகவே இக்கடன் திட்டம் அறிமுகம் செய்துவைக்கப்படவுள்ளதாகவும் சங்கத் தலைவர் கூறினார். (203-224)

# தென்மராட்சி வலயப் பாடசாலைகளில் உலக வங்கியினால் அபிவிருத்திப் பணிகள்

யாழ்ப்பாணம்,மே.5

உலக வங்கியினர் தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த பத்துப் பாடசாலைகளில் அபிவிருத்திப் பணிகளுக்கென நிதி ஒதுக்கீடு செய்துள்ளனர்.

''கற்கைத் தாரகை'', அறிவுக் கோபுரம் என்னும் கட்டுமான நிகழ்ச்சித் திட்டத்தின் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட வுள்ளன.

நாவற்குழி மகாவித்தியாலயத்தில் தரம் 11 மாணவர்களுக்கு விஞ்ஞானகூடம் அமைத்தல், சரசாலை ஸ்ரீகணேசா, கைதடி கலைவாணி வித்தியாலயம், இடைக் குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியால யம் ஆகியவற்றின் கட்டடத் திருத்தம், கல்வயல் சண்முகானந்தா வித்தியாலயம், குடமியன் அ.த.க. பாடசாலை ஆகியவற்றில் வகுப்பறையைக் கணனி செயற்பாட்டு அறையாக மாற்றுதல்,

மிருசுவில் அ.த.க. பாடசாலையில் தற்காலிக வகுப்பறைத் தொகுதி அமைத்தல், மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட வகுப்பறை மிகுதி வேலை, மந்துவில் றோ.க.த.க பாடசாலை வகுப்பறைக் கட்டட விறாந்தை திருத்தம், வரணி ம.வியில் செயற்பாட்டறை, ஒன்றுகூடல் மண்டபம் திருத்தம் ஆகிய வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

(203-207)

# நாய்களுக்குத் தடுப்பூசி

யாழ்ப்பாணம்,மே5

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் அமைந்த பஸார் பொதுச்சுகாதாரப் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி கட்டம் கட்டமாகப் போடப்பட்டு வருகின்றது.

இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை யாழ்.வீதி ஞானக்குழந்தை இல்லம், பாலர் பாடசாலை முன்பாகச் சிறாம்பியடி லேனிலும், இன்று பிற்பகல் 2 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணிவரை கலைப் புலவர் வீதியிலும் நாளை புதன்கிழமை காலை 9 மணிதொடக்கம் நண்பகல் 12 மணிவரை ஜே/80 பெருமாள் கோயில் வடக்கு வீதியிலும், பிற்பகல் 2 மணிதொடக்கம் 3.30 மணிவரை நாவலர் சிகிச்சை நிலையம் கன்னாதிட்டி, காளிகோயிலடியிலும் தடுப்பூசிகள் போடப்படவுள்ளன. (201)

# யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கான மெய்வன்மைப் போட்டி இன்று ஆரம்பம்

வலி.வடக்கு,மே5

யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான மெய்வன்மைப் போட்டிகள் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளன. இப்போட்டிகள் நாளையும், மறுதினமும் இடம்பெறவுள்ளன.

இன்று முதல் நாள் இடம்பெறவுள்ள போட்டிகளின் விவரங்கள் வருமாறு:

11, 13 வயதுப் பிரிவு ஆண்கள், பெண்களுக்கான 75 மீற்றர் ஓட்டப் போட்டி, தெரிவு இறுதிப்போட்டிகள்.

13, 15, 17, 19, 21 வயதுப் பிரிவு ஆண்கள், பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டி, தெரிவு இறுதிப்போட்டிகள்.

13, 15, 17, 19, 21 வயதுப் பிரிவு ஆண்கள், பெண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப் போட்டி, தெரிவு இறுதிப்போட்டிகள்.

11, 13, 17 வயதுப் பிரிவு ஆண்கள், பெண்களுக்கான உயரம் பாய்தல் போட்டிகள்.

11, 13, 15, 19 ஆண், 21 வயதுப் பிரிவு ஆண்கள், பெண்களுக்கான நீளம் பாய்தல் போட்டிகள்.

15, 17 ஆண், 19 பெண், 21 வயதுப் பிரிவு ஆண்கள், பெண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டிகள்.

17, 19, 21 வயதுப் பிரிவினர்களுக்கான 1500 மீற்றர் ஓட்டப் போட்டிகள்.

15, 17, 19, 21 வயதுப் பிரிவினர்களுக்கான குண்டு போடுதல் போட்டிகள்.

15, 17 பெண், 19, 21 வயதுப் பிரிவினர்களுக்கான தட்டெறிதல் போட்டிகள்.

15, 17, 19, 21 வயதுப் பிரிவினர்களுக்கான 4X400 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டிகள் தெரிவுகளும் இடம்பெறவுள்ளன.

(203-86)

# பட்டப்பகல் திருட்டுக்கள் மல்லாகத்தில் அதிகரிப்பு

வலி.வடக்கு,மே5

மல்லாகம் பகுதியில் கடந்த சில நாள்களாக இடம்பெறும் பட்டப்பகல்நேர திருட்டுக்களினால் பொதுமக்கள் பெரும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்தவாரம் இரண்டு வீடுகளுக்குள் பட்டப்பகல் வேளையில் உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்து பணம், நகைகள், இலத்திரனியல் உபகரணங்களைத் திருடிச் சென்றுள்ளார்கள். (203-86)

# மரக்கறி விதைகள் அறுவடை

யாழ்ப்பாணம்,மே.5

குடாநாட்டு விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம் உற்பத்தி செய்த மரக்கறி விதைகள் முதற்கட்டமாக அறுவடை செய்யப்பட்டுள்ளன.

தக்காளி, வெண்டி, பயிற்றை, பாவல் மற்றும் சோளன் போன்ற மரக்கறி பயிர்களே அறுவடை செய்யப்பட்டதாக உற்பத்திக் கூட்டுறவுச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

அறுவடை செய்யப்பட்ட இந்த மரக்கறி விதைகள் கமநலசேவை நிலையங்கள் ஊடாக விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

(203-224)






வலி. தெற்கு பிரதேச சபையின் ஏற்பாட்டில் சுன்னாகம் பொது நூலகத்தில் அண்மையில் சர்வதேச மகளிர் தினம், சர்வதேச நாடக தினம் ஆகியன கொண்டாடப்பட்ட போது எடுக்கப்பட்ட படங்கள். வலி. தெற்கு பிரதேச சபை செயலர் திருமதி ச. சொக்கலிங்கம், [illegible] பவானி, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் ஆகியோர் உரையாற்றுவதை முதல் மூன்று படங்களிலும் காணலாம். கலை நிகழ்வின் ஒருகாட்சியையும் நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் இறுதி இரண்டு படங்களிலும் காணலாம். (படங்கள்: லிங்கன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூரில் மருத்துவ நிலையம் இன்று திறப்பு

யாழ்ப்பாணம், மே 5

நல்லூர் தியாகி அறக்கொடை நிறுவனத்தில் தாட்சாயினி இலவச மருத்துவ நிலையம் இன்று காலை 8.30 மணிக்கு நிறுவன பணிமனையில் திறந்து வைக்கப்படவுள்ளது.

தேசிய சர்வோதய சிரமதான சங்கத் தலைவர் கலாநிதி ஏ.ரி.ஆரியரத்ன நிலையத்தை திறந்து வைப்பார்.

வசதி குறைந்த நோயாளர்களுக்கு வைத்திய பரிசோதனையும் இலவச மருந்து வழங்கலும் இடம்பெறவிருக்கின்றன. (1)

## கைதடியில் இன்று இரத்ததானம்

நாவற்குழி, மே 5

கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலைய 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இரத்ததான நிகழ்வு இன்று நடைபெறுகின்றது.

இந்த நிகழ்வு சனசமூக நிலைய முன்றலில் மு.ப. 10 மணிக்கு நிலையத் தலைவர் அ.பெனடிக்ற் தலைமையில் இடம்பெறும்.

இரத்ததானம் வழங்கவிரும்பும் கொடையாளர்களையும், ஆர்வலர்களையும் கலந்து கொண்டு குருதி வழங்குமாறு நிலையத் தலைவர் கேட்டுள்ளார். (1-7-288)

## நன்றி நவிலலும் அந்திரேட்டி அழைப்பும்

தோற்றம் 25 ★ 09 ★ 1947



மறைவு 05 ★ 04 ★ 2009

### அமரர் செல்லத்துரை நல்லநாதன்

கடந்த 05.04.2009 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் மற்றும் தொலைபேசி, தபால்கள் மூலமும் தொடர்பு கொண்டு எம்முடன் துயரைப்பகிர்ந்து கொண்டவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்களை வெளியிட்டோருக்கும் எமது நன்றிகளை தெரிவிப்பதுடன் இன்று 05.05.2009 செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

2ஆம் ஒழுங்கை,
பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு.

குடும்பத்தினர்.

## Personal Class

தரம் I-A/L வரையான மாணவர்களுக்கு English Personal Class உம் Spoken with Grammar கற்க விரும்புபவர்களுக்கும் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.

Note:-A/L 2010,2011 மாணவர்கள் Group ஆகவும் சேர்ந்து கற்கலாம். மேலதிக விபரத்துக்கு ஆசிரியரைத் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:- ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. தொ.பே:- 0778716113

## வைத்திய சேவை

வாதரோகங்கள், சருமரோகங்கள், ஆஸ்த்மா, நீரிழிவு, குழந்தைகளின் ரோகங்கள், உடல் மெலிவு, உடல் பருமன், தலைமுடி உதிர்தல், தலைமுடி நரைத்தல், மற்றும் நாள்பட்ட வியாதிகளுக்கு சிறந்த சிகிச்சை அளிக்கப்படும். நாடுங்கள்! நலமடையுங்கள்!!

டாக்டர் த.சிவானந்தன்,
"கோப் கிளினிக்"
5, வைமன் வீதி, நல்லூர்.

## STUDY IN INDIA

**Brindavan College**

affiliated to Bangalore University

B.Sc. Genetics / Biotech / Microbio / Comp. Science
B.B.M. Business Management
B.C.A. Computer Application
B.Com. Commerce + Computer

Co-ordinating office: 285 C-1/1, Stanley Tilakaratne Mw. Nugegoda.
Tel: 0777-317043, 011-4580270

## நீங்களும் Engineer

பதிவுகள் 07.05.2009 முன் நேரில்

★செயன்முறையுடன் கூடிய விரைவான வகுப்புக்களில்..
introducation to Network,Network Cabling,
Installing Windows Server 2003,2008 & Vista
Creating Network Connections
Installing Active Directory Services
Creating and Managing Domain Accounts
Shared Files and Folders(Shared Folder Permissions,Data Folders, Administrative Shared Folders, Combining Shared Folder Permissions and NTFS Permissions)
Delegating Administrative Control........Etc

★Microsoft நிறுவன அதிபர் Bill Gatesஇன் கையொப்பத்துடன் கூடிய சர்வதேச தர சான்றிதழ்
★Network Manager, System Admin., System Engineer போன்ற வருமானம் கூடிய வேலைவாய்ப்பு
★வெளிநாட்டு விசாவிற்கான மேலதிக புள்ளிகள்.
★USA,UK, பெங்களூர் பல்கலைக்கழகங்களில் BSc,MSc
*தேர்ச்சி பெறும் அனைவருக்கும் Student Visa, Work Permit Carrier Guidance

விபரங்களுக்கு நேரில்
324, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்
பரமேஸ்வரா சந்தி அருகில், Bus Route - 764

MCS
Supported By UNDP/JRRP

## கண்ணீர் அஞ்சலி

வலி. மேற்கு பிரதேச செயலகத்தில் (பண்ணாகம் ஜே/ 175) கிராம அலுவலராகக் கடமையாற்றும் திருமதி பரமேஸ்வரன் பிரதீபா அவர்களின் அன்புத்தாயார்

### திருமதி குணரத்தினம் றஜனி

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம்,
வலி.மேற்கு. சங்கானை.

பிரதேச செயலரும் உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கத்தினரும்.

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

வையகத்தில் 20 ★ 01 ★ 1942



வானத்தில் 29 ★ 04 ★ 2007

### அமரர் கணபதி சின்னையா

தந்தையே என அழைத்து இறுமாந்தோம்!
எம்மைப் பிரிந்தீர் என்ன செய்வோம்?

கைதடி தெற்கு

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(850-11)

## மரண அறிவித்தல்



### ஆபரணம் யோவான்பிள்ளை (இராசதுரை)

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் யாழ்.இராசாவின் தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஆபரணம் யோவான்பிள்ளை(இளைப்பாறிய புகையிரத ஊழியர்) 03.05.2009 ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் அன்னை தெரேசா முதியோர் இல்லத்தில் காலமாகிவிட்டார். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

22, சென்.பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்: அன்ரன் யோகநாதன் (மகன்) (றஞ்சன் - சாரதி).

## மரண அறிவித்தல்



### திருமதி சண்முகநாதன் நாகரத்தினம்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை, நீராவியடி 110, அரசடி வீதியைச் சேர்ந்தவரும் தற்போது லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகநாதன் நாகரத்தினம் 01.05.2009 அன்று லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சட்டத்தரணி சண்முகநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற செல்லத்துரை - வள்ளியம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற அம்பிகைபாகன் - அன்னபூரணி தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற தையல்நாயகி, காலஞ்சென்ற நாகேஸ்வரி மற்றும் பொன்னுத்துரை (Canada) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற வைத்திலிங்கம், காலஞ்சென்ற செல்லப்பா, காலஞ்சென்ற கிருஷ்ணலீலா ஆகியோரின் மைத்துனியும் கணேசலிங்கம் , பாலகௌரி (UK), தயாகௌரி (Canada), ஜெயகௌரி (Canada), ஆகியோரின் சிறிய தாயாரும். குமுதினி (Australia), நளாயினி (Canada), செல்வநாயகி, மனோகரன் (UK), கணேசானந்தகுரு (Canada), மகிந்தன் (Canada), மயூரன் (Australia), கேசவன் (Canada), ஆகியோரின் மாமியாரும். சுதர்சன், வசந்தன் - ரேணுகா, சக்திகுமார் - சுமங்கலா (UK), ஜனகன்-கீர்வாணி (UK), திலீபன் (UK), நிருபா (UK), மயுரன் (Canada), மகிலா (Canada), பிரனித்தா (Canada), பௌமி (Canada), கோகுல் (Canada), கஸ்தூரி (Canada), ஆகியோரின் பேர்த்தியும் சஷினி, துஷானி, கீர்த்தனா (UK) ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 07.05.2009 வியாழக்கிழமை HENDEN, LONDON இல் பிற்பகல் 12.00-03.00 மணிக்கு நாடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: வை.கணேசலிங்கம் (பெறாமகன்).
T.P No:00442089539608

### போட்டி ஒத்திவைப்பு

மண்டுவில, மே 5

தென்மராட்சி வலயப் பாடசாலைகளிடையே நாளை மறுதினம் வியாழன் நடைபெற இருந்த உடற்பயிற்சிப் போட்டி எதிர்வரும் 11 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு பிற்போடப்பட்டுள்ளது.

மட்டுவில் சந்திரபுரம் ஸ்கந்தவரோதய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற இருந்த மேற்படி போட்டியே எதிர்வரும் 11 ஆம் திகதி அதே மைதானத்தில் காலை நடைபெற ஏற்பாடாகி உள்ளதாக கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (1-59)

### 'கோப்சிற்றி' திறப்பு விழா

மண்டுவில், மே5

மட்டுவில் கமலாசினி பாடசாலைக்கு அண்மையில் கோப்சிற்றி ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

நாளை புதன்கிழமை காலை 8.00 மணியளவில் யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம் மேற்படி நிலையத்தை நாடாவெட்டித் திறந்து வைப்பார்.

மேற்படி நிலையத்தை சாவகச்சேரி ப.நோ.கூ. சங்கத்தினர் ஆரம்பித்து வைக்கின்றனர். (1-58)


Special Offer!

Dulux Pentalite Plus




"அதிகம் பூசலாம்"
"அதிகம் பரவிக்கலாம்"

4 லீற்றர் வாங்கினால் Special Offer! 1/2 litre free

10 லீற்றர் வாங்கினால் Special Offer! 1 litre free

AkzoNobel
Tomorrow's Answers Today

CIC தயாரிப்புகளான பெயின்ற் வகைகளை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

சிவன் மோட்டோர்ஸ் ஸ்ரோர்ஸ்

இல.70/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# யுத்த நிறுத்த அழுத்தங்கள் அதிகரிப்பதால் மேற்குலக நாடுகள் மீது இலங்கை அதிருப்தி!

## அதனால் சீனா, ஈரான், லிபியா பக்கம் மஹிந்த அரசு நாட்டம்

கொழும்பு, மே 05

வன்னியில் உடனடியாக யுத்தத்தை நிறுத்துமாறு, மேற்குலக நாடுகள் தொடர்ச்சியாக அழுத்தங்களைக் கொடுத்து வருவதால் அந்த நாடுகள் மீது இலங்கை அரசு கடும் அதிருப்தியடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் மஹிந்த ராஜபக்ஷவின் அரசு, கடன்கள் மற்றும் ஏனைய உதவிகளுக்காக சீனா, ஈரான், லிபியா போன்ற நாடுகளின் பக்கம் தனதுகவனத்தைத் திருப்பியிருப்பதாக ஏ.எவ்.பி. செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக ஏ.எவ்.பி. செய்திச் சேவை மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தம் குறித்து தனது பாரம்பரிய மேற்குலக சகாக்கள் தீவிரமாக விமர்சிக்கத் தொடங்கியுள்ளதையடுத்து, இலங்கை அரசு வெளிநாட்டு உதவிக்காக ஈரான்,லிபியா,மற்றும் சீனா பக்கம் சாயத் தொடங்கியுள்ளது.

பல மேற்குலக நாடுகள் விடுதலைப் புலிகளைத் தடைசெய்துள்ளதுடன் அவர்களுடைய நிதி திரட்டும் நடவடிக்கைகளையும் முடக்கியுள்ளன.

எனினும், யுத்தநிறுத்தம் குறித்து அமெரிக்காவும், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் விடுக்கும் வேண்டுகோள் குறித்து இலங்கை அரசு கடும் அதிருப்தி கொண்டுள்ளது.

**புலிகளைக் காப்பாற்ற முயல்வதாக அதிருப்தி**

37 வருட கால யுத்தத்தில் தற்போது தான் வெற்றியின் விளிம்பில் நிற்பதாகக் கருதும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா போன்ற நாடுகள் விடுதலைப்புலிகளைக் காப்பாற்ற முயல்கின்றன எனக் கருதுகின்றார்.

''மேற்குலகுடன் மிகவும் நெருக்கமான உறவுகள் காணப்பட்டன. எனினும், அவர்களது எதிர்ப்புணர்வு குறித்து இன்று நாங்கள் ஏமாற்றமடைந்துள்ளோம்'' எனத் தெரிவிக்கிறார் முன்னாள் மேலதிக வெளிவிவகார செயலாளர் நந்த கொடகே. ''மேற்குலகின் எதிர்ப்புணர்வு காரணமாக நாங்கள் ஈரானை நோக்கிக் கவனத்தைச் செலுத்துவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். சீனா எப்போதும் எங்களுக்கு ஆதரவளித்துள்ளது.லிபியாவைக் கூட நாடுகிறோம். ஜப்பான் எங்களைப் புரிந்து கொண்டுள்ளது'' என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டுகிறார்.

**முழுமனதுடனான ஆதரவுக்கு நன்றி**

சீனா, ஈரான், இந்தியா, லிபியா, ரஷ்யா, பாகிஸ்தான் மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளின் முழுமனதுடனான ஆதரவுக்கு இலங்கை நன்றி தெரிவிப்பதாக பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளம் சமீபத்தில் குறிப்பிட்டிருந்தது.

''அவர்கள் எமது நிலைமையைப் புரிந்து கொண்டு எம்மீது நம்பிக்கை வைத்திராவிட்டால் பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்தில் எம்மால் இவ்வளவு தூரம் முன்னேறியிருக்க முடியாது'' என்றும் அது தெரிவித்தது.

சமீபத்தில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட ஜப்பானின் விசேட சமாதானத் தூதுவர் யசூசி அகாஷி சமாதான முயற்சிகளின் நிலைமைக்கும் இலங்கைக்கான நிதியுதவிக்கும் இடையில் எவ்வித தொடர்புமில்லையெனத் தெரிவித்தார்.

சீனாவும் இலங்கைக்குப் பெருமளவு உதவி வழங்குகின்றது. இராணுவத்துக்கு சிறிய ரக ஆயுதங்களை அது வழங்கி வருகின்றது.

தற்போதைய நெருக்கடியின் போது ஐ.நா.பாதுகாப்புச் சபையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் கொண்டுவரப்படுவதை சீனா தடுத்துள்ளது.

ஆசிய நாடுகளின் உதவியுடன் கொழும்பு, ஈரானின் உதவியையும் எதிர்பார்க்கின்றது.

இலங்கையின் நீர் மின்சாரத் திட்டத்திற்கு உதவுவதற்கு ஈரான் முன்வந்துள்ளது.

''இலங்கை சர்வதேச நாணய நிதியத்துடன் கடனுதவி பேச்சுக்களை மேற்கொண்டுள்ளது. அந்தக் கடனுதவி கிடைக்காவிட்டாலும் நாங்கள் தப்பிடுவோம்'' என்கிறார் முன்னாள் இராஜதந்திரியொருவர்.

# ஒருவாரத்தில் 12 பேர் பட்டினியினால் பலி!

கொழும்பு, மே 05

முல்லைத்தீவு, மக்கள் பாதுகாப்பு வலயத்தில் தங்கியுள்ளவர்களில் கடந்த ஏழு நாள்களில் 12 பேர் பட்டினியினால் மரணமாகியுள்ளனர் என மருத்துவ வட்டாரங்களை மேற்கோள்காட்டி இணையத்தளங்கள் செய்தி வெளியிட்டன.

பட்டினியினால் மயக்கமடைந்த நிலையில் நட்டாங்கண்டல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களிலேயே 12 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் அவர்களில் ஆறு பேர் சிறுவர்கள் என்றும் மருத்துவ வட்டாரங்கள் மேலும் தெரிவித்ததாக தகவல்கள் கிடைத்துள்ளன.

போதிய அளவில் உணவு கிடைக்காமையினால் நோய்வாய்ப்பட்டு மயக்க நிலையில் பலர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் - அனுமதிக்கப்பட்டுள்ளவர்களில் பலருக்கு உடம்பு மெலிந்து எலும்புகள் தெரிவதாகவும் - நோய் எதிர்ப்பு சக்தி அவர்களது உடம்பில் இல்லை என்றும் - வைத்திய வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. அதே வேளை - அவசர சிகிச்சை பெற வேண்டிய 500 பேர் செஞ்சிலுவைச் சர்வதேச குழுவின் கப்பலை எதிர்பார்த்துக் காத்திருப்பதாகவும் இணையத்தளத் தகவல்களில் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

# இருவரை சுட்டுக்கொன்ற நபர் தானும் சுட்டுத் தற்கொலை

மட்டக்களப்பு, மே 05

காத்தான்குடியில் ராசா அலிம் வீதியில் நேற்றுக்காலை 7.45 மணியளவில் தனது மாமனாரையும் அவரது சகோதரரையும் சுட்டுக் கொன்ற மருமகன், பின்னர் தன்னைத்தானே சுட்டுத்தற்கொலை செய்து கொண்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இஸ்லாமிய மதத்தலைவரும், காத்தான்குடி ஜாமியதுல் ஜமாலியா அரபுக் கல்லூரியின் அதிபருமான சேகு முகமது மீரான் முதலியார் (வயது 65), அவரது சகோதரன் சேகு முகமது மஜ்ஜீன் (வயது 66) ஆகியோரே சுட்டுக்கொல்லப்பட்டவர்கள்.

கனிகா ஷாஜஹான் (வயது 38) என்பவர் அவர்கள் இருவரையும் சுட்டுக் கொன்ற பின்னர் தானும் சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

இத் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்படும் ரி-56 ரக துப்பாக்கியை பொலிஸார் மீட்டனர். குடும்பப் பிரச்சினை காரணமாகவே இச் சம்பவம் இடம் பெற்றிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டனர். (அ-சி)

# நேபாளப் பிரதமர் இராஜிநாமா



காத்மண்டு, மே 05

நேபாள இராணுவத் தளபதி ருக்மன் குட் கட்டாவல் பதவி நீக்கப்பட்ட விடயத்தினால் உருவான சர்ச்சையைத் தொடர்ந்து அந்நாட்டுப் பிரதமர் பிரச்சண்டா தமது பதவியை இராஜிநாமாச் செய்துள்ளார்.

இராணுவத் தளபதியின் நடவடிக்கைகள் மீது அதிருப்தி அடைந்த பிரதமர் பிரச்சண்டா தலைமையிலான நேபாள அரசு, அவரை நேற்றுமுன்தினம் பதவி நீக்கியது. அவரது பதவிநீக்கத்தை எதிர்க்கட்சிகள் உட்படப் பல்வேறு தரப்பினரும் எதிர்த்தமையால் அங்கு பெரும் பரபரப்பும் ஆங்காங்கே களேபரங்களும் ஏற்பட்டன.

இராணுவத் தளபதியின் பதவி விலக்கலை ரத்துச் செய்து அவரது பதவியை நீடிக்குமாறு நேபாளத்தின் 18 கட்சிகள் ஜனாதிபதியிடம் கூட்டாக வேண்டுகோள் விடுத்தன. அதனையடுத்து இராணுவத் தளபதி ருக்மன் குட் கட்டாவல்லின் பதவியை நீடித்து உத்தரவிட்டார் ஜனாதிபதி.

இதனாலேயே ஜனாதிபதி மீதான தமது அதிருப்தியை வெளிப்படுத்துமுகமாக பிரதமர் பதவி விலகினார் என்று அறிவிக்கப்படுகிறது. (அ-சி)

# ஐ.தே.க. உறுப்பினர்கள் இன்று பதவிப் பிரமாணம்

கொழும்பு, மே 05

மேல்மாகாணசபைத் தேர்தலில் வெற்றி பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் மாகாண சபை உறுப்பினர்கள் இன்று சத்தியப்பிரமாணம் செய்கின்றனர்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு ஐ.தே.கவின் தலைமையகமான ஸ்ரீகொத்தாவில் இந்நிகழ்வு இடம் பெறும்.

நடந்து முடிந்த மேல்மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி 30 ஆசனங்களை வென்றது.

கொழும்பு மாவட்டத்தில் 15 ஆசனங்களும், கம்பஹாவில் 10 ஆசனங்களும் மற்றும் களுத்துறையில் 05 ஆசனங்களும் இவற்றுள் அடங்குகின்றன.

2004 ஆம் ஆண்டு மேல்மாகாண சபைத் தேர்தலுடன் ஒப்பிடுகையில் இம்முறை தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி ஒன்பது ஆசனங்களை இழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-சி)

# மேல்மாகாண முதலமைச்சராக பிரசன்ன ரணதுங்க பதவியேற்பு

## அலரிமாளிகையில் நேற்று வைபவம்

கொழும்பு, மே 05

மேல்மாகாணசபைத் தேர்தலில் அரசின் சார்பில் கம்பஹா மாவட்டத்தில் போட்டியிட்டு அதிகளவு விருப்பு வாக்குகளைப் பெற்ற பிரசன்ன ரணதுங்க மேல்மாகாண முதலமைச்சராக நேற்று ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டார்.

அவருக்கு மேலும் பல அமைச்சுப் பொறுப்புகள் வழங்கப்பட்டதோடு நான்கு அமைச்சர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி முதலமைச்சரான பிரசன்ன ரணதுங்க நிதி, கல்வி, நீதி, சமாதானம், மாகாணசபை நிர்வாகம் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜெகத் திலகசிறி பெரேரா சுகாதாரம், தேசிய வைத்தியம், நலன்புரி, மகளிர் விவகாரம் மற்றும் சிறுவர் பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

உபாலி கொடிகார போக்குவரத்து, விளையாட்டு, இளைஞர் விவகாரம், கலாசாரம், கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் உணவு விநியோக அமைச்சராக நியமிக்கப் பட்டுள்ளார்.

நிமால் லான்ஸா மின்சக்தி எரிசக்தி, வீடமைப்பு, மீன்பிடி மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

உதய கம்மன்பில்ன விவசாயம், சுற்றாடல், நீர்ப்பாசனம், விலங்கு உற்பத்தி மற்றும் தொழில் அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்தோடு அரசின் சார்பில் தெரிவுசெய்யப்பட்ட ஏனைய உறுப்பினர்களும் நேற்று சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

# காட்டுயானை தாக்கி இருவர் 'பலியாகினர்

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ரிதிதென்ன கிடச்சிமடு வயற் பிரதேசத்தில் காட்டுயானை ஒன்று தாக்கியதில் இரு விவசாயிகள் அந்த இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

நேற்று அதிகாலை ஒரு மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் ஓட்டமாவடியைச் சேர்ந்த நாகூர்த்தம்பி நஜீம் (வயது - 39) மற்றும் மீராவோடையைச் சேர்ந்த முகமது காசிம் காதர் முகைதீன் (வயது - 38) ஆகியோரே உயிரிழந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறிப்பிட்ட இருவர் உட்பட மூன்று பேர் வயல்வாடியில் காவல் கடமையின் நிமித்தம் தங்கியிருந்தனர் என்றும் அவர்கள் உறக்கத்திலிருந்த வேளை அங்கு வந்த காட்டு யானையொன்று இருவரையும் மிதித்துக் கொன்றது என்றும் சம்பவத்தில் உயிர் தப்பியவர் பொலிஸாருக்கு அளித்த வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

# மட்டு. நகரில் நேற்று....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சதீஸ்குமார் தனுஷிக்கா (வயது - 08) என்ற இம்மாணவி கடந்த செவ்வாய்க் கிழமை பாடசாலைக்குச் சென்றிருந்த



வேளை கடத்தப்பட்டார். கப்பம் கோரப்பட்டுப் பின்னர் படுகொலை செய்யப்பட்டார். இம்மாணவியின் சடலம் கடந்த சனிக்கிழமை பாரதிபுரத்திலுள்ள பாழடைந்த கிணற்றுக்குள் இருந்து கண்டுபிடிக்கப்பட்டது.

இக் கொலைக்குக் கண்டனம் தெரிவித்தும், பாடசாலை[illegible] உறுதிப்படுத்தக் கோரியும் கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர்களைக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தவேண்டும் என்று வலியுறுத்தியும் மட்டக்களப்பு நலன் விரும்பிகள், பிரதேச தமிழ் மக்கள் மற்றும் பல்வேறு அமைப்புகளின் பெயர்கள் குறிப்பிடப்பட்டு துண்டுப்பிரசுரங்கள் பரவலாக விநியோகிக்கப்பட்டிருந்தன.

நேற்றைய ஹர்த்தால் காரணமாகப் பாடசாலைக்கு மாணவர்கள் சமுகமளிக்கவில்லை. ஆசிரியர்கள் மட்டுமே அதுவும் வழமையை விடக் குறைவாகவே சமுகமளித்துள்ளனர். கடைகள் திறக்கப்படவில்லை.

உள்ளூர், வெளியூர் போக்குவரத்துச் சேவைகள் பாதிக்கப்பட்டிருந்தன. அரச, தனியார் காரியாலயங்களில் ஊழியர்களின் வரவு மிகவும் குறைவாகவே காணப்பட்டது. பாதுகாப்பு வழமையை விடப் பலப்படுத்தப்பட்டிருந்தது. ஆங்காங்கே வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. மட்டு. நகரிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் இயல்பு நிலை முற்றாக ஸ்தம்பிதமடைந்திருந்தது. (அ-சி)

# வன்னி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியாகியுள்ளது.

இலங்கைக்கான ஐக்கிய நாடுகளின் வதிவிட பிரதிநிதி நீல் புஹ்னே விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பவை வருமாறு:-

கடந்த பத்து நாள்களாக ஊடகங்களில் வெளியாகியுள்ள புள்ளிவிவரங்கள் தொடர்பாக கொழும்பு அலுவலகத்திடம் பலர் கேள்வியெழுப்பியுள்ளனர்.

ஐக்கிய நாடுகளின் உள்ளகப் பணிகளுக்கான ஆவணத்திலிருந்தே இந்தப் புள்ளிவிவரங்கள் பெறப்பட்டன என்று அதன் மனிதாபிமான விவகாரங்களுக்கான தலைமையதிகாரி ஜோன் ஹோம்ஸ் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்தப் புள்ளி விவரங்கள் முழுமையாக நம்பகத்தன்மை மிக்க விதத்தில் சுயாதீனமாக உறுதிப்படுத்த முடியாதவை. மோதல் நடைபெறும் பகுதிகளில் உள்ள பொதுமக்களை எவரும் சென்றடைய முடியாதமையே இதற்குக் காரணம்.

ஒரு குறிப்பிட்ட நிலைவரம் குறித்த ஒட்டுமொத்த மதிப்பீடு ஐ.நா. செயலாளர் நாயகத்தின் அறிக்கை மூலமாகவோ அல்லது மூத்த அதிகாரிகளின் அறிக்கை மூலமாகவோ வெளியாகும்.

கடந்த மூன்று மாதங்களாக இடம்பெறும் கடும் மோதல் பொதுமக்களுக்கு ஏற்படுத்தியுள்ள இழப்பு குறித்து அவர்கள் தொடர்ச்சியாக தமது கவலையைத் தெரிவித்து வந்துள்ளனர்.

பொதுமக்களை பாதுகாப்பதற்கான அதன் கடமையை நிறைவேற்றுவதற்கு இலங்கை அரசிற்கு முழுமையாக ஒத்துழைப்பு வழங்குவதில் ஐ.நா அர்ப்பணிப்புடன் உள்ளது. ஆனால் உயிரிழந்தோர் தொடர்பான புள்ளி விவரம் எதனையும் ஐ.நா. வெளியிடவில்லை. (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேற்றைய விமான, ஷெல் தாக்குதல்களில் முள்ளிவாய்க்காலில் 115 பேர் பலி! 113 பேர் காயம்!!

கொழும்பு, மே 5

முள்ளிவாய்க்கால் பகுதியில் நேற்று மேற்கொள்ளப்பட்ட விமான மற்றும் ஷெல் தாக்குதல்களில் 115 பேர் கொல் லப்பட்டதுடன் 113 பேர் காயமடைந்துள் ளனர் என இணையத் தளங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

நேற்றைய தாக்குதல்கள் தொடர்பாக இணையத்தளங்களில் நேற்றிரவு வெளியான த்கவல்கள் வருமாறு:- முள்ளிவாய்க்கால் மக்கள் வாழ்விடங்கள் மீது விமானப் படையின் விமானங்கள் நேற்று குண்டுத் தாக்குதலை நடத்தியுள்ளன.

நேற்று திங்கட்கிழமை பிற்பகல் 1.30மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை 4 தடவைகள் 8 குண்டுகள் வீசப்பட்டுள்ள துடன் 16 ரொக்கட்டுக்களும் ஏவப்பட்டுள்ளன.

முள்ளிவாய்க்கால் வைத்தியசாலை மீது நேற்று அதிகாலை 1 மணியளவில் படையினர் நடத்திய ஆட்லெறி ஷெல் தாக்குதலில் 6 பேர் கொலை செய்யப்பட்டுள்ளதுடன் 11 பேர் படுகாய மடைந்துள்ளனர்.

சூழவுள்ள பகுதிகளில் நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல்களில் கொல்லப்பட்டவர்களின் 25 சடலங்கள் நேற்றுக் காலை மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்டன.

கடற்படையினர் நேற்றுக் காலை தொடக்கம் நடத்திய ரொக்கட் தாக்குதல்களில் 47 பேர் கொல்லப்பட்டதுடன் காய மடைந்த நிலையில் 56 பேர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விமானப் படையினரின் குண்டுத் தாக்குதல்களில் 32 பேர் கொலை செய்யப்பட்டதுடன் 46 பேர் காயமடைந்தனர்.

விமானப் படையினரின் தாக்குதல்களில் மக்கள் தங்கியிருந்த 12 தற்காலிக கூடாரங்கள் அழிந்துள்ளன. விமானப் படையினர் ஏவிய பரா வெளிச்சக்குண்டு தற்காலிக கூடாரம் ஒன்றின் மீது வீழ்ந்ததில் எரிந்து நாசமாகியுள்ளது.

கூடாரத்துக்குள் இருந்த 5 பேர் உடல் கருகி உயிரிழந்துள்ளனர் - என்றுள்ளது. (அ-1)

## நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளோர் குறித்து கலந்துரையாடல்: கூட்டமைப்பினர் இன்று காலையே முடிவு செய்வர்

கொழும்பு, மே 5

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வந்து வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளோரின் நிலைமை தொடர்பாக ஆராய்வதற்காக இன்று மாலை ஜனாதிபதி நடத்தவுள்ள கலந்துரையாடலில் கலந்து கொள்வது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று காலையே முடிவு செய்யவிருக்கிறது.

நேற்று நண்பகல் கூடிய கூட்டத்தில் ஜனாதிபதி நடத்தவுள்ள கலந்துரையாடலில் பங்குபற்றுவதா இல்லயா என்பது குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

சிவில் சமூகப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடிய பின்னர்முடிவு எடுக்கப்படும் என அப்போது தீர்மானிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து தமிழ்க் கூட்டமைப்புப் பிரதிநிதிகள்நேற்று மாலைசிவில் சமூகப் பிரதிநிதிகளுடன் கலந்து ரையாடினர்.

ஜனாதிபதி இன்று மாலை எற்பாடு செய்துள்ள கலந்துரையாடலில் சிவில் சமூகப்பிரதிநிதிகளுக்கு அழைப்புக் கிடைக்கவில்லை என அவர்கள் கூட்டமைப்பினரிடம் தெரிவித்தனர்.

இன்று அவர்களுக்கு அழைப்புக் கிடைக்கும் பட்சத்தில் பின்னர் கூடி முடிவு செய்வது என கூட்டமைப்பினர் தீர்மானீத் துள்ளனர் என அறியவந்தது.

அதேவேளை -

ஜானதிபதி நடத்தும் கலந்துரையாடலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் பங்குபற்றும் வாய்ப்பு குறைவாகவே உள்ளது என்று கூட்டமைப்பு எம.பி. ஒருவர் நேற்றிரவு தெரிவித்துள்ளார். (அ-1)

## அதிபர் சேவை நியமனம் தொடர்பான வழக்குத் தீர்ப்பு நேற்று வெளியானது

அச்சுவேலி, மே 5

இலங்கை அதிபர் சேவை வகுப்பு 2:II நியமனம் தொடர்பான உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் உயர் நீதிமன்றம் நேற்று திங்கட்கிழமை வழங்கியுள்ள தீர்ப்பு கல்வி அமைச்சின் முறைகேடான செயற்பாடுகளுக்கு கிடைத்த பலத்த அடியாகும் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜோசேப் ஸ்ரான்லின் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில் -இலங்கை அதிபர் சேவை வகுப்பு 2:II பரீட்சை பெறுபேறுகளுக்கு 155 புள்ளி வெட்டுப்புள்ளியாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அதிபர் சேவை நியமனத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் சத்தியக் கூற்றுக்களுடன் மேன்முறையீடு செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருக்கிறது.

நேர்முகப் பரீட்சையில் பாதிக்கப்பட்டவர்கள் உரியமுறையில் நிவாரணம் பெறுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்திருப்பதும் வரவேற்கத்தக்கது.

155 புள்ளிகளுக்கு குறைந்த நிலையில் எழுத்துப் பரீட்சையில் புள்ளிகளைப் பெற்று நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்கான பொறுப்பினை கல்வி அமைச்சு ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அதிபர் சேவை நியமனத்தில் வர்த்த மானி விளம்பரத்துக்கு முரணாக கல்வி அமைச்சு செயற்பட்டமையினால் தான் இந்த நிலை ஏற்பட்டது என தெரிவித்தார். (1-11)

## பாதுகாப்பு வலயத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மோதல்களில் சுமார் ஐம்பதினாயிரம் மக் கள் அங்கு சிக்குண்டுள்ளனர் என்று கருதப்படுகின்றது. எனினும் அங்கு மோதல்கள் தணிந்து கொள்வதற்கான அறிகுறி எதனையும் காண முடியவில்லை.

அந்தப் பகுதியில் இருந்து கிடைக்கும் தகவல்களின் பிரகாரம் கடந்த ஒருவாரத்தில் முன்னரை விட மோதல்கள் தீவிரமடைந்துள்ளன. அவற்றின் போது கனரக ஆயுதங்களும் இலகுரக ஆயுதங்களும் தாராளமாகப் பயன்படுத்தப்படுகின்றன - என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன - என்று ஐ.நாவின் பேச்சாளர் மரியா ஒகாபே நியுயோர்க்கில் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

ஓ.சி.எச்.ஏயின் பிந்திய - நேற்று - வெளியிடப்பட்ட புள்ளி விவரங்களின் பிரகாரம் 1 லட்சத்து 88 ஆயிரம் மக்கள் மோதல் பகுதியிலிருந்து வெளியேறி வவுனியாவில் அமைக்கப்பட்டுள்ள இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களைச் சென்றடைந்துள்ளனர். அவர்களில் சுமார் 1 லட்சத்து 86 ஆயிரம் மக்கள் முகாம்களில் தங்கியுள்ளனர். மற்றும் காயமுற்ற ஆயிரத்து 700 பேரும் அவர்களுக்குத் துணை யாகச் சென்றவர்களும் ஆஸ்பத்திரிகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

ஒரு வாரமாக மக்கள் வெளியேறி வரவில்லை

ஏப்ரல் மாதம் 27 ஆம் திகதிக்குப் பின்னர் மக்கள் எவரும் இடம்பெயர்ந்து வந்ததாக தக வல் இல்லை. அவ்வாறு வருவோரின் தகவல் களையும் புள்ளி விவரங்களையும் உடனுக்குடன் சேகரிப்பதற்கு தாமதம் ஏற்படுவதற்கு போதிய எண்ணிக்கையிலான தொண்டர்கள் இல்லாமையும் ஒரு காரணமாகும்.

இதேவேளை இடம்பெயர்ந்து வரும் மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொடுப்பதில் ஐ.நா. ஏஜென்சிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளன.உலக உணவுத் திட்டம் வவுனியாவில் தனது விநியோ கத்தை அதிகரித்து வருகிறது. இதேவேளை ஓமந்தையில் உள்ள சோதனைச் சாவடியில் மக்களுக்கு சமைத்த உணவு வழங்க அரசு ஏற்பாடு செய்துள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் அமைக்கப்பட்டுள்ள நலன்புரி நிலையங்களில் சுகாதார வசதிகள் படிப்படியாக மேம்படுத்தப்பட்டு வருகின்றன. பொக்குளிப்பான் நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கான நடவடிக்கைகளும் தீவிரமாக்கப்பட்டுள்ளன. மற்றும் சுகாதார வசதிகள் கல்விப் போதனைக் குரிய இட வசதிகள் என்பனவும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன.

குடாநாட்டில் இடம்பெயர்ந்த குடும்பங்கள் மீண்டும் சேர்ந்துகொள்வதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன - இவ்வாறு ஓ.சி.எச்.ஏ.இன். அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-7)

## வெள்ளவத்தையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேரில் 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என வெள்ளவத்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாரும்,இராணுவத்தினரும்இணைந்தே இந்த தேடுதல் நடவடிக்கையை மேற் கொண்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்டவர்களில் 7 ஆண்களும், 5 பெண்களும் அடங்குகின்றனர் என வெள்ளவத்தை பொலிஸார் தெரிவித்தனர்.

தமது ஆளடையாளங்களை உரிய முறையில் உறுதிசெய்ய தவறியவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (அ-சி)

## கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றிரவு 7.30 மணியளவில் ஆரம்பமான இந்த ஒத்திகை சுமார் ஒருமணி நேரத்திற்கு நீடித்தது. இதன்போது சிறியரக விமானமொன்று தாழ்வாகப் பறந்த அதேவேளையில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களிலிருந்து அதனைக் கண்டுபிடிக்கும் முகமாக ஒளி வீசப்பட்டது எனவும் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு நகருக்கும் வென்னப்புவவுக்கும் இடைப்பட்ட கொழும்பின் வட மேற்காகவுள்ள கடலோரப் பகுதிகளை மையமாக வைத்தே இந்த விமான எதிர்ப்பு ஒத்திகை விமானப் படையினரால் மேற்கொள்ளப்பட்டது என்றும், இதனால் குறிப்பிட்ட சில பகுதிகளில் மின்சாரமும் குறுகிய நேரத்திற்குத் துண்டிக்கப்பட்டது எனவும்

## பிரிட்டிஷ் நாடாளு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்கள் குழு அரசியல்வாதிகளுடனும்,சமூகப்பிரமுகர்களுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளது.

பிரிட்டனின் பல கட்சிகளையும் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடம்பெறுகின்ற இந்த குழுவில் பிரிட் டனின் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் டெஷ் பிரவுனும் இடம்பெறுகிறார்.

இலங்கைக்கான சிறப்புப்பிரதிநிதியாக இவரை பிரிட்டிஷ் பிரதமர் கோர்டன் பிரவுண் அறிவித்திருந்தார். ஆனால் இலங்கை அரசாங்கம் அதனை முன்னதாகவே ஏற்க மறுத்து விட்டது. தற்போது ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் மாத் திரந்தான் அவர் இந்தக் குழுவில் இடம் பெறுகிறார்.

ஐவர் கொண்ட இந்த குழுவினர் இன்று வடக்கில் உள்ள நலன்புரி நிலையங்களுக்கு சென்று நிலைமைகளை ஆராய்வார்கள் என்றும், அது தொடர்பாக கலந்துரையாடல்களை நடத்துவார்கள் என்றும் இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதரகம் கூறியுள்ளது.

இந்த குழுவில் இடம்பெறுகின்ற பிரித்தானிய கன்சேர்வேட்டிவ் (பழமைவாத கட்சியின்) உறுப்பினரான ஜோஞ் போர்க்கோவ் இந்த குழுவின் உறுப்பினர்கள் தம்மை இலங்கையின் நண்பர்களாகவே கருதுவதாக கூறியிருக்கிறார்.

இந்தக் குழுவினர் இன்றும் நாளையும் ஜனாதிபதி,எதிர்க்கட்சித் தலைவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடுவர். (1)

## போர் நிறுத்தம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மோதல் பிரதேசத்தில் உணவு மற்றும் மருந்துப் பொருள்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதால் ஆயிரக்கணக்கான மக்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று நடேசன் ரவிசங்கர் குருஜியிடம் தமது தொலைபேசி உரையாடலின் போது எடுத்துரைத்தார்.

நாங்கள் போர் நிறுத்தத்துக்கு தயாராகவே உள்ளோம். போர் நிறுத்தத்தை நடைமுறைப்படுத் தேவையான அனுசரணைப் பணியை மேற்கொள்ளுமாறு தங்களைக் கேட்டுக் கொள்கின்றோம் என்றும் நடேசன் ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜியிடம் தெரிவித்துள்ளார்.

கடந்தமாதம் 20 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட சுவாமிகள் வவுனியாவிலுள்ள நலன்புரி நிலையங்களுக்குச் சென்று அங்குள்ள மக்களின் நிலைமை தொடர்பாக கேட்டறிந்தார்.

அதன்பின் 23 ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அவர் சந்தித்து பேச்சு நடத்தியிருந்தார். (அ-1)

## கனடா விருத்த.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கனேடிய சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் பெவ் ஒடா அம்மையார் நேற்று ஒரு நாள் விஜயமாக கொழும்பு சென்றிருந்தார்.

அவர் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் ரோகித பொகெல்லாகம ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடினார்.

பேச்சுக்களை முடித்துக் கொண்டு திரும்பிய அமைச்சர் ஒட்டாவாவில் செய்தியாளர்களுடன் நடத்திய சந்திப்பின் போது தெரிவித்தவை வருமாறு:-

மோதல் பிரதேசத்தில் சிக்கியுள்ள 50 ஆயிரம் பொதுமக்கள் பாதுகாப்பான இடத்துக்கு வருவதற்கும் தொண்டு நிறுவனங்களின் பணியாளர்கள் அங்கு சென்று சேவையாற்றுவதற்கும் வசதியாக போர் நிறுத்தம் கொண்டு வர வேண்டியதன் அவசியத்தை அந் நாட்டு அரச தலைவர்களிடம் வலியுறுத்தினேன்.

நான் கூறியவற்றை அவர்கள் மிக அடக்கமாகக் கேட்டனர். ஆனால் போர் நிறுத்தம் குறித்து கருத்து எதனையும் அவர்கள் வெளிப்படுத்த விரும்பவில்லை என்பதை உணர்ந்தேன்.

இலங்கையின் பிரச்சினைக்கு இராணுவ நடவடிக்கை மூலம் தீர்வுகாண முடியாது என்றே நாம் நம்புகிறோம். இலங்கையில் உள்ள தமிழ் மக்கள் உட்பட சகல சமூக மக்களுக்கும் அரசியல் தீர்வு மூலமாக எட்டப்படும் முடிவின் மூலமே நிலைமை சீராகும் என்று இலங்கைத் தலைவர்களிடம் எடுத்துக் கூறினேன்.

பொதுமக்களும் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களும் பாதுகாப்பான பகுதிக்கு வருவதற்கு வழி வகுக்கும் வகையில் மோதல்களில் ஈடுபட்டுள்ள தரப்பினர் யுத்த நிறுத்தத்துக்குச் செல்லுமாறு கோரியுள்ளோம் - என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை -

இலங்கை வெளிவிவகார அமைச்சருடன் நடந்த பேச்சின் போது கனடாவில் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவான பிரச்சாரங்கள் முன்னெடுக்கப்படுவது குறித்து கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதில் அளித்த அமைச்சர் பெவ் ஒடா கூறியதாவது:-

2006ஆம் ஆண்டிலேயே விடுதலைப் புலிகள் இயக்கத்தை கனடிய அரசாங்கம் தடை செய்திருந்தது.

கனடாவில் பெரும் எண்ணிக்கையிலான தமிழ் மக்கள் வாழ்கின்றனர். அவர்களில் பெரும்பாலானோர் சிறந்த குடிமக்களாவர். அவர்கள் தாயகத்திலுள்ள தமது சொந்தங்களுடன் நெருங்கிய தொடர்புகளைப்பேணி வருவதை நாம் அறிந்துவைத்துள்ளோம்.

எனினும் ஒருசில விரும்பத்தகாத ச்க்திகள் மேற்கொண்டுவருகின்ற நடவடிக்கை தொடர்பாக இனங்கண்டு கொண்டுள்ளோம். அத்தகைய தரப்பினரின் செயற்பாடுகளை கனடா சகித்துக் கொள்ள மாட்டாது - என்றார். (அ-1)

THE SCIENCE CORNER
CLOCK TOWER LANE, JAFFNA
CHEMISTRY - 2009 A/L
அலகுத் சமநிலை
ஆரம்பம்- 06.05.2009
MON, WED, FRI - 6.30-7.30 a.m.
BY: RAJAH

புதியதோர் உதயம்
நியூட்டன் அக்கடமி
தரம் 1 முதல் O/L, A/L வரை
சகல வகுப்புக்களும் எமது 'SUPER GRADE' ஆசிரியர் குழுவினால் கற்பிக்கப்படும்.
ஆரம்பம் - 06/05/2009
புதன் கிழமை 3.30 p.m
★ அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

இன்று ஆரம்பம்
தமிழ்
இரு குழுத்தை
PAPER CLASS
செவ்., வியா. 10-11
அனுமதிகள்
வழங்கப்படுகின்றன.
விக்னா
52, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

பொருளியல் 2009
A/L
கருத்தரங்கு
(தடைமுறை விடயங்கள்)
08.05.2009 இல்
பிரிவு I- 8-11a.m.
பிரிவு II -1-4p.m.
பொருளியல்
K.பிரதீபன்(B.B.A)
NEW SCIENCE HALL,
பதிவுகள்
மேற்கொள்ளப்படுகின்றன.

GROUP CLASSES
A/L 2011
Physics
Mr.S.Uirovi
Com,Maths
Mr.M.Lingeswaran
2/1,மருதடி வீதி,
நல்லூர்.
0779955754,0776258074

CHEMISTRY => S.Vasu
A/L 2010
Organic
ஆரம்பம்
05.05.2009
Tue 4 p.m.
NEC
Clock Tower Road, Jaffna

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிவ்றவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.05.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

**நற்சிந்தனை**

"உன்னால் முடியும்"
முடியும் என்ற முழு நம்பிக்கையுடன் முடிவெடுத்து, திட்டமிட்டு, சுய கட்டுப்படுத்தலுடன் செயற்பாட்டில் இறங்கு: முடியாதது ஒன்றும் இல்லை என்னும் உண்மை உனக்கு வெளிச்சமாகும்.

க.பொ.த.உயர்தர
# கல்விச்சுடர்
05.05.2009 செவ்வாய்க்கிழமை
**Special Guidance For A/L 2009&2010**



க. பொ.த உயர்தர மாணவர்களுக்கென தனியாக வெளிவரும்
**கல்வி இணைப்பிதழ்**


## இவ்வார இணைப்பிதழில்.....


- ★ பொருளியல் பயிற்சி வினாத்தாள் கடந்தவார தொடர்ச்சி....
- ★ புவியியல் பகுதி - 11இன் கடந்தவார தொடர்ச்சி...
- ★ அளவையியலும் விஞ்ஞானமும் கொழும்பு வலய வினாத்தாள் - 1 (கொ.வ.நி)
- ★ இரசாயனவியலின் கொழும்பு வலய வினாத்தாள் 01இன் தொடர்ச்சி....
- ★ கணக்கீடு கொழும்பு வலய வினாத்தாள் - 01,இன் பகுதி - 11இன் தொடர்ச்சியும், பகுதி-1இன் விடைக்குறிப்புகளும்
- ★ மத்திய வைப்புத்திட்ட கம்பனியின் கட்டுரைத் தொடர்ச்சி...
- ★ பௌதீகவியலின் பொறியியல் வினாத்தொகுப்புத் தொடர்ச்சி....


கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாதிரிப் பரீட்சை - 2009 ஆகஸ்ட்
General Certificate of Education (Advance Level) Model Examination - 2009 August

# பொருளியல் - 1


ஆசிரியர்:-
V.முரளி B.A.Hons (Eco.Sp), M.A (Eco),
Co/St.Benedict's College, Col-13.


கடந்தவார தொடர்ச்சி (28.04.09)....
பகுதி - 11

01. 1) உற்பத்திக்கு குழிவான உற்பத்தி இயல்தகவு வளையி ஒன்று எதனை குறிப்பாக சுட்டிக்காட்டுகின்றது?
  2) சாதனஒதுக்கீடு, குறை தொழில் மட்டத்தினை உற்பத்தி இயல்தகவு எல்லைஒன்றில் விளக்குக?
  3) அரசினது பாதுகாப்பு செலவில் ஏற்பட்ட வீழ்ச்சியினை, உற்பத்தி இயல்தகவு வளையி ஒன்றின் உதவியுடன் விளக்குக.
  4) பயனானது அளக்கப்படக்கூடியது என்பதிலிருந்து நீர் விளங்கிக்கொள்வது யாது? இக் கூற்றினை நீர் ஏற்றுக்கொள்வீரா விளக்குக.

02. 1) கேள்விக்கோடானது மேலிருந்து கீழ் நோக்கியதான எதிர்க்கணிய சரிவுடையதாக காணப்படுவதற்கான காரணங்கள் எவை?
  2) யுத்தம் காரணமாக விவசாயிகளது வெங்காயத்தினது நிரம்பல் வீழ்ச்சியடைகின்றது. ஆனால், அவர்களது மொத்த விற்பனை வருவாய் மிக உயர்வாக இருக்கின்றது. இக் கூற்றினை நீர் ஏற்றுக்கொள்வீரா? விளக்குக.
  3) பண்டங்களுக்கிடையே நெகிழ்ச்சி வேறுபட்டுக் காணப்படுவதற்கான காரணங்கள் யாது?

03. குறித்த பண்டம் தொடர்பான விலை சார்புகள் தரப்படுகின்றன.
  QD = 250 - 50p, QS = -50 + 100p
  1) வரைபடத்தின் உதவியுடன் சமனிலை விலை தொகையைக்காண்க.
  2) அரசு பண்டத்தின் மீது கட்டுப்பாட்டு விலையாக ரூபா 1.50 இனை விதிக்கின்ற பொழுது சந்தையில் நிகழும் மாற்றம் யாது?
  3) இத்தொகையினை சந்தையில் நிரம்பல் செய்ய உற்பத்தியாளர் நிரம்பல் செய்ய தயாராக இ[illegible]கும் விலை யாது?
  4) இக் கட்டுப்பாட்டு விலையைப் பேணுவதற்கு அரசு இறக்குமதி செய்து வழங்க முன்வருமாயின், அதனது இறக்குமதி செலவு யாது?

04. 1) ''சந்தையே பொருளுக்கான பெறுமதியை தீர்மானிக்கின்றது'' என்ற கூற்றைத் தெளிவுபடுத்துக.
  2) ''x'' எனும் ஒரேயொரு பொருள் மட்டும் கொண்டுள்ள சந்தையினை எச்சந்தை அமைப்புக்குள் வகைப்படுத்துவீர்? உமது விடைக்கான காரணம் யாது?
  3) தனிநபர் கேள்வி, சந்தைக்கேள்வி என்பவற்றை வேறுபடுத்துக.

05. 1) பொதுப்பண்டங்களை அரசு மட்டுமே வழங்க முடியும். இக்கூற்றை விளக்குக.
  2) நல்ல வரியிடலில் காணப்படும் பண்புகள் எவை?
  3) வரி விதிப்பின் பொருளாதார விளைவுகள் எவை?
  4) நிறைபோட்டிச் சந்தையில் ஒரு நிறுவனத்தின் எல்லை வருமானம், சராசரி வருமானம் என்பன ஒன்றுக்கொன்று சமனாக காணப்படும் என்பதை விளக்குக.

06. ஒரு மூடப்பட்ட பொருளாதாரத்தில் பேரினப் பொருளாதாரத்தின் மாறிகள் கீழ்வருமாறு தரப்பட்டுள்ளன.
  முதலீடு (I) - 250B   அரசாங்க செலவீடு (G) - 300B
  நுகர்வு (செலவிடத்தக்க வருமானத்தில்) - ($C = 0.8yd$) 80%
  வரி. வருமானத்தில் ($T = 0.1y$) - 10% ஆக உள்ளது.
  1) பொருளூதாரத்தின் சமனிலை தேசிய வருமானம் யாது?
  2) இப்பொருளாதாரத்தில் சேமிப்புக்கும் முதலீட்டிற்கும் இடையிலான வேறுபாடு யாது?
  3) சமன்பாடு $S = I$, சமனிலை தொடர்பாக ஏன் ஒரு நிபந்தனையாக இல்லை?
  4) வரவு - செலவுத்திட்ட மீதி யாது?

07. 1) சந்தைத்தோல்வி, அரசாங்க தோல்வி என்பதனை விளக்குக.
  2) வரவு - செலவுத் திட்டமானது எவ்வாறு பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் என்பதை விளக்குக.
  3) எளிய பொருளாதாரத்தின் முதலீட்டுப் பெருக்கியினை குறிப்பிட்டு விளக்குக.

**வினாக்கள் நிறைவுபெற்றன.**

பொருளியல் பகுதி - 11இன் விடைக்குறிப்புகள் அடுத்தவாரம் வெளிவரும்....

### பொருளியல் பகுதி - 1 விடைக்குறிப்புக்கள் (28.04.09)

| | | | | |
|---|---|---|---|---|
| 01 - 4 | 02 - 5 | 03 - 4 | 04 - 2 | 05 - 4 |
| 06 - 4 | 07 - 1 | 08 - 3 | 09 - 1 | 10 - 4 |
| 11 - 4 | 12 - 1 | 13 - 3 | 14 - 1 | 15 - 3 |
| 16 - 4 | 17 - 1 | 18 - 2 | 19 - 1 | 20 - 3 |

## க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான வினா-விடை

# புவியியல்-02


ஆசிரியர்:-
L.C.JANJABEEL B.A (Hons), Geography (sp),
Toppur - Trincomalee
Former Lecturer in Jamiah Naleemiya, Beruwela.


பௌதிகப் புவியியல் கடந்தவாரத்தொடர்ச்சி (21.04.09)....
பகுதி-11

09. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றைப் பற்றிச் சுருக்கமான கட்டுரை எழுதுக.
  1) ஓசோன் படை குறைவுக்கான காரணங்களும் விளைவுகளும்.
  2) இலங்கையில் சூழலைப் பாதுகாத்து முகாமைப்படுத்துவதில் அரசசார்பற்ற நிறுவனங்களின் பங்கு.
  3) விருத்தியடைந்துவரும் நாடுகளில் நகர மயமாக்கலினால் சூழலில் ஏற்படும் பாதகமான விளைவுகள்.
  4) ரியோ உச்சி மாநாடும் சூழல் முகாமைத்துவமும்.

10. 1) மண்ணரிப்பின் பாதகமான விளைவுகள் எவை?
  2) மண்ணரிப்பினை எவ்வாறு மானிட நடவடிக்கைகள் துரிதப்படுத்துகின்றன என்பதைத் தென் ஆசியாவிலிருந்து உதாரணங்கள் காட்டி விளக்குக.
  3) மண்ணரிப்பினை இழிவளவாகக் குறைப்பதற்கு மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளை ஆராய்க.

11. 1) உயிர்ப்பல்வகைமை இழப்பினால் ஏற்படும் நான்கு பாதகமான விளைவுகளை எடுத்துக் கூறுக.
  2) விருத்தியடைந்துவரும் நாடுகளில் உயிர்ப்பல்வகைமை குறைந்து செல்வதற்கு ஏதுவாக அமையும் காரணிகளை உதாரணங்களுடன் விளக்குக.
  3) உயிர்ப்பல்வகைமையைப் பாதுகாப்பதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கைகளைச் சுருக்கமாத எடுத்துக்கூறுக.

12. 1) விருத்தியடைந்து வரும் நாடுகளின் நகரப்பகுதிகளின் பிரதான சூழற் பிரச்சினைகள் யாவை?
  2) நீர் பெயரிட்ட பிரச்சினைகளுள் ஏதேனும் ஒன்றினைத் தெரிந்து அப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளை விளக்குக.

13. 1) நிலச்சரிவு என்றால் என்ன?
  2) நிலச்சரிவுகளை ஏற்படுத்துகின்ற பிரதான காரணிகளை விவரிக்குக.
  3) நிலச்சரிவுகளை இழிவளவாக்குவதற்காக மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் பற்றி உதாரணங்களுடன் விளக்குக.

14. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினைத் தெரிந்து, அவை சூழல் முகாமைத்துவத்தில் பெறும் முக்கியத்துவத்தைக் குறிப்பாக எடுத்துக்கூறி சுருக்கக் குறிப்புக்கள் வரைக.
  1) ரியோ உச்சி மாநாடு (Earth Summit, 1992)
  2) புறூண்லண்ட் அறிக்கை
  3) இலங்கையின் சூழற் சட்டம் 1981


இவ் வெளியீடு தொடர்பான விமர்சனங்களுக்கும் கருத்துக்களுக்கும் 071-4273035, 0716850005 என்ற கையடக்கத் தொலைபேசி இலக்கத்துடன் காலை 9.30 தொடக்கம் மாலை 4.30 வரை தொடர்புகொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாதிரிப் பரீட்சை - 2009 ஆகஸ்ட்
General Certificate of Education (Advance Level) Model Examination - 2009 August

# அளவையியல் - 01 கொழும்பு வலய பரீட்சை வினாத்தாள்

பகுதி 1,11,111 ஆகியவற்றிலிருந்து குறைந்தது ஒரு வினாவையேனும் தெரிந்தெடுத்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

## பகுதி - 1

01. அ. எடுப்பு முரண்பாட்டு அடிப்படையில் பின்வரும் கூற்றுக்கள் சரியானவையா? பிழையானவையா? எனத் தீர்மானிக்குக. உங்கள் விடை சரி அல்லது பிழை என மட்டும் இருக்க வேண்டும்.
   1) எல்லா மனிதர்களும் பகுத்தறிவுடையவர்கள் ஆவர் என்பது உண்மையெனில் மனிதர்களும் பகுத்தறிவு உடையவர்கள் அல்ல என்பது பொய் ஆகும்.
   2) பல குதிரைகள் கொம்புடையன என்பது உண்மையாயின், குதிரைகள் அனைத்தும் கொம்புடையன என்பது உண்மையாகும்.
   3) வியாபாரிகள் எவரும் நேர்மையானவர்கள் அல்ல என்பது பொய்யாயின் வியாபாரிகள் எல்லோரும் நேர்மையானவர்கள் என்பது உண்மையாகும்.
   4) சில அரசியல்வாதிகள் சட்டத்தரணிகள் அல்ல என்பது பொய் எனின், எந்த அரசியல் வாதியும் சட்டத்தரணி அல்ல என்பதை உறுதியாகக் கூறமுடியாது.
   ) சில விலங்குகள் ஆபத்தானவை' என்பது பொய் எனின், விலங்குகள் அனைத்தும் ஆபத்தானவை அல்ல என்பது உண்மையாகும். (5x2 = 10 புள்ளிகள்)

ஆ. எடுப்பு முரண்பாடு என்றால் என்ன என்பதை உதாரணம் மூலம் விளக்குக. (03 புள்ளிகள்)

இ. பாரம்பரிய எடுப்பு முரண்பாட்டுச் சதுரத்தைப் பயன்படுத்தி இருத்தல் போலியை உதாரணம் மூலம் விளக்குக. (03 புள்ளிகள்)

ஈ. எடுப்பு முரண்பாட்டில் எதிர்மறை முரண்பாடுதான் பூரணமான முரண்பாடு எனக் கூறப்படுவது ஏன் என்பதை விளக்குக. (04 புள்ளிகள்)

02. அ. வெளிப்பேறு அனுமானத்தைப் பயன்படுத்தி பின்வரும் வாதங்கள் வலிதானவையா இல்லையா எனத் துணிக. வலிதற்ற சந்தர்ப்பங்களில் ஏற்படும்போலியையும் வலிதான சந்தர்ப்பங்களில் சரியாக இடம்பெற்ற வெளிப்பேற்று அனுமானத்தைக் குறிப்பிடுக.
   1) எந்தப் பழங்களும் தீமையானவை அல்ல.
      ஆகவே, தீமையானவை எவையும் பழங்கள் அல்ல.
   2) சில பொருட்கள் விலை அதிகம்.
      எனவே, சில பொருட்கள் அல்லாதவை விலை அதிகமானவை அல்ல.
   3) சில நாய்கள் கடிப்பன.
      எனவே, கடிப்பன சில நாய்கள் அல்லாதன அல்ல.
   4) எல்லா விலங்குகளும் கொடூரமானவை.
      எனவே, கொடூரமானவை எல்லாம் விலங்குகள்.
   5) எந்த ஆமையும் வேகமாக ஓடுவதில்லை.
      ஆகவே ஆமையல்லாத சில வேகமாக ஓடுவன. (5x2 = 10 புள்ளிகள்)

ஆ) கீழ்வரும் எடுப்புக்களின் மறுமாற்றத்தை எழுதுக.
   1) மீன்கள் அனைத்தும் நீந்துவன ஆகும்.
   2) பூனைகள் யாவும் பாய்வன அல்ல.
   3) சில கனிகள் புளிப்பன அல்ல.

இ) கீழ்வரும் எடுப்புக்களின் எதிர்மாற்றத்தை எழுதுக.
   1) குதிரைகள் கொம்புடையன அல்ல.
   2) வீரர்கள் அனைவரும் திறமைசாலிகள் ஆவர்.
   3) சில மாணவர்கள் விவேகிகள்.

ஈ) குறைமறை எடுப்பை (O) ஏன் எதிர்மாற்றம் செய்ய முடியாது என்பதை உதாரணம் மூலம் காட்டுக.

நன்றி:
கொழும்பு வணிகவள நிலையம்.

03. அ) கீழ்வரும் நியாயத்தொடைகள் வலிதானவையா, வலிதற்றனவா என்பதை தீர்மானிக்குக. நியாயத்தொடை ஒன்று வலிதற்றதாயின் மீறப்பட்டுள்ளவிதி; விதிகளில் நிகழ்ந்துள்ள போலி/போலிகளையும் விளக்குக.
   1) மைப்பேனாக்கள் மலிவானவை அல்ல. என்பதோடு, மைப்பேனாக்கள் எவையும் பாவனையில் இல்லை.
      ஆகவே, மலிவானவை எவையும் பாவனையில் இல்லை.
   2) நல்ல பாத்திரங்கள் கலப்பு உலோகத்தினால் ஆனவை, கதாநாயகன் வேடம் நல்ல பாத்திரமாகும்.
      ஆகவே, கதாநாயகன் வேடம் உலோகத்தினால் ஆனது ஆகும்.
   3) ஐரோப்பிய நாடுகள் அனேகமான வளர்ச்சியடைத்த நாடுகளாகும். மன்னர் ஆட்சி உள்ள நாடுகள் சில ஐரோப்பிய நாடுகள் அல்ல. ஆகவே, மன்னர் ஆட்சி உள்ள நாடுகள் சில வளர்ச்சியடைந்த நாடுகளாகும்.
   4) அனேகமான ஆறுகள் மலைகளில் ஊற்றெடுக்கின்றன என்பதோடு, நீர் வீழ்ச்சிகள் சில மலைகளில் உற்பத்தியாகின்றன என்பதால் அனேகமான ஆறுகள் நீர் வீழ்ச்சிகளில் ஊற்றெடுக்கின்றன.

ஆ) இருகுறை எடுப்புக்களில் இருந்து வலிதான முடிவு எதனையும் பெறமுடியாது ஏன் என்பதை பிரதான விதிகளின் துணையுடன் விளக்குக.

இ) கலப்பு நிபந்தனை நியாயத்தொடை வலிதானதாக அமைவதற்கான விதிகளை உதாரணத்துடன் விளக்குக.

04. அ) பின்வரும் வாதங்களை வகுப்புகளின் அடிப்படையில் குறியீட்டில் அமைத்துவென் வரிப்படங்களின் மூலம் அவை வலிதானவையா அல்லது வலிதற்றவையா என்பதைத் துணிக.
   1) எரிபொருள் மட்டுமே விலைகுறைக்கப்பட்டது ஆகும். விலை குறைக்கப்பட்டது எல்லாம் இறக்குமதி செய்யப்பட்டவையாகும். ஆகவே, எரிபொருள் இறக்குமதி செய்யப்பட்டது ஆகும்.
   2) சௌலாவும், ஆஷாவும் விண்வெளிக்கு சென்றனர். விண்வெளிக்கு சென்ற அனைவரும் திரும்பி வருவர்.
      ஆகவே சௌலா திரும்பிவரவில்லை.
   3) வில்லன்கள் உள்ளனர். ஏனெனில், நம்பியாரும் ரகுவரனும் வில்லன்கள் ஆவர்.
   4) சில இந்தியர்கள் மட்டுமே துறவிகள் ஆவர், எல்லா இந்தியரும் பௌத்தர்கள் ஆவர்.
      ஆகவே, துறவிகள் எல்லோரும் பௌத்தர்கள் அல்லர்.

ஆ) வென்வரிப்படத்தை பயன்படுத்திக் கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.
மாணவர்கள் சிலர் சீருடை அணிந்தவர்கள் அல்லர் எனத் தரப்படின் கீழ்வரும் அனுமானங்கள் வலிதானதா, வலிதற்றதா எனத் தருக.
   1) மாணவர்கள் இல்லை.
   2) சீருடை அணிந்தவர்கள் உள்ளனர்.
   3) சீருடை அணியாத மாணவர்கள் உள்ளனர்
   4) சீருடை அணிந்த சிலர் மாணவர்கள் அல்லர்.

## பகுதி - 11

05. அ) P உண்மை எனத் தரப்படுமாயின், கீழே தரப்பட்டுள்ள குறியீட்டு வாக்கியங்கள் உண்மையா, பொய்யா அல்லது தீர்மானிக்க முடியாதா என [illegible] பயன்படுத்தாது தீர்மானிக்குக. விடைக்குத் தேவையான படிமுறைகளை மட்டும் காட்டுக.
   1) ( ~P() Q)ᵠ[(R() S)() P]
   2) [(P_vQ)]()[(~P R)_vR]
   3) [(P_vQ)()(~P R)]
   4) [(P Q)() (~P R)]

ஆ) பின்வரும் வாக்கியங்களைப் பொருத்தமான சுருக்கத்திட்டத்தைப் பயன்படுத்திக் குறியீட்டாக்கம் செய்க.
   1) அவன் பல்கலைக்கழகம் செல்வானாயின் அவனுக்கு நல்ல தொழில் கிடைக்கும் என்ற நிபந்தனையின் கீழ் அவன் பட்டதாரி ஆயின், அவன் ஒன்றில் வெளிநாடு செல்வான் அல்லது நல்ல சீதனம் பெறுவான்.
   2) அவன் மாகாணசபை தேர்தலில் வெற்றி பெறுவான் அல்லது பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெறுவான். ஆனால், இரண்டிலும் வெற்றி பெற முடியாது. எனவே, அவன் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடமாட்டான்.

இ) தரப்பட்ட சுருக்கத்திட்டத்திற்கமைய குறியீட்டு வாக்கியங்களை தமிழில் எழுதுக.
   P = சுழல் காற்று வீசுகின்றது  Q = மழை பெய்கிறது
   R = வெள்ளம் வருகிறது
   1) [P()(Q () R)]()(Q R)
   2) [(Q() R)() P] ()[~P () (~P () ~R)

06. கீழ்வரும் வாதங்களைச் சுருக்கத்திட்டத்தைப் பயன்படுத்தி குறியீட்டில் தந்து அவை வலிதானவையா, வலிதற்றவையா என்பதை உண்மை அட்டவணை நேரல் முறை மூலம் துணிக.
   1) தகவல் தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்துள்ளது என்பதோடு விஞ்ஞானமும் வளர்ச்சியடைந்துள்ளது அல்லது விண்வெளி ஆய்வு விருத்தியடைந்துள்ளது என்பதோடு விஞ்ஞானம் வளர்ச்சியடையவில்லை அல்லது விண்வெளி ஆய்வு விருத்தி அடையவில்லை எனத்தரப்பட்டால் தகவல் தொழில்நுட்பமும் விஞ்ஞானமும் வளர்ச்சி அடைந்துள்ளது உண்மையாகும்.
   2) இலங்கையின் பொருளாதாரம் வளர்ச்சியடைந்தால் உள்நாட்டுப் பிரச்சினை முடிவடைந்து ஐக்கிய இலங்கை உருவாகும். இலங்கையின் பொருளாதாரம் வளர்ச்சி அடைந்தால் எரிபொருள் பிரச்சினை இருக்காது. நாட்டில் யுத்தம் தொடருமாயின் நாட்டின் ஒற்றுமை சீர்குலையும். ஆகவே, இலங்கையின் பொருளாதாரம் வளர்ச்சி அடையும் அல்லது நாட்டின் ஒற்றுமை சீர்குலையும்.
   3) ஒன்றில் இந்தியா அல்லது இலங்கை உலகக்கோப்பையை வெல்லும். ஆனால், இரண்டும் உலகக்கோப்பையை வெல்ல முடியாது. இந்தியா உலகக்கோப்பையை வென்று அத்துடன் இலங்கை உலகக்கோப்பையை வெல்லாவிடில் அரசு மகிழ்ச்சி அடையும் அல்லது நாட்டின் ஒற்றுமை சீர்குலையும்.
   4) அவன் கிராமத்துக்குச் செல்வான் பணம் பெற்றாலாயினே, அவன் பணம் பெறுவான் அவனது பெற்றோரிடம் பணம் இருந்தாலாயினே, அவனுக்கு பணம் கிடைக்கவில்லை ஆகவே அவன் கிராமத்திற்குப் போகவும் இல்லை அவனது பெற்றோரிடம் பணமும் இல்லை.

07. பின்வரும் தோற்றங்களைப் பெறுகை முறை மூலம் நிறுவுக.
   1) [(P () Q)() (R() S)]() [(P () R)() (Q() S)]
   2) (~P() Q)() (P() Q)
   3) (P() Q)() {~R () [~S () (~P () ~Q)]}
   4) (P() Q) () (Q() R)

08. பின்வரும் வாதங்களைக் குறியீட்டில் அமைத்து, எடுகூற்றிலிருந்து முடிவைப் பெறுவதன் மூலம் அவை வலிதானவை எனக் காட்டுக.
   1) மாகாணசபை உறுப்பினருக்கு சிறப்புரிமை இருக்குமாயின் அவர்களை அதிவிசேட பிரசைகளாக கணிக்க முடியும். அவர்களை அதிவிசேட பிரசைகளாக கணித்தால் அவர்கள் அரசியல்வாதிகளாக இருக்க வேண்டும். ஆனால், அவர்கள் அதிவிசேட பிரசைகளாகவோ அரசியல்வாதிகளாகவோ இல்லை. ஆகவே, அவர்கள் சிறப்புரிமை உள்ளவர்களாகவோ அதிவிசேட பிரசைகளாகவோ கணிக்கப்படவில்லை.
   2) புதுவருடம் வருகிறது அல்லது தீபாவளி வருகிறது எனின், அவன் புது ஆடைகள் வாங்குவான். ஆகவே, அவன் புது ஆடைகள் வாங்கவில்லையாயின், ஒன்றில் புது வருடமோ அல்லது தீபாவளி வரவில்லை என்பதாகும்.
   3) இந்திய எல்லையில் அல்லது பாகிஸ்தான் எல்லையில் போர் ஏற்படுமாயின் இந்தியா அல்லது பாகிஸ்தான் அணுகுண்டைப் பிரயோகிக்கும். இந்தியா அல்லது பாகிஸ்தான் அணுகுண்டைப் பிரயோகிக்காது. ஆகவே இந்திய எல்லையில் போர் ஏற்படவில்லையாயின் பாக்கிஸ்தான் எல்லையில் போர் ஏற்படாது.
   4) நீதிமன்றத்தின் தீர்ப்பு சரியானதாயின் எரிபொருள் விலை குறைவடையும் மக்கள் மகிழ்ச்சியடைவர். எரிபொருள் விலை குறைவடையும் எனின் போக்குவரத்து கட்டணம் குறைவடையும். மக்கள் மகிழ்ச்சியடைவார்களாயின் வாகனங்களின் இறக்குமதி அதிகரிக்கும். ஆகவே, நீதிமன்றத்தின் தீர்ப்பு சரியானதாயின் ஒன்றில் போக்குவரத்து கட்டணம் குறைவடையும் என்பதோடு வாகனங்களின் இறக்குமதி அதிகரிக்கும் (4x5 = 10 புள்ளிகள்)

## பகுதி -111

09. அ) நியாயமாலை என்றால் என்ன? அதன் வகைகள் எவை? உதாரணத்துடன் விளக்குக.

ஆ) இருதலைக்கோள் வாதம் என்றால் என்ன? அதன் வகைகளை உதாரணத்துடன் விளக்குக. (10 புள்ளிகள்)

10. கீழ்வரும் பந்திகளில் காணப்படும் போலிகள் எவையென இனங்கண்டு அந்தப் போலிகள் நிகழ்ந்துள்ள விதத்தைச் சுருக்கமாக விளக்குக.
   1) திமிங்கலம், சுறா, முதலை என்பன மிகக் கொடியவையாக இருப்பதனால் நீரில் வாழ்வன எல்லாம் மிக கொடியவை என முடிவு செய்யலாம்.
   2) இந்திய கிரிக்கட் அணியின் தலைவர் மாற்றப்பட்டதன் பின் விளையாடிய நான்கு போட்டிகளிலும் வெற்றியீட்டியது ஆகையால், அணியின் தலைவர் மிகச் சிறந்த விளையாட்டு வீரர் என்பதில் சந்தேகமில்லை.
   3) குடும்பத்தில் மூத்தபிள்ளை என்பதோடு எனக்குப்பின் உள்ள நான்கு சகோதரிகளுக்கும் உழைத்துக் கொடுக்கவேண்டிய நிலையில் இருக்கிறேன். தாய், தந்தையும் இல்லை. எனவே, இந்நியமனத்திற்கு சிபார்சு செய்யுமாறு கேட்கிறேன்.
   4) அவன் ஒவ்வொரு நாளும் வாசலில் உள்ள வைரவருக்கு பூ வைத்து செல்வது வழக்கம். அன்று பூ வைக்காது
      சென்றதினால் வாகன விபத்தில் சிக்கி இறந்துவிட்டான். பூ வைத்துச் சென்றிருந்தால் எதுவும் நடந்திருக்காது.
   5) மன்னனின் ஆதரவு எங்களுக்கு மட்டுமே உள்ளது என்பதனை அறிவீர்கள். எங்களுக்குரிய பங்கை செலுத்தாவிடின் ஏற்படும் விளைவுகளை நீங்கள் அறிவீர்கள். எனவே, புத்திசாதுரியமாக செயற்படுமாறு கேட்டுக்கொள்கிறேன். (4x5 = 20 புள்ளிகள்)

11. பின்வருவனவற்றிற்கு சிறுகுறிப்பு வரைக.
   1) பகுப்பெடுப்பும் தொகுப்பெடுப்பும்
   2) முரண்மை விதியும் நடுநீக்கி விதியும்
   3) மெல் உறழ்வும் வல் உறழ்வும்
   4) குறை நியாயத்தொடைகள்

12. அ) பெறுமானக் கூற்று, நேர்வுக் கூற்று என்பனவற்றை தெளிவாக விளக்குக. (10 புள்ளிகள்)

ஆ) நீதிமன்ற சாட்சியம் தொடர்பாக சந்தர்ப்ப சாட்சியம், கண்ணால் கண்ட சாட்சியம் என்பவற்றை விளக்குக. (10 புள்ளிகள்)

நிறைவுபெற்றன-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாதிரிப் பரீட்சை - 2009 ஆகஸ்ட்
General Certificate of Education (Advance.Level) Model Examination - 2009 August

# இரசாயனவியல் - 01 கொழும்பு வலய பரீட்சை வினாத்தாள்

## கடந்தவார (28.04.09) தொடர்ச்சி.....

33. $C_4H_{10}O$ எனும் சூத்திரமுடைய சேர்வை A அமில $KMnO_4$ ஐ நிறமகற்றி $C_4H_8O_2$ எனும் விளைவைக்கொடுத்தது. Aஇற்கு சாத்தியமான கட்டமைப்பு/ கட்டமைப்புகள்
   a) $CH_3CH_2CH_2CH_2OH$
   b) $CH_3CH_2CHOHCH_3$
   c) $(CH_3)_3C\text{-}OH$
   d) $(CH_3)_2CH\text{-}CH_2OH$

34. அணுக்களில் இலத்திரன்களின் சக்தி மட்டங்கள் பற்றிய கருத்திற்கு சான்றாக அமைபவை/ அமைவது.
   a) $\alpha$ - சிதறல் பரிசோதனை.
   b) நிறமாலை ஆய்வுகள்.
   c) தொடர் அயனாக்கற் சக்தி பெறுமானங்கள்.
   d) கதோட்கதிர் பரிசோதனை.

35. CHl இல் இருந்து $Cl_2$ வாயுவை தரக்கூடியவை/ கூடியது,
   a) $KMnO_4$  b) $K_2CrO_4$  c) ICl
   d) KCl

36. HClஇல் இருந்து $Cl_2$ வாயுவை தரக்கூடியவை/ கூடியது
   a) KOCl  b) $KClO_3$  c) $MnO_2$
   d) $F_2$

37. பின்வரும் எது/ எவை pH ஐ வரையறுக்கிறது,
   a) $pH = \log_{10}[H^+]^{-1}$
   b) $pH = -\log_{10}[H^+]$
   c) $pH = \log_{10} 1/H^+]$
   d) $pH = 1/\log_{10}[H^+]$

38. $-NH_2$ கூட்டத்தைக்கொண்ட சேதன சேர்வை A ஓர் அமைன் என்பதனையும் ஏமைட் அல்ல என்பதையும் எடுத்துக்காட்டுவது/ காட்டுபவை?
   a) $KOH/CHCl_3$ உடன் துர்மணம் காட்டியது.
   b) $NHO_2$ உடன் $N_2$ வாயுவைக்கொடுத்தது.
   c) NaOH உடன் $NH_3$ ஐக்கொடுத்தது.
   d) $P_2O_5$ உடன் சயனைட்டைக் கொடுத்தது.

39. இலட்சிய வாயுவொன்றின் கனவளவு தங்கும் காரணி/ காரணிகள்,
   a) வாயுவின் திணிவு.
   b) வாயு அமுக்கம்.
   c) மூலக்கூறுகளின் பருமன்.
   d) மூலக்கூறுகளிலுள்ள அணுக்களின் எண்ணிக்கை

40. NaOH உடன் தாக்கமடையாதது/ அடையாதவை
   a) $NH_3$  b) $NaHCO_3$  c) $Na_2HPO_4$
   d) $Na_2CO_3$

* 41 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்கு அறிவுறுத்தல்கள்

| கூற்று 1 | கூற்று 11 | கூற்று 11, | கூற்று 1, கூற்று 11ற்கான விளக்கம் |
|---|---|---|---|
| 01 | சரி | சரி | சரி • |
| 02 | சரி | சரி | பிழை |
| 03 | சரி | பிழை | - |
| 04 | பிழை | சரி | - |
| 05 | பிழை | பிழை | - |

| | கூற்று 1 | கூற்று 11 |
|---|---|---|
| 41. | 100°C இல் நீரின் pH < 7 | 100°C இல் நீரின் $[H^+] > [OH-]$ |
| 42. | தாங்கற் கரைசல்களின் pH எந் நிபந்தனைகளின் கீழும் மாறாது. | தாங்கற் கரைசல்கள் எல்லாவற்றிலும் எப்போதும் $H^+$ இருக்கும். |
| 43. | இயற்கை இருப்பிலிருந்து Ba பிரித்து எடுப்பதற்கு மின்சக்தி அவசியம். | பேரியம் இயற்கையில் மூலக நிலையில் காணப்படுவதில்லை. |
| 44. | ஒரே வெப்பநிலை அமுக்கத்தில் சம திணிவு வாயுக்கள் சம எண்ணிக்கையான மூலக்கூறுகளைக் கொண்டிருக்கலாம். | சமதிணிவு வாயுக்கள் சமமான மூலக்கூற்று நிறையைக் கொண்டிருக்கலாம். |
| 45. | சோடியம் அணுக்களும், அயன்களும் நீருடன் ஒரே மாதிரித் தாக்குகின்றன. | சோடியம் அணுக்களும் அயன்களும் ஒரே விதமான கருக்களைக் கொண்டிருக்கும். |
| 46. | கதோட்கதிர்களும் நேர்கதிர்களும் சடப்பொருட்களின் அடிப்படைத் துணிக்கைகளாகும். | கதோட்கதிர்களும் நேர்கதிர்களும் சடப் பொருட்களில் இருந்தே தோன்றுகின்றன. |
| 47. | எல்லா, இருமூலமென் அமிலங்களினதும் வன்கார உப்பு கரைசல்கள்தாங்கல் தொழிற்பாடு உடையவை. | சேர்க்கப்படும் H+ or $OH^-$ அயன்கள் உப்பின் அன்னயன் கொண்டு அகற்றப்படலாம். |
| 48. | $C_6H_{12}$ மூலக்கூற்று சூத்திரமுடைய சேர்வைகள் யாவும் நீர்மய $Br_2$ ஐ நிற நீக்கும். | எல்லா நிரம்பாத ஐதரோ காபன்களும் நீர்மய $Br_2$ உடன் தாக்கத்தில் ஈடுபடும். |
| 49. | சமதானிகள் ஒரே இரசாயன இயல்புடையவை | சமதானிகள் ஒரே இலத்திரன் நிலை அமைப்புடையவை. |
| 50. | அசற்றலீன் எதைல் மக்னீசியம் புரோமைட்டுடன் தாக்கமுற்று எதேன் பெறப்படும். | அசற்றலீன் எதேனாக தாழ்த்தப்படலாம். |


51. 80 $cm^3$ நைதரசனின் ஒட்சைட்டொன்று S உடன் வெப்பப்படுத்தியபோது முற்... பெறப்பட்ட வாயுவினளவு 120$cm^3$ இவ்விளைவு மிகை KOH (aq) ... போது மிகுதி வாயு 80$cm^3$ யாவும் ஒரே வெப்பநிலை அமுக்கத்தில் பெற...பட்டது ... இம் முடிவுகட்கு பொருத்தமான தாக்கம்.
   1) $3N_2O_{(g)} + S_{(s)} \longrightarrow SO_{3(g)} + 3N_{2(g)}$
   2) $2N_2O_{(g)} + S_{(s)} \longrightarrow SO_{2(g)} + 2N_{2(g)}$
   3) $2NO_{2(g)} + 2S_{(s)} \longrightarrow 2SO_{2(g)} + N_{2(g)}$
   4) $2NO_{(g)} + S_{(s)} \longrightarrow SO_{2(g)} + N_{2(g)}$
   5) $6NO_{(g)} + 2S_{(s)} \longrightarrow 2SO_{3(g)} + 3N_{2(g)}$

52. பின்வரும் எது மூலகத்தின் இரசாயனத்தை புரிந்துகொள்ள உதவும்,
   1) மின் எதிர்த்தன்மை.
   2) முதல் அயனாக்கற் சக்தி.
   3) இலத்திரன் நிலையமைப்பு.
   4) இலத்திரன் நாட்டசக்தி.
   5) அயனாரை.






53. கூட் II A மூலகங்களின் இரசாயன இயல்புகளின்படி Ra பற்றி தவறான கூற்று.
   1) $RaSO_4$ ஒரு வீழ்படிவு.
   2) $RaCO_3$ ஆய்வுசாலையில் வெப்பப் பிரிகையடையாது.
   3) $Ra(OH)_2$ வன்காரம்.
   4) $Ra(HCO_3)_2$ ஒரு வெண்திண்மம்.
   5) HCl இல் இருந்து $H_2$ ஐ விரைவாக வெளியேற்றும்.

54. இலத்திரனுடன் சம்பந்தப்படாதவர்,
   1) தொம்சன்.
   2) மிலிக்கன்.
   3) ஸ்ரோனி.
   4) குருக்ஸ்
   5) தாற்றன்.

55. $CCl_4$, $SiCl_4$ கொண்ட கரைசலில் $X_1$ மூல் $CCl_4$ உம் $X_2$ மூல் $SiCl_1$ உம் தங்கள் ஆவிகளுடன் குறித்த வெப்பநிலையில் சமநிலையில் இருப்பின் ஆவியில் $SiCl_4$ இன் மூல் பின்னம் (மேற்படி வெப்பநிலையில் $CCl_4$, $SiCl_4$ இன் தூய நிலை ஆவியமுக்கங்கள் முறையே $P_1, P_2$ என்க)
   1) $P_2X_2/X_1 + X_2$
   2) $P_2X_2/P_1 + P_2$
   3) $1\,P_1X_1/P_2X_2 + P_1X_2$
   4) $1P_2X_2/P_1X_1 + P_2X_2$
   5) மேலுள்ள எதுவுமல்ல.

56. $CH_3\text{-}C\text{-}H$ இல் C = O பிணைப்பிலுள்ள 6 - பிணைப்பும்
    $C_1 = C_2\text{-}C\text{-}H$ இலுள்ள $C_1$ - $C_2$ பிணைப்பும் முறையே எத்தகையவை?
   1) $(SP^2 - SP), (SP^2 - SP)$
   2) $(SP - P), (SP^2 - SP)$
   3) $(SP^2 - P), (SP^2 - SP)$
   4) $(SP^2 - P), (SP - SP)$
   5) மேலுள்ள எதுவுமல்ல.






57.  ஐ நைத்திரேற்றும்போது இலகுவாக கிடைக்கக்கூடிய பதார்த்தம்,

1) 
2) 
3) 
4) 
5) 

58. $HNO_3$ பின்வரும் எதனுடன் அமிலமாக மட்டும் தொழிற்படும்.
   1) $FeSO_{4(aq)}$
   2) Cu
   3) $I_2$
   4) $NaHCO_{3(aq)}$
   5) $KCl_{(aq)}$

நன்றி
கொழும்பு வணிகவள
நிலையம்.

59. பின்வரும் சேர்வைகளில் பென்சீன் வளையத்தில் ஒரு குளோரோ பிரதியீடுடைய சேர்வை ஒன்று மட்டும் உடையது எது?

1) 
2) 
3) 
4) 
5) 

60. பின்வருமீ எவ்வொட்சைட்டை அதன் காபனேற்றை அல்லது நைத்திரேற்றை வெப்ப மேற்றி பெற இயலாது?
   1) $Al_2O_3$  2) FeO  3) CuO
   4) SnO  5) ZnO

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாதிரிப் பரீட்சை - 2009 ஆகஸ்ட்
General Certificate of Education (Advance Level) Model Examination - 2009 August

# கணக்கீடு - 01

பொதுப்பரீட்சை முன்னோடி வினாத்தாள், கொழும்பு வலயம்

## பகுதி - 1

## கடந்தவார தொடர்ச்சி (28.04.09).....

03. அ. நதீஷா நிறுவனத்தின் 2008க்கான கடன்படுநர் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு:-
1.12.2008 கடன்பட்டோர் வரவுமீதி 136,000 ரூபா, செலவுமீதி 4,000 ரூபா,
டிசம்பர் மாத விற்பனை நாளேட்டுத் தொகை 249,000 ரூபா,
உட்திரும்பல் நாளேட்டுத் தொகை 14,000 ரூபா,
2% கழிவு அனுமதித்து சேகரித்த காசு 245,000 ரூபா,
மறுத்த காசோலை 10,000 ரூபா,
மறுப்புக்கட்டணம் 1,000 ரூபா,
பிறப்பித்த உண்டியல்கள் 40,000 ரூபா,
பதிவழித்த நட்டக்கடன் 5,000 ரூபா,
காலம் பிந்தியகடன் மீது விதித்த வட்டி 2,000ரூபா,
கடன்கொடுநர் செலவு மீதிகட்கு எதிராக கடன்படுநர் மீதிகளின் எதிர்த்தீர்த்தல் 10,000 ரூபா
முன்பு பதிவழித்து மீளப்பெற்ற கடன்தொகை 8,000 ரூபா, மாத இறுதிகடன் படுநர் செலவு மீதிகள் 2,000 ரூபா (04 புள்ளிகள்)

**மொத்த கடன் கொடுநர்கணக்கை தயாரிக்குக.**

**நன்றி: கொழும்பு வணிகவள நிலையம்.**

ஆ. சுசிலா நிறுவனத்தின் கொள்வனவுப் பேரேட்டு கணக்குகளின் மீதி 125,000 ரூபாவாக பட்டியலிடப்பட்டுள்ளது அத்தினத்திலுள்ள கட்டுப்பாட்டுக்கணக்கு மீதியுடன் இணங்காமைக்கு பின்வரும் காரணங்கள் கண்டறியப்பட்டன.
1) கட்டுப்பாட்டுக் கணக்கில் ஆரம்ப வரவு மீதி 5,000 ரூபா விடுபட்டுள்ளது.
2) கொள்வனவு நாளேட்டின் கூட்டுத்தொகை 4,000 ரூபாவினால் கூட்டிக்காட்டப்பட்டது.
3) 18,500 ரூபா கொள்வனவுப் பட்டியல் ஒன்று நபர் கணக்கில் 15,800 என பதியப்பட்டது.
4) கடன்படுநர் மீதிகளிற்கு எதிரான எதிர்த் தீர்த்தல்கள் 5,000 ரூபா நபர் கணக்கில் மட்டும் பதிவு செய்யப்பட்டது.
5) வரவுத்தாள் 2,000 ரூபா உரிய நபர் கணக்கில் பதியப்படவில்லை.

**கடன்கொடுநர் மீதிகளின் இணக்கக்கூற்று தயாரிக்குக. கடடுப்பாட்டு கணக்கினை சீராக்குக.** (06 புள்ளிகள்)

---

04. அ. ரம்யா நிறுவனத்தின் டிசம்பர் 2008க்கான வங்கிக்கூற்று 24,600 ரூபாவை செலவு மீதியாக காட்டியது. அத்தினத்திலுள்ள காசேட்டு வங்கிநிரல் மீதியுடன் இணங்காமைக்கு பின்வரும் விடயங்கள், கடன்கள் காரணமாக உள்ளன.
1) மாற்றப்படாத காசோலைகள் 16,200 ரூபா
2) வசூலிக்கப்படாத காசோலைகள் 22,500 ரூபா
3) வங்கி தவறுதலாக செலவு வைத்த காசோலை 1,500 ரூபா
4) காசேட்டில் பதியப்படாத வங்கிக்கட்டணம் 500 ரூபா, மறுத்த காசோலை 2,000 ரூபா மறுப்புக்கட்டணம் 500 ரூபா, நேரடி வைப்பு 1200 ரூபா
5) காசேட்டில் 4,200 ரூபா செலுத்திய காசோலை ஒன்று 4,800 என பதியப்பட்டுள்ளது.
6) கடன்படுநர் ஒருவரிடம் பெற்று கடன் கொடுநருக்கு சாட்டுதல் செய்யப்பட்ட 3,000ரூபா காசோலை ஒன்று தவறாக வங்கி நிரலில் செலவு வைக்கப்பட்டுள்ளதுடன் மாற்றப்படாத காசோலையாக கணிக்கப்பட்டுள்ளது.

**காசேட்டைச் சீராக்குக.**
**வங்கி இணக்கக் கூற்றைத் தயாரிக்குக.** (07 புள்ளிகள்)

ஆ. ஆரணி விற்பனை நிலையம் 1.1.2004இல் 500,000 ரூபா கிரயத்தில் கொள்வனவு செய்த வாகனம் ஒன்றை 30.06.2008 இல் 240,000 ரூபாவுக்கு விற்பனை செய்தது இந்நிறுவனம் வாகனங்கள் மீது ஆண்டுக்கு 20% ஒடுக்குபாக முறையில் தேய்விடுகிறது 01.07.2008 இல் 700,000 ரூபாவுக்கு புதிதாக வாகனத்தை வாங்கியது.

**31.12.2008இல் முடிவடையும் ஆண்டுக்கான பேரேட்டில் வாகன கணக்கு வாகன அகற்றல் கணக்கு பெறுமான தேய்வு ஏற்பாட்டுக் கணக்கு ஆகியவற்றைத் தயாரிக்குக.** (03 புள்ளிகள்)

---

05. அ. சந்திரஒளி கிராம முன்னேற்றச் சங்கம் வருடம் 600/= விலான சந்தாவாக செலுத்தும் 100 அங்கத்தவர்களைக் கொண்டது. 31.01.2008 இன் முடிவில் நிதியாண்டு காலத்துக்கு இதன் பொருளாளர் தயாரித்த கொள்ளல் கொடுத்தல் கணக்கு வருமாறு.

கொள்ளல் கொடுத்தல் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மீதி 1.2.2008 இல் | 9,600 | அச்சிடல் எழுது கருவிகள் | 4,800 |
| சந்தா பெற்றது 2007 க்கு | 5,600 | பத்திரிகை சஞ்சிகைகள் | 15,200 |
| 2008 | 55,500 | கிராம உதயம் திட்ட செலவுகள் | 80,000 |
| 2009 | 7,200 | கிராம உதய பணியாளர் சம்பளம் | 45,000 |
| ஆயுட்சந்தா | 4,000 | கண்காட்சி செலவு | 35,000 |
| நன்கொடை | 42,000 | கிராம உதய உற்பத்திக்கான உள்ளீடு | 72,000 |
| கிராம உதயம் நன்கொடை | 75,000 | உபசரணை செலவு | 3,800 |
| பழைய சஞ்சிகை பத்திரிகை விற்பனை | 2,000 | கிராம உதயம் அங்கத்தவர் களுக்கான கொடுப்பனவுகள் (அங்/உதவுதொகை) | 90,000 |
| கிராம உதயம் கண்காட்சி விற்பனை | 186,000 | மீதி | 41,100 |
| | 386,9000 | | 386,900 |

கிராம உதயத்திட்ட செலவு முதலாக்கப்படும்
ஆயுட் சந்தா பெறப்பட்ட காலத்துக்கு வருமானமாக பதியப்படும்

தயாரிக்குக.
1) கிராம உதயம் கண்காட்சிக் கணக்கு.
2) வருமான செலவுக்கணக்கு (07புள்ளிகள்)

ஆ. 31/[illegible]/2008இல் நதிமா நிறுவனம் கணிப்பிட்ட பௌதீக இருப்புக்களின் கிரயம் 13[illegible] ரூபாவாகும். இக்கணிப்பீடு தொடர்பாக பின்வரும் தவறுகள் காணப்படுகின்றன.
1) 45,000 ரூபா விற்பனை தொடர்பாக அகற்றப்படாத இருப்புகள் உள்ளன. இவ்விற்பனைகள் கிரயத்துடன் 50% இலாபம் சேர்ந்தவை.
2) 31/12/08 வரை கொள்வனவுகள் செய்து வந்து சேராத பொருட்கள் 10,000 ரூபா
3) இருப்புக்களில் 15,000 ரூபாவானவை ஒப்படை முறையில் வனிதா கம்பனியிடம் பெறப்பட்டவை.
4) இருப்பேட்டில் பதியப்படாத பொருட்பற்றுக்கள் 20,000 ரூபா ஆகும்.
5) கிரயத்தில் கணிக்கப்பட்ட 25,000 ரூபாவான பொருட்களின் நிகர தேறக்கூடிய பெறுமதி 18,000 ரூபாவாக மதிப்பிடப்பட்டுள்ளது.

31/12/2008 இல் வியாபாரம் முடிவடையும் நிதியாண்டுக் கணக்கிலும் ஐந்தொகையிலும் காட்டவேண்டிய சரியான இருப்புப் பெறுமானங்களைக் கணித்துக் காட்டுக. (03 புள்ளிகள்)

---

06. ஆதவன் விற்பனை நிலையம் 31/3/09இல் முடிவடைந்த நிதியாண்டு தொடர்பாக பின்வரும் கணக்கீட்டுத் தகவல்களை கொண்டுள்ளது. 1/4/08இல் நடைமுறை அல்லா சொத்துக்கள் 450,000 ரூபா,தொக்கு 90,000 ரூபா, கடன்படுநர் 60,000 ரூபா, காசு 18,000 ரூபா, கடன்கொடுநர் 80,000 ரூபா, 31/3/2009 வரை கொடுக்கல்வாங்கல்களில்
கடன்படுநரிடம் பெற்றது 368,000 ரூபா, கடன்கொடுநருக்கு செலுத்தியது 242,000
காசு விற்பனை 32,000 ரூபா, செலவுகள் செலுத்தியது 46,000
நானவித வருமானம் 5000 ரூபா, உபகரணம் கொள்வனவு 30,000
பற்று 14,000

இக்காலப்பகுதியில் அனுமதித்த கழிவு 16,000 ரூபா, கிடைத்தகழிவு 24,000 ரூபா, தேறாத விற்பனைப்பட்டியல் 5,000 ரூபா, திருப்பி அனுப்பிய கொள்வனவுப் பட்டியல்கள் 15,000 ரூபா.
நடைமுறை அல்லா சொத்துக்களின் ஆண்டிறுதிப்பெறுமதியில் 10% தேய்விடுக.
31/3/2009இல் இருப்பின் பெறுமதி 78,000 ரூபா, கடன்படுநர் 74,000 ரூபா, கடன் கொடுநர் 90,000 ரூபா, அட்டுறு செலவுகள் 6,000 ரூபா.

தயாரிக்குக.
1) வியாபார இலாபநட்டக் க/கு
2) 31/3/09இல் ஐந்தொகை. (10புள்ளிகள்)

## பகுதி - 11இன் விடைக்குறிப்புகள் அடுத்தவாரம் வெளிவரும்...

---

## கணக்கீட்டின் பகுதி - 1இன் விடைக்குறிப்புகள்....

| | | | | |
|---|---|---|---|---|
| 01 - இ | 02 - உ | 03 - ஈ | 04 - உ | 05 - ஈ |
| 06 - உ | 07 - ஈ | 08 - ஈ | 09 - அ | 10 - ஈ |
| 11 - உ | 12 - ஆ | 13 - ஈ | 14 - ஈ | 15 - இ |
| 16 - ஈ | 17 - ஆ | 18 - ஆ | 19 - இ | 20 - ஈ |

21 - நிதிசார் தத்துவங்களை காலரீதியில் ஒழுங்குபடுத்தி அறிக்கையிடல் மூலம் நிறுவன பெறுபேறுகளையும் நிதிநிலமையும் மதிப்பிட உதவுதல்.
22- அலகுசார் எண்ணக்கரு, இரட்டை விளைவு எண்ணக்கரு, பண அளவீடு எண்ணக்கரு, அட்டுறு எண்ணக்கரு, இணைதல் எண்ணக்கரு.
23- ஒரு பெருந்தொகை நிதி இலாபநோக்குடன் ஒரு தடவையில் முதலீடு செய்யப்படுவதில்லை செலவை மிஞ்சிய வருவாய் மூலம் திரள்வது.
24- பின்பற்றப்படும் - தேறல் எண்ணக்கரு, முன்னெச்சரிக்கை எண்ணக்கரு
மீறப்படும்- வரலாற்றுக்கிரயம் எண்ணக்கரு, இணைதல் அட்டுறு எண்ணக்கரு.
25- கடன்படுநர் 330,000/= கடன்கொடுநர் வரவு 200,000/= Vat + க/கு வரவு 20,000, செலவு 30,000/=, வியாபார க/கு வரவு 200,000/= செலவு 30,000/=
26- பொதுகிணக்கம், முலதன ஈடுபாடு, இலாபநோக்கு, முயற்சி ஒன்று தொழிற்படுதல்
27- நிறையரித்த சராசரி முறை, முதல் உள்முதல் வெளி (FIFO)
28 - A + 5/90, B -3/90, C-2/90
29- சொத்தின் கிரயம், இறுதிப் பெறுமதி, பயன்தரு ஆயுட்காலம், பயன்படுத்தப்படும் பெறுமானத்தேய்வு முறை.
30- தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு , தேறல் எண்ணக்கரு
31- கணக்குகளில் பதிவு செய்யப்பட மாட்டாது.
32- கொள்வனவுக்கிரயம் இயங்கு நிலைக்கு கொண்டு கிரயம் / மாற்றக்கிரயம்
33- கூட்டியும் குறைத்தும் 34- பொறுப்பிலிருந்து திரண்ட நிதி
35- பேணவும் இலாபநட்டத்தை

| | | | | |
|---|---|---|---|---|
| 36- சரி | 37 - சரி | 38 - சரி | 39 - பிழை | 40 - சரி |

**மாணவர்களே உங்கள் விடைகளை இவ் விடைத்தாளுடன் ஒப்பீடு செய்து விளக்கமின்மைகள் இருப்பின் 071-4273035, 071-6850005. என்ற இலக்கத்திற்கு காலை 9.00 தொடக்கம் 5.00 மணிவரை தொடர்பு கொண்டு விளக்கங்களைப்பெற்றுக் கொள்ளலாம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பங்குச்சந்தை தொடர்பான கட்டுரைத் தொடரின் தொடர்ச்சி (28.04.09)....

# மத்திய வைப்புத் திட்டத்தின் செயற்பாடுகள்

தரகர்களுக்கு இடையில் தத்தமது பெறுமானங்கள் நான்கு வியாபார நாட்களுக்குள் நிறைவு செய்யப்பட வேண்டும். இத்தீர்வுச் செயற்பாடுகள் மத்திய வைப்புத் திட்டத்தினால் குறிப்பிடப்பட்ட 'தீர்வுவங்கி'கள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வங்கிகளில் அனைத்துப் பங்குதாரர்களும் கணக்குகளை வைத்திருப்பதோடு, தீர்க்கும் நாளில் ஒவ்வொரு பங்கு பங்குதாரர்களினதும் கணக்குகளின் தேறிய தொகைகளுக்கு அமைய செலவு அல்லது வரவுப்பதிவு வைக்கப்படும். இந் நடவடிக்கைகளை எளிதாக்கும் பொருட்டு மத்திய வைப்புத் திட்டம் நாளாந்தம் உப அட்டவணை ஒன்றைத் தயாரித்துக்கொள்கின்றது. இவ் அட்டவணையில் ஒவ்வொரு பங்குதாரர்களினதும் தீர்வுத் தொகைகள் காட்டப்படும். இவ் அட்டவணை தீர்வு வங்கிக்கும், பங்குதாரர்களுக்கும் அனுப்பிவைக்கப்படுகின்றது. நம்பிக்கைப் பொறுப்பு வங்கி, வியாபாரக் கருமங்களில் ஈடுபடாததால் ஒவ்வொரு வியாபார நாட்களிலும் கொடுக்கல்வாங்கல்களின் அட்டவணை ஒன்று அவர்களுக்கு அனுப்பப்படுகின்றது.

அனைத்து நம்பிக்கைப் பொறுப்பு வங்கிகளும் பங்குக் கொள்வனவு, விற்பனைகளை உறுதிப்படுத்தி அட்டவணையில் கையொப்பமிட்டு அதன் பிரதியை மீள அனுப்ப வேண்டும்.

இது நான்கு வியாபார நாட்களுக்குள் நிகழ்வதனால் உரிய முறையில் கொடுக்கல் வாங்கல்களை நிறைவுசெய்யக்கூடியதாக உள்ளது. 2005 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதல் இத்தீர்வு முறையானது மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இதன்படி கொள்வனவுகள் கொள்வனவுசெய்த நாளிலிருந்து மூன்று நாட்களுக்குள்ளும் (T+3), விற்பனைகள் விற்பனை செய்த நாளிலிருந்து நான்கு நாட்களுக்குள்ளும் (T+4), தீர்வுசெய்யப்பட வேண்டும்.

**பதிவுசெய்தல்**

கொழும்புப் பங்குச் சந்தை மூலம் மேற்கொள்ளப்படும் பங்குக் கைமாற்றல்கள் சார்பாக பட்டியற்படுத்தப்பட்ட அனைத்துக் கம்பனிகளினதும் பதிவுசெய்தல் நடவடிக்கைகளை மத்திய வைப்புத்திட்டம் பொறுப்பேற்றுள்ளது. எனவே, பட்டியலிடப்பட்ட கம்பனிகள் சார்பாக பங்குப்பதிவேடு ஒன்றை மத்திய வைப்புத் திட்டம் மேற்கொள்வதோடு, நாளாந்தக் கொடுக்கல்வாங்கல்களின் அடிப்படையில் அவை நாளாந்தம் நிறைவு செய்யப்படுகின்றன. பட்டியலிட்ட கம்பனி ஒன்றின் பங்கு உரிமைகள் தொடர்பான அட்டவணை ஒன்றைக் கோரி விண்ணப்பம் செய்வதன் மூலம் அதனை மத்திய வைப்புத் திட்டத்திலிருந்து பெற்றுக் கொள்ள முடியும். பங்கு லாபம் வழங்குதல், உரிமைப் பங்கு வழங்குதல், உபகாரப்பங்கு வழங்குதல் போன்றவைகளுக்காக அவ்வுரிமை கிடைக்கக்கூடிய நாட்களுக்கான பங்குதாரர் அட்டவணை ஒன்று தயாரிக்கப்பட்டு, குறித்த கம்பனிகளுக்கு மத்திய வைப்புத் திட்டத்தினால் அனுப்பி வைக்கப்படும்.

**தவணையிட்ட பங்கு வழங்கல் (Subsequent Issues) பற்றிய செயற்பாடு**

உரிமை வழங்கலின் போதும், (Right Issues) உபகார வழங்கலின் போதும் (Bonus Issues) அவை பற்றிய ஒதுக்கல் கடிதம் (Letter of Allotment) மத்திய வைப்புத் திட்டத்திற்கு சமர்ப்பிக்கப்படுமாயின், அவை பற்றிய செயற்பாடுகளிலும் மத்திய வைப்புத் திட்டம் ஈடுபடும். உரிமைப் பங்கு வழங்கலின்போது தத்தமது பங்குதாரர்கள் மூலம் உரிமைப் பங்குகளுக்குப் பங்களிக்கும் வாடிக்கையாளர் சார்பாக அவர்களின் காசோலைகளை, அவர்கள் உரிமையை விடுவிக்கும் தினத்தில் பெற்று அவைகளை மத்திய வைப்புத் திட்டத்தின் மூலம் குறித்த கம்பனியின் செயலாளருக்கு அல்லது பதிவாளருக்குச் சமர்ப்பிக்கின்றது. கம்பனி வழங்குதலை உறுதிப்படுத்தி கொழும்புப் பங்குச்சந்தையின் இணக்கத்திற்கு உறுதியுரையைக் கோவைப் படுத்தும்போது குறித்த உரிமைப்பங்குகள் மத்திய வைப்புத் திட்டத்தினால் திட்டத்தின் சாதாரண பங்குகளாக மாற்றியமைக்கப்படுகின்றன. இதற்குப் பங்குப்பத்திரங்களை வழங்கவேண்டியதில்லை. இவ்வாறு மாற்றியமைப்பதற்கு முன் மத்திய வைப்புத் திட்டத்திலுள்ள பங்களிப் பற்ற உரிமைப் பங்குகள் எவையேனும் இருக்குமாயின் அவை நிராகரிக்கப்படும். அவ்வாறே உபகாரப்பங்குகள் சார்பாக வழங்கல் நிறைவு பெறும்போது மத்திய வைப்புத் திட்டத்தில் வைப்பிலிடப்பட்டுள்ள உபகாரப் பங்குகள் சாதாரண பங்குகளாக மாற்றியமைக்கப்படும்.

இந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்தின்போதும், ஒவ்வொரு வழங்கலினதும் உரிமை விடுவிக்கப்படும் தினத்தில் மத்திய வைப்புத் திட்டத்திலிருந்து பங்கு ஒதுக்கல் கடிதம், பங்கு உரிமையாளர் பெயர்ப்பட்டியல் என்பன குறித்த அட்டவணை ஒன்று கம்பனியின்செயலாளருக்கு அல்லது பதிவாளருக்குச் சமர்ப்பிக்கப்படும்.

**மாதாந்த கணக்குக் கூற்று (Monthly Statement of Accounts)**

வங்கியில் நடைமுறை கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளருக்கு ஒவ்வொரு மாத இறுதியிலும் வாடிக்கையாளர் கணக்கு விவரங்களை உள்ளடக்கிய வங்கிக் கூற்று அனுப்புவதைப் போன்று, மத்திய வைப்புத் திட்டமும் தமது வாடிக்கையாளருக்கு அவரது கணக்கு விவரங்கள் உள்ளடக்கப்பட்ட கணக்குக் கூற்றை ஒவ்வொரு மாத முடிவிலும் அனுப்பி வைக்கிறது. இது வாடிக்கையாளர் சார்பாக அம்மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல்வாங்கல் தொடர்பான விடயங்களை வாடிக்கையாளருக்கு அறிவிக்கும் பொருட்டு மாதாந்தம் மத்திய வைப்புத் திட்டத்தினால் வெளியிடப்படும். இது, வாடிக்கையாளர்களது கணக்குகளில் செலவுமீதி ஒன்று காணப்பட்டால் அல்லது கொடுக்கல்வாங்கல்கள் நிகழ்ந்திருந்தால் மாத்திரம் மாதாந்த அடிப்படையிலும் அவ்வாறு நிகழாத பட்சத்தில் காலாண்டு அடிப்படையிலும் மத்திய வைப்புத் திட்டத்தினால் வெளியிடப்படுகின்றது.

**சேவைக்கட்டணங்கள்**

மத்திய வைப்புத் திட்டம் பங்குபற்றுநர்கள், வாடிக்கையாளர்கள், பட்டியலிடப்பட்ட கம்பனிகள் என்பனவற்றுக்கு ஆற்றும் பணிகளுக்காக அவர்களிடமிருந்து அறவிடும் கட்டணம் சேவைக்கட்டணம் எனப்படும். இது பின்வருமாறு அறவிடப்படுகின்றது.

**1.வாடிக்கையாளர்களிடமிருந்து அறவிடப்படும் கட்டணம்:**

இரண்டாந்தரச் சந்தையில் ஒரு மில்லியன் ரூபாவரையுள்ள பங்குக் கைமாற்றல்களின் பெறுமதிகளுக்கு 0.03%. இரண்டாந்தரச் சந்தையில் ஒரு மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட பங்குக் கைமாற்றல்களின் பெறுமதிகளுக்கு 0.03%.

**2. நம்பிக்கைப்பொறுப்பு வங்கிகளிடமிருந்து அறவிடப்படும் கட்டணம்:**

பங்குபற்றுநர் மாதாந்தக் கட்டணம் [illegible] [illegible] கைமாற்றல்கள் ஒவ்வொன்றுக்கும் ரூபா 25.

**3.கம்பனிச் செயலாளர் அல்லது பதிவாளர்களிடமிருந்து அறவிடப்படும் கட்டணம்:**

ஒவ்வொரு இரண்டாந்தரப் பங்குக் கைமாற்றல்களுக்கும் ரூபா 15. மத்திய வைப்புத்திட்ட மீள் எடுப்பனவுகளுக்குரிய சான்றிதழ்களைக் குறிப்பிட்ட தினத்தில் சமர்ப்பிக்கத் தவறின், நாளொன்றுக்கான தாமதக் கட்டணம் ரூபா 100.

**சந்தைச்சுட்டி என்றால் என்ன?**

சந்தை ஒன்றின் விலைமட்டங்கள் சுட்டி ஒன்றின் மூலம் கணித்துக் காட்டப்படும். இதன் அடிப்படையில் பங்குச்சந்தையில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் காணப்படும் விலைமட்டங்களைச் சுட்டிகள் மூலம் அளவிட முடியும். யாதாயினும் ஒரு சந்தை தொடர்பாகப் பல்வேறு வகையான சுட்டிகளைக் கணித்துக் கொள்ள முடிந்த போதிலும், சந்தை (Market) என்றால் யாது? என்பதை விளங்கிக் கொள்வதற்கு முதலில் சந்தைக்கான சிறந்த வரைவிலக்கணத்தை வகுத்துக்கொள்வது இன்றியமையாதது. பங்குச்சந்தை என்பதற்கு 'பங்குச்சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ள அனைத்துக் கம்பனிகளினதும் தொகுதி' என்ற கருத்தும், 'பங்குச்சந்தையாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள கம்பனி மாதிரி எடுப்பு ஒன்றின் விலைமட்டங்களின் உள்ளடக்கம்' என்ற இன்னொரு கருத்துமாக இருபிரதான கருத்துக்கள் முக்கியத்துவம்பெற்று விளங்குகின்றன.

சுட்டிகளை நிர்மாணித்துக் கொள்ளத்தக்க பல சமன்பாடுகள் காணப்படுதல் சுட்டிகள் தொடர்பான முக்கிய ஓர் அம்சமாக இங்கு குறிப்பிடப்படுகிறது. இதன் அடிப்படையில் நிறையிட்ட சுட்டிகளைச் சமநிறையிட்ட சுட்டிகள் (Equally - Weight Indexes), விலை நிறையிட்ட சுட்டிகள் (Value Weighted Price Weighted Index), பெறுமானம் நிறையிட்ட சுட்டிகள் (Value Weighted Indexes) என வேறுபடுத்தலாம். இவ்வகைகளுள், இலங்கைப் பங்குச்சந்தை பெறுமானம் நிறையிட்ட சுட்டியைக் கையாளுவதால் இவ் அத்தியாயத்தில் அதைப்பற்றியும், அதன் நிர்வாகம் பற்றியும் கலந்துரையாடப்படுகிறது.

**பெறுமானம் நிறையிட்ட சுட்டி**

சுட்டிகளுள் உள்ளடக்கப்பட்டுள்ள ஒவ்வொரு கம்பனிக்கும் அக் கம்பனியின் சந்தை முதலாக்கற் (Market Capitalization) பெறுமதியை அடிப்படையாகக்கொண்டு, நிறையிடப்பட்டுத் தயாரிக்கப்படும் சுட்டி பெறுமானம் நிறையிட்ட சுட்டி எனப்படுகின்றது. கம்பனி ஒன்றினால் வழங்கப்பட்டுள்ள பங்குகளின் எண்ணிக்கையைப் பங்கு ஒன்றின் சந்தை விலையினால் பெருக்கிக்கொள்வதன் மூலம் குறித்த கம்பனியின் சந்தை முதலாக்கற் பெறுமதியைக் கணித்துக் கொள்ளலாம்.

இச்சுட்டியைத் தயாரிப்பதற்கு முதலில் ஏதாவது தினத்தை அல்லது ஆண்டை அடிப்படை ஆண்டாக (Base Period) தெரிவுசெய்து, அவ் அடிப்படை ஆண்டுச் சுட்டிக்குள் உள்ளடக்கப்படக்கூடிய அனைத்துக் கம்பனிகளினதும் சந்தைமுதலாக்கற் பெறுமதிகளின் கூட்டுத் தொகையைக் கணித்துக் கொள்ளவேண்டும். இக் கூட்டுத்தொகையை அடிப்படை ஆண்டுக் கணியமாகக்கொண்டு அதற்கு குறித்த ஒரு சுட்டிப்பெறுமதி வழங்கப்படும். பொதுவாக அவ் அடிப்படை ஆண்டுச் சுட்டியின் (Base Index) பெறுமானம் 100 ஆக எடுத்துக்கொள்ளப்படும். எனினும், எந்த ஒரு பெறுமானத்தையும் அடிப்பருவச் சுட்டியாக எடுத்துக்கொள்ளமுடியும்.

அடுத்து, எந்தவொரு வியாபாரத் தினத்திலும் இச்சுட்டிக்குள் உள்ளடக்கப்படும் அனைத்துக் கம்பனிகளினதும் சந்தை முதலாக்கற் பெறுமதியின் கூட்டுத்தொகையைத் தற்போதைய சுட்டிப் பெறுமானமாக எடுத்துக் கொள்ளவேண்டும். பின்வரும் முறையில் குறித்த வியாபாரத் தினத்திற்கான சுட்டியின் பெறுமானத்தைத் தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

சுட்டியின் பெறுமானம் = SPt Qt/ SPo Qo x அடிப்படை ஆண்டுச் சுட்டிப் பெறுமானம்

இங்கு,S - கூட்டுத் தொகைக்கான குறியீடு (சிக்மா)

Pt - தரப்பட்ட தினத்தில் பங்கு ஒன்றின் சந்தைவிலை

Qt - தரப்பட்ட தினத்தில் கம்பனி வழங்கிய பங்குகளின் எண்ணிக்கை

Po - அடிப்படை ஆண்டுக் காலத்தில் பங்கு ஒன்றின் சந்தைவிலை

Qo - அடிப்படை ஆண்டுக்காலத்தில் கம்பனி வழங்கியுள்ள பங்குகளின் எண்ணிக்கை.

உதாரணம்: 31 டிசம்பர் 2003 அடிப்படை ஆண்டாகவும், அத் தினத்தில் ஐந்து பங்குகளின் மொத்தச் சந்தைமுதலாக்கற் பெறுமதிகளின் கூட்டுத்தொகை 3,990 மில்லியன் ரூபாவாகவும் உள்ளது. இத் தொகை அடிப்படை ஆண்டுத் தினத்தின் மொத்தச் சந்தைப்பெறுமானமாக கருதப்படும். அடிப்படை ஆண்டுச்சுட்டி 100 ஆக எடுத்துக்கொள்ளப்பட்டது. இதற்கு ஓராண்டின் பின்னர் அதாவது, 31 டிசம்பர் 2004 இல் மொத்தச் சந்தை முதலாக்கற் பெறுமதிகளின் கூட்டுத்தொகை 4,449 மில்லியன் ரூபாவாக எடுத்துக்கொள்ளப்படின், தரப்பட்ட சுட்டியின் பெறுமானம் 111.50 ஆகக் கணித்துக்கொள்ளப்படும். அதாவது, 31 டிசம்பர் 2003 உடன் ஒப்பிடும்போது சார்பளவாகத் தரப்பட்ட சுட்டியின் பெறுமானம் 11.50 ஆக அதிகரித்துக் காணப்படுவதை அவதானிக்கமுடியும்.

இவ் உதாரணத்தில் கம்பனி வழங்கியுள்ள பங்குகளின் அளவில் எந்த மாற்றங்களும் நிகழவில்லை. எனினும், கம்பனி புதிய நிதிகளைத் திரட்டாமல் வழங்கிய பங்குகளின் அளவில் மாற்றங்கள் நிகழக்கூடிய சூழ்நிலைகளும் உருவாகலாம். அவ்வாறான நிலைமைகளில் அம் மாற்றங்கள் தொடர்பாக நிறையிடப்படுவதன் மூலம் சுட்டியில் தன்னியக்கச் சீராக்கம் ஒன்று நிகழமுடியும். கம்பனி ஒன்று உபகாரப் பங்கு வழங்குவதை இதற்குச் சிறந்த உதாரணமாகக் குறிப்பிடமுடியும். உபகாரப் பங்குவழங்கல் மூலம் பங்குகளின் அளவில் அதிகரிப்புக்கள் ஏற்பட்டபோதிலும், அதற்குச் சமனான போக்கில் பங்கு ஒன்றின் விலையும் குறைந்து செல்வதால் இதற்கெனச் சிறப்பான சீராக்கங்களை மேற்கொள்ளவேண்டியதில்லை. பங்குகள் பிரிபடுதல் (Stock Splits) தொடர்பாகவும் தன்னியக்கச் சீராக்கம் ஒன்று நிகழமுடியும். கம்பனி புதிய நிதியைத் திரட்டும் வகையில் பங்குகளின் அளவில் அதிகரிப்பு ஒன்று ஏற்படுமாயின், அடிப்படை ஆண்டுச் சந்தைமுதலாக்கற் பெறுமதிக்குச் சீராக்கம் ஒன்று மேற்கொள்ளப்படவேண்டிய தேவை ஏற்படலாம். உரிமைப் பங்குவழங்கல், புதிய பங்குவழங்கல் அல்லது புதிய பட்டியலிட்ட கம்பனிகள் தொடர்பாக அடிப்படை ஆண்டுச் சந்தைமுதலாக்கற் பெறுமதியில் ஓர் அதிகரிப்பும், பங்குச்சந்தையின் பட்டியலிலிருந்து கம்பனிகள் நீங்கிக்கொள்ளும்போது அடிப்படை ஆண்டுச் சந்தைமுதலாக்கற் பெறுமதியில் வீழ்ச்சியும் ஏற்படும். இவ்வாறு கம்பனிகளின் மூலதனத்தில் நிகழக்கூடிய மாற்றங்களைக் காட்டுவதற்கு அடிப்படை ஆண்டுப் பெறுமதியில் சீராக்கங்கள் மேற்கொள்ளவேண்டி ஏற்படுகின்றன. எனவே, அடிப்படை ஆண்டுப் பெறுமானம் நிலையான பெறுமானமாகக் காணப்படுவதில்லை என்பதை இதன் மூலம் புரிந்துகொள்ளமுடியும்.

**நிறைவுபெற்றன-**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பௌதிகவியல் - 01

ஆசிரியர்:-
சி.சிந்தனைச்செல்வன் (B.Sc) Dip in Edu, Dip in IT
கொ/ விவேகானந்தா கல்லூரி.


### கடந்தவார (28.04.09) தொடர்ச்சி.....

87. ஒரு புள்ளியில் தாக்கும் மூன்று விசைகளைப் படங்கள் காட்டுகின்றன. வரையப்பட்ட கோடுகள் விசைகளைப் பருமனிலும் திசையிலும் குறிக்கின்றன. எப்படம் சமநிலையைக் குறிக்கின்றது.




88. இலேசான கோல் ஒன்றைத் தாங்கும் சர்வசமான மூன்று விற்றராசுகளைப் படம் காட்டுகிறது. கோலுக்கு 60N சுமை இணைக்கப்பட்டுள்ளது. X,Z என்பன Yஇலிருந்து சம இடைத்தூரத்தில் உள்ளன. பின்வரும் வாசிப்புக்களில் சரியானது எது?


| | X | Y | Z |
|---|---|---|---|
| 1) | 60N | 60N | 60N |
| 2) | 20N | 60N | 20N |
| 3) | 20N | 20N | 20N |
| 4) | 10N | 40N | 10N |
| 5) | 0 | 60N | 0 |





89. கிடையான மேசை ஒன்றின் மீது 10kg திணிவுடைய ஒரு குற்றி வைக்கப்பட்டுள்ளது. மேசைக்கும் குற்றிக்கும் இடையிலுள்ள உராய்வுக்குணகம் 0.2 ஆகும். குற்றியின் மீது கிடையாக 15N விசை பிரயோகிக்கப்படுகிறது குற்றியில் தாக்கும் உராய்வு விசை,
1) 10N 2) 15N 3) 20N
4) 25N 5) 30N

90. ஒவ்வொன்றும் 60N பருமன்களையுடைய இரு விசைகள் $120^0$ கோணத்தில் தாக்குகின்றன. அவற்றின் விளையுள்,
1) 20N 2) 30N 3) 30 3N
4) 60N 5) 120N

91. நிலைக்குத்துடன் $30^0$, $60^0$ சாய்ந்துள்ள இரு இழைகளினால் ஒரு நிறை W தாங்கப்பட்டிருப்பதைப் படம் காட்டுகிறது. இழைகளிலுள்ள இழுவைகள் முறையே $T_1, T_2$ ஆகும். W சார்பாக இழைகளிலுள்ள இழுவைகளைக் காண்பதற்கு வரையப்பட வேண்டிய விசை முக்கோணம் எது?




92. ஒரு பொருள் O ஆனது மூன்று ஒருதள விசைகள் X,Y,Z இனால் சமநிலையில் பேணப்பட்டுள்ளது. Y இனது பருமன்,
1) X - Y
2) X tan θ
3) X Sin θ
4) X Cos θ
5) $X^2 + Z^2$




93. இணை ஒன்றின் திருப்பம் பற்றிய பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A. ஒரு காவிக்கணியமாகும்.
B. அத்தளத்திலுள்ள எந்தப்புள்ளி பற்றியும் மாறாப் பெறுமதி உடையது.
C. யூலில் அளக்கப்படும்.
இக்கூற்றுக்களில் சரியானவை,
1) A மட்டும். 2) B மட்டும். 3) C மட்டும்.
4) A,B மட்டும். 5) B,C மட்டும்.

94. வட்டப்பாதையில் இயங்கும் உடல் ஒன்றின் மீது தாக்கும் மையநாட்ட விசை,
A. உடலின் திணிவுக்கு நேர்விகிதசமன்.
B. உடலின் கதிக்கு நேர்விகிதசமன்.
C. பாதையின் ஆரைக்கு நேர்விகிதசமன்.
இவற்றுள் சரியானவை,
1) A மட்டும். 2) B மட்டும். 3) C மட்டும்.
4) A,B மட்டும். 5) A,B,C எல்லாம்.

95. $0.6 rads^{-1}$ கோணக்கதியுடனும் $3ms^{-1}$ மாறாக்கதியுடனும் ஓர் உடல் வட்டப்பாதையில் இயங்குகிறது. அவ்வுடலின் திணிவு 2kg அதில் தாக்கும் மையநாட்ட விசை,
1) பூச்சியம். 2) 3.6N 3) 10N
4) 10.8N 5) 30N


96. $9 rads^{-1}$ என்ற கோணக்கதியுடன் கிடையான வட்டப்பாதையில் செல்லும் ஒரு திணிவின் மீடிறன்,
1) 0.5Hz 2) 1.4Hz 3) 2.5Hz
4) 4Hz 5) 15Hz

97. ஒரு கிடையான வட்டத்தட்டு தனது மையத்தினூடாகச் செல்லும் நிலைக்குத்து அச்சுப் பற்றி சுழற்றப்படுகிறது. மையத்திலிருந்து r தூரத்தில் m திணிவுள்ள ஒரு சிறிய பொருள் வைக்கப்பட்டுள்ளது. பொருளானது அசையும் வரை படிப்படியாக தட்டின் சுழற்சி வீதம் அதிகரிக்கப்படுகிறது. ஒரு குறித்த கோண வேகம் ω இல் இது நிகழ்கிறது. இதைவிடக் குறைந்த கோணக்கதியில் தட்டு சுழற்றப்படும்போது பொருளானது இயங்கவேண்டும் எனின்,
A. r இனது பெறுமதியைக் கூட்டவேண்டும்.
B. பொருளுக்கும் தட்டுக்கும் இடையிலுள்ள உராய்வைக் குறைக்கவேண்டும்.
C. பொருளின் திணிவு m ஐக் குறைக்க வேண்டும்.
இவற்றுள் சரியானவை,
1) A மட்டும். 2) C மட்டும். 3) A,B மட்டும்.
4) B,C மட்டும். 5) A,B,C எல்லாம்.

98. சுழலும் வட்டமேசை ஒன்றில் உள்ள நுளம்பு வழுக்காது உள்ளது. இதற்குக்காரணம்,
1) உராய்வு மையநாட்ட விசையைச் சமப்படுத்துகிறது.
2) உராய்வு மையநாட்ட விசையை வழங்குகிறது.
3) நுளம்பு நிறை மையநாட்ட விசையைச் சமப்படுத்துகிறது.
4) நுளம்பு நிறை உராய்வு விசையை சமப்படுத்துகிறது.
5) நுளம்பு நிறை மையநாட்ட விசையை வழங்குகிறது.

99. r ஆரையுடைய வட்டப்பாதையில் m திணிவுடைய ஒரு பொருள் ஒரு கோணக்கதி ω உடன் இயங்குகிறது. அப்பொருளின் இயக்கசக்தி,
1) $m\omega^2r^2/2$ 2) $\omega^2r^2/2m$ 3) $m\omega r^2/2$
4) $m\omega^2r/2$ 5) $m\omega^2/2$

100. m திணிவுடைய ஒரு சிறியபொருள் R ஆரையுடைய நிலைக்குத்துவட்டப் பாதையில் சுழற்றப்படுகிறது. அதியுயர் புள்ளியில் இழையானது மட்டுமட்டாக நீட்டப்படும் நிலையில் உள்ளது. அதிஉயர் புள்ளியிலே பொருளின் கதி,
1) $(R/g^2)$ 2) R/g 3) gR
4) $\sqrt{gR}$ 5) 0




101. மேலே உள்ள வினாவில் அதி தாழ் புள்ளியில் பொருளின் கதி,
1) $\sqrt{gR}$ 2) $\sqrt{2gR}$ 3) $\sqrt{4gR}$
4) $\sqrt{5gR}$ 5) $\sqrt{6gR}$


102. இலேசான கோல் ஒன்று ஒரு முனையில் சுயாதீனமாகப் பொருத்தப்பட்டுள்ளது. அதன் மறுமுனைக்கு m திணிவுள்ள ஒரு சிறிய துணிக்கை இணைக்கப்பட்டுள்ளது. இத்துணிக்கையானது r ஆரையுடைய கிடைவட்டத்தில் சுழலுமாறு செய்யப்படுகிறது. துணிக்கையின் கோணவேகம் ω ஆகும். கோல் நிலைக்குத்துடன் ஆக்கும் கோணம் α எனின், tan α இன் பெறுமதி,
1) $\omega/g$ 2) $r\omega^2/g$ 3) $r^2\omega/g$
4) $m\omega r^2/g$ 5) $m\omega r^2$

103. படத்தில் காட்டியுள்ளதுபோல் அரைக்கோளம் ஒன்றின் (ஒப்பமான) உச்சியிலிருந்து வழுக்கும் m திணிவுடைய பொருள் கோளத்துடனான தொடுகையை இழக்கும் உயரம் யாது?
(கோளத்தின் ஆரை R)
1) 3R/2 2) 2R/3
3) 4R/3 4) 3R/5 5) 3R/7


104. $l$ நீளமுடைய இழை ஒன்றின் நுனிக்கு m திணிவுடைய ஒரு துணிக்கை இணைக்கப்பட்டு அது ஒரு மாறாக்கதி V உடன் இயங்குமாறு வட்டப்பாதையில் சுழற்றப்படுகிறது. இழையானது கைவிடப்படின் துணிக்கை இயங்கத்தொடங்கும் பாதை,
1) மையத்தை நோக்கி.
2) மையத்தை விலத்தி.
3) தொடலி வழியே வெளிநோக்கி.
4) கூடிய ஆரையுடைய வட்டப்பாதையில்.
5) அதே ஆரையுடைய வட்டப்பாதையில் தொடர்ந்து இயங்கும்.

105. ஓர் இழைக்கு இணைக்கப்பட்ட 2kg திணிவுடைய பொருள் ஒன்று 5m ஆரையுடைய கிடையான வட்டப்பாதையில் மாறாக்கோணக்கதியுடன் சுழல்கிறது. அதன் சுற்றல் காலம் 3s, $\pi^2 = 10$ எனின், இழையில் தாக்கும் இழுவை,
1) 20/9N 2) 40/9N 3) 400/9N
4) 800/9N 5) 1000/9N

106. ஒரு துணிக்கை இடஞ்சுழியாக ஒரு வட்டப்பாதையில் மாறாக்கதியுடன் இயங்குகிறது. துணிக்கை X இலிருந்து Y இற்கு செல்லும்போது அதன் வேகமாற்றத்தின் திசையைக் குறிப்பது பின்வருவனவற்றுள் எதுவாகும்?




107. O இலிருந்து m திணிவைத் தொங்க விடுவதன் மூலம் கூம்பூசல் ஒன்று ஆக்கப்பட்டு உள்ளது. ஊசல் குண்டானது மாறாக்கதியுடன் சுழல்கிறது. ஊசற்குண்டின் மீது தாக்கும் விசைகளைச் சரியான முறையில் வகை குறிக்கும் படம் எதுவாகும்?




தொடர்ச்சி அடுத்தவாரம் வெளிவரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org